## முருகாமலை

# அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்



# வரலாறு

## புனராவர்தன பிரதிஷ்டா

# மஹா கும்பாபிஷேகம்

## மலர் - 30-10-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஓம் முருகா"

முருகாமலை

# அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்



# மஹா கும்பாபிஷேகம்

- மலர் -

30-10-2013

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## விநாயகர் வணக்கம்

ஓம் எனும் பிரணவ ரூபநாயகா
உமையவளின் பாலனே விநாயகா
தேவர் மூவர் போற்றும் தேவநாயகா
தேவாதி தேவனே விநாயகா
வல்லினைகள் தீர்க்கும் பக்திநாயகா
வேண்டும் வரம் தந்திடும் விநாயகா
மௌனத்தின் முழுப் பொருளே நாயகா
முக்கண்ணன் மைந்தனே விநாயகா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
ஸ்ரீ முருகன் துணை!

# முருகாமலை
# அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தான
(அருள் ஆட்சியும் ஆலய வளர்ச்சியும்)

# வரலாறு


:- ஆசிரியர் -:

**பெரியையா செல்லையா**

அகில இலங்கை சமாதான நீதவான்

- பொருளாளர் -

(ஆலயத்தில் ஆரம்பகாலம் முதல்
இன்றுவரை கடந்த 20 வருடங்கள் )


**மஹா கும்பாபிஷேக மலர்**
**30-10-2013**


- வெளியீடு -
அருள்மிகு ஸ்ரீ முருகாமலை தேவஸ்தானம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

ஸ்ரீ முருகன் துணை!



" வந்த வினையும் வருகின்ற வல்லினையும்
கந்தனென்று சொல்ல கலங்கிடும் - முருகாமலை
முருகா என்று திருநீறு அனிவோருக்கு
மேலவராதே வினை "

## சமர்ப்பணம்

*முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலய வளர்ச்சிக்காக*
*ஆரம்ப காலம் முதல் இன்று வரை*
*பணிகள் புரிந்து தொண்டாற்றிய*
*அடியார்கள் அனைவருக்கும் இந்நூல்*
*சமர்ப்பணம்*

இந்த கும்பாபிஷேக மலர் வெளியீட்டு வைபவம், நூல் விற்பனை
என்பவற்றில் கிடைக்கப்பெறும் நிதி அனைத்தும்
ஆலய திருப்பணிக்கே வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அறங்காவலர் சேவா ஜோதி

## எஸ். முத்தையா

(அகில இலங்கை சமாதான நீதவான்)

அவர்களின்

# ஆசிச் செய்தி

கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கன் காலம் தொட்டு அருள் பாலித்து வரும் முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் நம் நாட்டின் பக்திச் சிறப்பும், மகிமையும், பெருமையும், தொன்மையும் மிக்கதாகத் திகழ்வதோடு சின்னக்கதிர்காமம் என்றும் பக்தர்களால் போற்றப்படுகின்றது. இந்து மதத்தின் அடையாளச் சின்னமாகவும் விளங்குகின்றது. இத்தகைய சிறப்பு மிக்க ஆலயத்தின் கும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கைகூடியுள்ளமை பெரும் மகிழ்ச்சிக்குரிய விடயமாகும்.

இவ்வாலயத்தை புனருத்தாபனம் செய்யும் திருப்பணிகள் ஆரம்பமானபொழுது பலரும் எமக்கு ஒத்துழைப்பை வழங்கியமையும், தொடர்ந்தும் வழங்கிக் கொண்டிருக்கின்றமையும் பாராட்டப்பட வேண்டிய விடயங்களாகும். அத்தோடு திருப்பணிக் குழுவினருடன் இணைந்து அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அனைவரையும் இச் சந்தர்ப்பத்திலே நன்றியுடன் நினைவிற் கொள்கின்றோம்.

மகா கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இந்த சிறப்பு மலர் வெளியிடப்படுகின்றமை காலத்திற் சிறந்தது என்பது எனது எண்ணம். ஆலயத்தின் வரலாறு எழுத்து வடிவில் பதிப்பு பெறுகின்றமை வரலாற்றுச் சான்றாக அமையும்.

இத்தகைய பெரும் முயற்சியில் ஈடுபட்ட பொருளாளர் திரு பெரியையா செல்லையா பாராட்டுக்குரியவர். அவர் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக முருகப் பெருமானுக்கு ஆற்றி வருகின்ற தொண்டு அளப்பரியது.

கும்பாபிஷேக தினத்தன்று அனைத்து கிரியைகளிலும் பங்கு பற்றி ஸ்ரீ முருகப் பெருமானின் பரிபூரணமான திருவருட்கடாட்சத்தை பெற்றிட வாழ்த்துகின்றேன்.

நன்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய உதவித் தூதுவர் மாண்புமிகு
# A. நடராஜன் அவர்களின்
# ஆசிச் செய்தி



இலங்கைத் திரு நாட்டில் மிகவும் பிரசித்தி பெற்ற அருள்மிகு ஆலயமாம் முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதை முன்னிட்டு இவ்வாலய பரிபாலன சபை பொருளாளர் திரு பெ.செல்லையா அவர்களினால் வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வாலயம் சின்னக் கதிர்காமம் எனப் போற்றப்படுவதாகவும், வரலாற்றுப் பெருமைகளுடன் சிறப்புற்று விளங்கியதாகவும் தெரிய வருகின்றது. இப் பிரதேச மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி வழிபடும் ஒரு வணக்கஸ்தலமாகத் திகழ்வது மத ஒற்றுமைக்கு ஒரு எடுத்துக்காட்டாகவும் அமைந்திருக்கின்றது என எண்ணுகின்றேன்.

இப் பிரதேச மக்களினது வழிபாட்டுத் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளை முன்னெடுத்து அதனை சிறப்புற நிறைவு செய்து மகா கும்பாபிஷேகத்தை நடாத்துகின்றமை வரையிலான அனைத்து செயற்பாடுகளிலும் தலைமைப் பொறுப்புடன் செயற்பட்ட ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு எஸ். முத்தயைா அவர்களும், ஆலய பரிபாலன சபை உறுப்பினர்களும், ஆலய திருப்பணிச் சபையினரும் பாராட்டுக்குரியவர்கள்.

முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயத்தின் மகா கும்பாபிஷேகம் மிகச் சிறப்புடன் நடைபெறவும், அதனையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலர் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு வரலாற்று ஆவணமாக திகழ்ந்திடவும், அனைத்து மக்களும் சாந்தியும் சமாதானமும் மிக்க சக வாழ்வினைப் பெற்றிடவும் எல்லாம் வல்ல எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

நன்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ටිකිරි කොබ්බෑකඩුව
டிகிரி கொப்பேகடுவ
TIKIRI KOBBEKADUWA
මධ්‍යම පළාතේ ආණ්ඩුකාරවර
மத்திய மாகாண ஆளுனர்
Governor Central Province

ආණ්ඩුකාර කාර්යාලය
ஆளுனர் அலுவலகம்
Governor's Office

තැ.පෙ. / அ.பெ. / P. O. Box. 6

මාළිගාව චතුරශ්‍රය
மாளிகாவ சதுரம்
Palace Square

මහනුවර / கண்டி / Kandy
ශ්‍රී ලංකාව / இலங்கை / Sri Lanka


201...............

2013. 10. 14

**මධ්‍යම පළාත් ආණ්ඩුකාරවර ගරු ටිකිරි කොබ්බෑකඩුව මැතිතුමාගේ සුභ පැතුම් පණිවිඩය**

අප මාතෘභූමිය වන ශ්‍රී ලංකාව ආරක්ෂා කරන්නාවූ දේවතා සමූහය අතර කතරගම ශ්‍රී ස්කන්ධකුමාර දෙවියන්ට සකල ශ්‍රී ලංකාවාසීන්ම අචල විශ්වාසයක් තබා ඇති බව අප හොඳින් දන්නා කරුණකි. මේ නිසා ජාති, ආගම් භේදයකින් තොරව කතරගම කඳ දෙවියන්ට පුද පූජා පැවැත්වීමට ශ්‍රී ලාංකීය ජන සමාජය සෑම විටම සැදී පැහැදී සිටිති. සිය ජීවිතයේ වැදගත් අවස්ථාවන්හිදී කතරගම දෙවියන්ගේ ආරක්ෂාව හා බැල්ම අපේක්ෂා කරමින් උන්වහන්සේ වෙත බාරහාර වීමට ලක්වාසීන් බෙහෙවින් උනන්දු වෙති. එපමණක් නොව උන්වහන්සේ වෙනුවෙන් මෙරට බොහෝ පූජනීය ස්ථාන වල මෙන්ම ප්‍රසිද්ධ ස්ථානයන්හි දේවස්ථාන ඉදි කර පුද පූජා පැවැත්වීමටත් බාර හාර වෙමින් ශ්‍රී කතරගම ස්කන්ධකුමාර දෙවියන්ගෙන් ආරක්ෂා යැදීමටත් ශ්‍රී ලංකේය ජනතාව දක්වන්නේ ඉමහත් කැමැත්තකි. මෙවැනි දේවස්ථාන බෞද්ධ පූජනීය ස්ථාන වලද ඉදි කිරීමෙන් ශ්‍රී ලංකීය ජන හදවත් තුළ කතරගම දෙවියන් කොතෙක් දුරට පැලපදියම් වී ඇත්ද යන්න සනාථ වේ. ශ්‍රී කතරගම දේවස්ථාන වල චාරිත්‍රයක් ලෙස නියමිත කාලසීමාවට පෙර සෑම දේවස්ථානයක්ම ප්‍රතිසංස්කරණය කිරීමට පියවර ගන්නා අතර එම කාර්යභාරය අවසානයේ සිදු කෙරෙන කොත් පැලදවීමේ උත්සව නොහොත් කුම්භාභිෂේකම් උත්සවය ඉතා වැදගත් ස්ථානයක් ගනී.

මහනුවර මහියංගන මාර්ගයේ ඉතා ශුද්ධ වූ ස්ථානයක් ලෙස සැලකෙන මොරගහමුල ප්‍රදේශයේ ඉදි කර ඇති ශ්‍රී කතරගම දේවස්ථානය මධ්‍යම පළාතේ ජනතාවගේ පමණක් නොව එම ස්ථානය පසු කර යන සෑම අයෙකුගේම විශේෂ අවධානයට යොමු වූ ස්ථානයකි. එමෙන්ම අතීතයේ සිට මෙම ස්ථානය දේව හාස්කම් සහිත ස්ථානයක් ලෙස අප රට ජනතාව තුළ බලවත් විශ්වාසයක් ඇත. ඒ නිසා මෙරට සෑම ජාතිකයකම වන්දනාකරුවන් හා මඟින් එම ස්ථානය පසු කර යන විට ශ්‍රී කතරගම දෙවියන්ගේ ආශිර්වාදය පැතීමට ද අමතක නොකරති. මොරගහමුල ශ්‍රී කතරගම දේවස්ථානයේ චාරිත්‍රානුකූල ප්‍රතිසංස්කරණයෙන් අනතුරුව මහා කොත් පැලදවීමේ කුම්භාභිෂේකම් උත්සවය 2013. 10. 30 වන දින සුභ මොහොතින් සිදු කිරීමට කටයුතු කිරීම කතරගම ශ්‍රී ස්කන්ධකුමාර දෙවියන් වෙත නමස්කාර කරන අප සැමගේ අතිශය සතුටට කරුණකි. අප රට ජනනායක අතිගරු ජනාධිපති මහින්ද රාජපක්ෂ මැතිතුමන් කුමන අවිවේකී රාජ්‍යතාන්ත්‍රික කටයුත්තක යෙදී සිටියද කතරගම ශ්‍රී ස්කන්ධකුමාර දෙවියන්ගේ ආශිර්වාදය නිරන්තරව ප්‍රාර්ථනා කළ අයෙකු බව අප හොඳින් දන්නා කරුණකි. එම නිසා එතුමන්ට තිස් වසරක කුරිරු යුද්ධයෙන් මේ රට ගලවා ගැනීමට ශ්‍රී කතරගම ස්කන්ධ කුමාර දෙවියන්ගේ ආශිර්වාදය නොඅඩුව ලැබුණු බව අපගේ විශ්වාසයයි.


නිල නිවස / உத்தியோக விடுதி / Office Residence 081 - 2232781
කොළඹ / கொழும்பு / Colombo 011 - 2731441
මැණික්දිවෙල / மெனிக்திவல / Menikdiwela 081 - 2575079




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

කොරගහමුල ශ්‍රී කතරගම දේවස්ථානයේ දේව ප්‍රතිමා තැන්පත් කිරීම දේව ප්‍රතිමා වල තෙල් ආලේප කිරීම සහ මහා කොත් පැළඳවීමේ උත්සවය යන ආගමික කරුණු මේ මස 28 සිට 30 දක්වා පැවැත්වීමට කටයුතු කිරීම මේ දිවයින ආරක්ෂා කරන්නාවූ ශ්‍රී කතරගම දෙවියන්ගේ ආශිර්වාදය අප රටට නොඅඩුව ලැබීමට බලවත් හේතුවක් වනු ඇතැයි මම විශ්වාස කරමි. එම උත්සවය දේවාල පරිපාලන සභාවේ සභාපති එස් මුත්තයියා මහතාගේ හා පරිපාලන සභාවේ අප්‍රතිහත ධෛර්යය හේතුවෙන් සාර්ථකව නිමා කිරීමට හැකිවනු ඇතැයි ද එම උත්සවය සර්වප්‍රකාරයෙන් සාර්ථක වේවායි ද ඒ සඳහා ශ්‍රී ස්කන්ධකුමාර දෙවියන්ගේ ආශිර්වාදය නොඅඩුව දේවාල පරිපාලන සභාවේ සභාපතිතුමා ඇතුළු සංවිධායක මණ්ඩලයටත් සකල ශ්‍රී ලංකාවාසීන්ටත් ලැබේවායි ද හෘත්පූර්වකව ප්‍රාර්ථනා කරමි.

විතිරි කොබ්බෑකඩුව
මධ්‍යම පළාත් ආණ්ඩුකාරවර

විතිරි කොබ්බෑකඩුව
මධ්‍යම පළාත් ආණ්ඩුකාරවර
මහනුවර.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

முருகாமலை
அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய
பிரதம குருவின்

# ஆசிச் செய்தி

கண்டி, மெதமஹாநுவர முருகாமலையில் அமைந்திருக்கும் ஸ்ரீ முருகன் ஆலயம் தன்நிகரில்லாத் தனிச் சிறப்புவாய்ந்த தொன்மையான திருத்தலமாகும். இங்கு கோயில் கொண்டிருக்கும் மூர்த்தியின் கீர்த்தியும், தலத்தின் சிறப்பும் தீர்த்தத்தின் மகிமையும், மென்மேலும் இத்திருத்தலம் வளர உறுதுணையாக அமைகின்றன. இவ்வாலயத்தின் மஹா கும்பாபிஷேக சிறப்பு கைங்கரியம் தங்கு தடையின்றி இனிது இடம்பெற எல்லாம் வல்ல ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருளை உளமாரத் தியானித்து ஸ்ரீ முருகப் பெருமானினது பாத கமலங்களைப் பணிந்து எனது மனமார்ந்த நல்லாசிகளைப் வழங்குகின்றேன்.

நன்றி..

ஆலய பிரமத குரு
**சிவ ஸ்ரீ இரா. ஷண்முக சுந்தரக் குருக்கள்**
ஸ்ரீ முருகன் ஆலயம்,
முருகாமலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





சிவாகம கிரியா சாகரம், கும்பாபிஷேக கிரியாமணி
மாத்தளை ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேவஸ்தான பிரதம சிவாச்சாரியார்
பிரம்ம ஸ்ரீ சு. சிவானந்தக்
குருக்களின்

# ஆசிச் செய்தி

இந்து சமுத்திரத்தின் எழில் கொஞ்சும் இலங்கை திருநாட்டில் மல்லிகை மணம் வீசும் மத்திய பிரதேசமாம் கண்டி மாநகரில் "மெதமஹாநுவர, முருகாமலையில்" எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீ முருகனின் கருணையால் 30-10-2013 அன்றைய தினம் பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகம் நடைபெற முருகாமலை முருகனின் ஆசி கிடைத்துள்ளதை இட்டு பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

உலகை உய்விக்க உதித்தது நம் இந்து சமயம், நம்மதம் சார்ந்த மொழியோ, பன்பாடோ இறைதொடர்புடனே பேசப்படுகின்றன. அந்த வகையில் "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது நம் இந்து மொழி மனிதன் மனிதனாக வாழ முக்கியத்துவம் என்ற வகையில் முதன்மை பெறுகிறது.

இறை வழிபாட்டு முறைமையைப் பலவாய்ப் பிரித்து, அனைவரும் இறைவனைத் தொழ அது வழி செய்கிறது. சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற சைவ நாற் பாதங்களை வகுத்ததோடு அல்லாமல் மேலும் அவற்றுள் பல பிரிவுகள் கண்டு எவரும் இறை இன்பத்தில் ஈடுபட இந்துமதம் காட்டிய வழி போல் வேறு எம்மதமும் காட்டியது இல்லையாம்.

மாத்தளை அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்பிகையின் பாதங்களை தொட்டு வணங்கி இக் கும்பாபிஷேகம் இனிதே நடைபெற கந்தனின் கருனை கிட்ட வேண்டுமென பிரார்த்திக்கின்றேன்.

நன்றி..

மாத்தளை, அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன்
தேவஸ்தான பிரதம குரு
"வேதாகம கிரியாமணி"
பிரம்மஸ்ரீ சு. சிவானந்தக் குருக்கள்.

"இன்பமே என்றாளும் துன்பமில்லை"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஆலய பரிபாலன சபை செயலாளர்

**திரு. பெரி.பழனியப்பன்**

அவர்களின்

# ஆசிச் செய்தி

நம் நாட்டின் சமாதான கேந்திரமாகவும், இன – மத ஒற்றுமைக்கு மத்திய புனிதஸ்தலமாகவும் திகழும் வரலாற்று புகழ்மிக்க முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதும், அதனோடிணைந்து இவ்வாலயம் தொடர்பான வரலாற்று சிறப்பு மலர் ஒன்றினை இவ்வாலய பரிபாலன சபைப் பொருளாளர் திரு பெ. செல்லையா அவர்கள் வெளியிடுகின்றமையும் மகிழ்ச்சிக்குரிய விடயங்களாகும். மிகவும் பழமை வாய்ந்த மலையக ஆலயங்களில் ஒன்றான இவ்வாலயத்தின் வரலாற்றை பக்தகோடிகளுக்கு தெரிவிப்பது உன்னதமான செயலாகும்.

அத்துடன் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்து மகா கும்பாபிஷேகத்தை நடாத்துவதில் பேரார்வமும், கரிசனையும் கொண்டு அர்ப்பணிப்போடு ஒத்துழைப்பு நல்கி பெரும்பணியாற்றிய ஆலயத் தலைவர் சேவாஜோதி எஸ்.முத்தையா அவர்களை வரலாறு மறக்க முடியாது. அன்புள்ளம்மிக்க அவரது தொண்டுகள் மகா கும்பாபிஷேகத்தை இனிதே நிறைவேற்றுவதற்கு தோன்றாத் துணையாக நிலவியது என்பதில் ஐயமில்லை.

எனவே எம்பெருமானின் பேரருளால் அன்பர் எஸ்.முத்தையா அவர்கள் நீடுழி வாழவும் நம் நாடும் மக்களும் சுபீட்சப் பெரு வாழ்வு பெற்று சமாதானமாகவும், சாந்தியுடனும் வாழ்வாங்கு வாழவும் ஸ்ரீ முருகப் பெருமானின் அருளும், ஆசியும் வேண்டி பிரார்த்திக்கின்றேன்.

நன்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



கண்டி தமிழ் வர்த்தக சங்கத் தலைவர்

## செ. பிரேம்ராஜ்குமார்

அவர்களின்

# ஆசிச் செய்தி

மெதமஹாநுவர, முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தான மஹா கும்பாபிஷேகம் நிகழ்வையொட்டி வெளியிடப்படுகின்ற சிறப்பு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன்.

கண்டிய இராசதானிய மன்னர்களின் வாசஸ்தலமாக விளங்கிய மெதமஹாநுவர, முருகாமலையில் அமைந்திருக்கும் இவ்வாலயம் வரலாற்று சிறப்பு மிக்கது. அத்துடன் இப் பிரதேசத்தைச் சூழவுள்ள பல்லாயிரக்கணக்கான இந்துக்கள் மட்டுமின்றி அனைத்து சமயத்தவர்களும் வழிபடும் வழிபாட்டுத் தலமாகவும் விளங்குகின்றது.

நல்ல சூழல் ஒரு மனிதனை உயர் நிலைக்கு இட்டுச் செல்லும் என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்துக்களின் புண்ணியதலங்கள் முன்னோர்களினால் நிர்மானிக்கப்பட்டுள்ளன. இவ்வாலயம் அமைந்தள்ள சூழல் இக் கோட்பாட்டின் உண்மைத் தன்மையினை எடுத்தியம்புகிறது.

இத்தகைய சிறப்பு மிக்க ஆலயத்தின் புனர்நிர்மாணப் பணிகளை பக்தி சிரத்தையுடன் மேற்கொண்ட ஆலய பரிபாலன சபைத் தலைவர் சேவா ஜோதி திரு எஸ் முத்தையா அவர்களும், பரிபாலன சபையின் ஏனைய அங்கத்தவர்களும் பாராட்டுக்குரியவர்கள்.

ஆலயத்தின் வரலாற்றை சிறப்பு மலரின் மூலம் சரித்திர ஆவணமாக்க ஆலய பரிபாலன சபை பொருளாளர் திரு பெ.செல்லையா அவர்கள் மேற்கொண்டுள்ள முயற்சி தலவரலாறு பற்றிய சிந்தனை மிக்கோருக்கு ஒரு நல்ல முன்னுதாரணமாகும்.

மஹா கும்பாபிஷேகப் பெருவிழாவும், சிறப்பு மலர் வெளியீடும் மிகச் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ முருகப் பெருமானை வேண்டுகின்றேன்.

நன்றி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# வாழ்த்துச் செய்தி

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெலாம்"

வரலாற்றுச் சிறப்பு மிக்க மொரகாமலை ஸ்ரீ முருகப் பெருமான் ஆலய மகா கும்பாபிஷேக விழாவினை முன்னிட்டு ஆலய வரலாறு அடங்கிய நூல் ஒன்றினை வெளியிடுவதனையிட்டு பெரும் ஆனந்தம் அடைகின்றேன். இந் நூல் சிறப்பாக வெளியிட எனது வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெருமை அடைகின்றேன்.

எழில் கொஞ்சும் மொரகாமலை அடிவாரத்திலும், இலங்கைத் திருநாட்டின் மிக நீளமான மகாவலிகங்கையின் இசைபாடலுடனும் அமைந்துள்ள ஸ்ரீ முருகப் பெருமான் ஆலயம் மிகச் சிறப்பு மிக்கது. நீண்ட இடைவேளைக்குப் பின் புனருத்தாபனம் செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெறுவது அனைவருக்கும் பேரானந்தம் தருகின்றது.

இன்றைய தினம் வெளியிடப்படும் இந்நூலானது இவ் ஆலயத்தின் வரலாறு, மற்றும் ஆரம்ப கால செயற்பாடுகள் என்பனவற்றை உள்ளடக்கியுள்ளது. இத் தகவல்களை சேகரித்து அதனை நூல் வடிவில் கொண்டு வரும் உயர்திரு செல்லையா அண்ணன் அவர்களுக்கு எமது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு அவரது அயரா முயற்சியினை பாராட்டுகின்றேன்.

தொடர்ந்து இவ்வாலயம் சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ முருகப் பெருமானின் அருள் வேண்டுவதோடு இவ் ஆலயம் சிறப்பாக அமைய உதவி புரிந்த அனைவருக்கும் எனது நன்றி கலந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

சாமஸ்ரீ தேசசக்தி
**அ. தட்சணாமூர்த்தி**
போஷகர் - இந்து இளைஞர் மன்றம் - கண்டி
ஸ்தாபக தலைவர் - கண்டி தமிழ்வர்த்தகர் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஆலய திருப்பணி சபைத் தலைவர்

## திரு. A. கனகராஜா

அவர்களின்

# ஆசிச் செய்தி

சரித்திர பிரசித்தி பெற்ற முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் இன்று நடைபெறுவதையிட்டு பேரானந்தம் அடைகின்றோம்.

மகிமை மிக்க இவ்வாலயம் கண்டிய மன்னர்கள் காலம் தொட்டு இன, மத ஒற்றுமையின் மத்திய நிலையமாகவும் திகழ்ந்துள்ளது. எனவே இவ்வாலயத்தைப் பற்றிய வரலாற்றை தெளிவுபடுத்துவதற்கு இவ்வாலயத்தின் பரிபாலன சபை பொருளாளர் திரு பெ. செல்லையா அவர்கள் சிறப்பு மலர் ஒன்றினை வெளியிட முன்வந்துள்ளமை பாராட்டுதலுக்குரிய செயலாகும்.

இன்றைய கும்பாபிஷேக நன்னாளன்று இச்சிறப்புமலர் வெளிவருவதும், கும்பாபிஷேகம் நடைபெறுவதும் மற்றுமோர் சிறப்பம்சமாகும்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க சின்னக் கதிர்காமம் என்றழைக்கப்படும் முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானத்தின் கும்பாபிஷேகம் பக்தி சிரத்தையுடன் நடைபெறவும், சிறப்பு மலர் சிறப்பாக வெளிவரவும், நாடும் மக்களும் அனைத்து நலன்களையும், வளங்களையும் பெற்று வாழ்ந்திட எல்லாம்வல்ல முருகப் பெருமானின் பேரருள் சூழிந்திட பிரார்த்திப்பதோடு, எனது நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

ஆலய திருப்பணிச் சபை செயலாளர்

## திரு. R. அன்பழகன்

அவர்களின்

# ஆசிச் செய்தி

மலையகத்தின் பழம்பெரும் ஆலயங்களில் ஒன்றான முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலய மகா கும்பாபிஷேகம் நடைபெறுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைவதோடு இதனை எட்டுவதற்கு அளப்பரிய பணியாற்றிய ஆலய பரிபாலன சபைத் தலைவர் திரு எஸ் முத்தையா உள்ளிட்ட ஆலய பரிபாலன சபையினருக்கு நமது பாராட்டுக்களும், நன்றிகளும் உரித்தாகட்டும்.

அத்துடன் பரிபாலன சபையின் பொருளாளர் திரு பெ.செல்லையா அவர்கள் இவ்வாலயத்தின் வரலாற்றினை பதிவு செய்யும் பெரும் முயற்சியில் ஈடுபட்டு அதனை சிறப்பு மலராக வெளியிட உள்ளமை மற்றுமொரு சிறப்பம்சமாகும். மகிமைகளுக்கும், பெருமைகளுக்கும் வரலாற்று ரீதியாக புகழ் பெற்ற இவ்வாலயம் தொடர்பான வரலாற்று சிறப்புக்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருப்பது இம் மலரின் முக்கியத்துவத்தை எமக்கு உணர்த்துகின்றது. எனவே அனைவருக்கும் பயன்மிக்க ஒரு ஆவணமாக இது விளங்கப் போகின்றது என்பதில் ஐயமில்லை.

இன்றைய மகா கும்பாபிஷேகம் நாட்டுக்கும், மக்களுக்கும் சுபீட்சம் சமாதானம் சகவாழ்வு என்பனவற்றை பெற்றுத் தந்திட எல்லாம்வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றேன்.

நன்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# நூலாசிரியரின் இதய வேற்கை

இன்று இவ்வாலயத்தின் மகா கும்பாபிஷேகம் நடைபெற ஸ்ரீ முருகப் பெருமானின் திருவருள் கிட்டியுள்ளது. இதற்கென அயராது அர்ப்பணிப்புடன் செயற்பட்ட ஆலய பரிபாலன சபைத் தலைவர் சமூகஜோதி திரு. எஸ். முத்தையா அவர்கள் அனைத்து புகழுக்கும், பாராட்டுக்கும் உரியவர். மற்றும் செயலாளர் திரு. P.பழனியப்பன் அவர்களுக்கும், திரு. யு.கனகராஜ் அவர்களுக்கும், திரு. சு.அன்பழகன் அவர்களுக்கும் மற்றும் சகல விதங்களிலும் ஒத்துழைப்பு நல்கிய அனைத்து நல்லிதயங்களுக்கும் முதற்கண் நன்றிகள்.

சின்னக் கதிர்காமம் எனப் பலராலும் வியந்து போற்றப்படும் முருகாமலை ஸ்ரீ முருகப் பெருமானின் ஆலயம் தொடர்பான உண்மையான வரலாற்றை பக்த அடியார்களுக்கு எடுத்தியம்ப வேண்டும் என்ற ஒரே நோக்கில் இவ் ஆலயம் பற்றிய சிறப்பு மலர் ஒன்றினை கும்பாபிஷேக தினத்தன்று வெளியிட முன்வந்தேன். பல்வேறு ஆய்வுகளின் மூலம் தெளிவாகியதையே இச் சிறப்பு நூல் விளக்குகின்றது. நீண்ட நெடும் காலமாக மக்களின் நம்பிக்கைக்கும், பக்திக்கும் எடுத்துக்காட்டாக மட்டுமில்லாமல் இன, மத, ஒற்றுமைக்கும் அதிமுக்கிய ஸ்தலமாக விளங்கும் இவ்வாலயத்தின் வரலாற்று நூல் ஒன்றினை கும்பாபிஷேக மலராக வெளியிடும் பாக்கியத்தை எனக்களித்த அன்பு நெஞ்சங்கள் அனைத்திற்கும் நன்றி தெரிவிப்பதோடு அனைத்தும் இனிதே நிறைவேற பேரருள் புரிகின்ற முருகாமலை ஸ்ரீ முருகப் பெருமானுக்கு எனது நன்றிகள்.
எம் பெருமானின் கருணைக் கடாட்சத்தால் மக்கள் அனைவரும் அன்பாய் இனிதே வாழவும், சமாதானம் நிலைக்கவும், சுபீட்சமான பெருவாழ்வு வாழ்ந்திடவும் பிரார்த்திக்கின்றேன்.

இந்து சமய மரபிலுள்ள கோட்பாடுகள் சமய சிந்தனைகள், வழிப்பாடுகள், சமய சடங்காசாரங்கள், ஐதீகங்கள், கர்ணபரம்பரை கதைகள் அதே போல் சில புராணம் கந்த புராணம் என பலவகை புராணங்கள் கொண்டது. சைவ சமயமும், இந்துமதமும் அகில இலங்கை என்ற நமது புண்ணிய பூமியில் யாழ்பாணத்தில் கந்தசுவாமி ஆலயமும், கதிர்காமத்தில் கந்தன் ஆலயமும், மலையகத்தில் முருகாமலை முருகன் ஆலயமும் பிரபலமடைந்த முருகன் ஆலயங்களாகும். முருகாமலை முருகன் ஆலயத்தை தவிர மற்றைய ஆலயங்களுக்குள்ள வரலாறு அநேக மக்கள் அறிந்துள்ளனர். ஆனால் முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் வரலாறு அதிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு தெரியாமல் இருக்கின்றது. அண்மையிலேயே அப்பகுதியில் உள்ளமக்கள் பலருக்கு தெரிந்துள்ளது. அதனால் இந்த கும்பாபிஷேக மலர் மூலமாக மக்கள் அனைவரும் தெரிந்துக்கொள்ளுவதற்காக என் மனதில் பல வருடங்களாக உதித்துக் கொண்டிருந்த இந்த விடையத்தை தெரிவிக்க இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்வதோடு, அனைத்து மக்களும் இந்த ஆலயத்தின் சக்தியையும் பெருமையையும் தன்னையே நம்பி வந்த பக்தர்களுக்கு பல வழிகளில் அருள் புரிந்த முருகனின் பல திருவிளையாடல்களில் ஒரு சிலவற்றை உதாரணங்களோடு சமர்ப்பித்துள்ளேன். நீங்களும் உண்மையாக, நேர்மையாக இருந்து பக்தியுடன் முருகாமலை முருகனிடம் வேண்டி கேளுங்கள் கட்டாயம் அருள்புரிவார்.

அடுத்து எனது கனவு எத்தனையோ ஆலயங்களில் கந்தசஷ்டி விரத நாட்களில் சரியாக கொண்டாட முடியாமல் தவிக்கிறார்கள். கந்த சஷ்ட்டி விரதம் என்பது முருகனுக்காகவே அமையப்பெற்ற விரத நாட்கள். அந்த விரத நாட்கள் இனிமேல் வரும் வருட திருவிழா நாட்களோடு கலந்து வர வேண்டும் என்பதற்காகவே ஒவ்வொரு வருடமும் ஐப்பசி மாதத்தில் வரும் ஏகாதசி விரத நாளில் திருவிழா ஆரம்பித்து கந்தசஷ்ட்டி விரத நாட்களோடு கலந்த பெரும் திருவிழாவாக அமைய இந்த கும்பாபிஷேக நாள் தெரிவு செய்தேன். இப்படி ஒரு கந்தசஷ்டி நாள்களோடு வரும் கும்பாபிஷேக நாட்கள் தேடிக்கொண்டிருந்த விடயம் ஆலய குருக்கள் பிரம்மஸ்ரீ சண்முக ஆனந்த குருக்களுக்கு நன்கு தெரியும். கந்தசஷ்ட்டி விரதம் முருகன் ஆலயத்தில் பெரும் விழாவாகவும், கும்ப விழாவாகவும், தேர் திருவிழாவாகவும் காவடிகள் நிறைந்ததாகவும், அன்னதானம், தீ மிதிப்பு என்ற முருகப்பெருமான் விரும்பும் அனைத்தும் நிறைந்த திருவிழா அமையப்பெற்ற ஆலயமாக வளர வேண்டும். அதுவே நாம் முருகனை நினைத்து அனுஷ்டிக்கும் கந்தசஷ்டி விரத பூஜைகள், அவை நமது முருகாமலையில் அமைந்துள்ளது; நாம் செய்துள்ள பெரும் பாக்கியமாக கருதுகின்றேன். கந்தசஷ்ட்டி விரதங்களை முருகன் ஆலயங்களில் செய்வது சாலச் சிறந்தது. அது இனி வரும் காலங்களில் கந்த சஷ்ட்டி விரதம் நடைபெறும் ஒரே ஆலயமாக முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானம் பக்தியும், சக்தியும், புகழும் நிறைந்த பெரும் ஆலயமாக வளர எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுகின்றேன்.

நன்றி..

அன்புடன்..
திரு. பெரியையா செல்லையா
(அகில இலங்கை சமாதானநீதிவான்)
நிர்வாக சபை பொருளாளர்
முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்.

இல.518, பளகொல்ல,
கெங்கல்ல.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Murugan Dhevasthanam - Moragahamula

## Trustee Board - 2013



Seated: Standing:

| Mr. P. Selliah | Mr. P. Palaniappan | Mr. S. Muthiah | Mr. R. Anbalagan | Mr. A. Kanagaraj |
|---|---|---|---|---|
| Treasurer | Hon. Secretary | Hon. President | Vice Secretary | Vice President |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகாமலை

அருள்மிகு ஸ்ரீ முருகன் தேவஸ்தான

இன்றைய

## நிர்வாக சபை அங்கத்தவர்கள்..

| | | |
|---|---|---|
| தலைவர் | : | திரு. S. முத்தையா J.P. |
| செயலாளர் | : | திரு. P. பழனியப்பன் |
| பொருளாளர் | : | திரு. P. செல்லையா J.P. |
| திருப்பணி தலைவர் | : | திரு. A. கனகராஜா |
| திருப்பணி செயலாளர் | : | திரு. R. அன்பழகன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



# பதிப்புரை

இறைவன் அங்கிங்கெனாதபடி, எங்கும் நிறைந்தவன். எனினும் ஆன்மாக்களுக்கு அருள்புரிய வேண்டி திருமேனிகளை இடமாகக் கொண்டு திருக்கோயில்களில் எழுந்தருளிக் காட்சியளிக்கின்றான். இறைவனை எங்கும் காணலாம் என்று கூறுவது முற்றிலும் உண்மை; எங்கும் நிறைந்த இறைவனை, எல்லா மக்களும் காணும் பக்குவமுடையவர்கள் அல்லர்.

எனவேதான் ஆலய வழிபாடு அவசியமாகின்றது. நம் முன்னோர்கள் ஆலயங்களை அமைத்ததோடு, அவற்றில் நித்திய, நைமித்திய கிரியைகளையும் சிறப்பாக நடாத்தினர். அத்தோடு ஆலயங்களை நடுவாகக் கொண்டு கலை, கலாசார, பாரம்பரியங்களையும் வளர்த்தனர்.

இவ்வாறு நம் நல்வாழ்விற்கு அடிநாதமான ஆலயங்களின் வரலாற்றினையும் அங்கு எழுந்தருளி அருளாட்சிபுரியும் இறைவனின் திருவருள் பெருமைகள் பற்றியும், இத்தெய்வீக திருப்பணிக்கு வித்திட்டு அரும்பணிகள் ஆற்றிவரும் திருப்பணி நாயகர்கள் பற்றியும் மெய்யடியார்கள் பற்றியும் ஆவணப் பதிவுகள் செய்யபடவேண்டியது அவசியமாகும்.

கண்டி மாவட்டத்தில், முருகாமலையில் எழுந்தருளி ஆட்சிபுரியும் ஸ்ரீ முருகப் பெருமானின் பெருமைகள் பற்றியும், ஆலயத்தின் வளர்ச்சியினையும், வரலாற்றினையும் திருவாளர் பெரியையா செல்லையா அவர்கள் எழுதிய இந் நூலை அச்சிடுவதில் பெருமகிழ்ச்சி அடைவதுடன், முருகாமலை தேவஸ்தான பரிபாலன சபையினருக்கும் தலைவர். திருவாளர். எஸ். முத்தையா அவர்களுக்கும், இந்நூலை எழுதி வெளியிடும் பொருளாளர் திரு. செல்லையா அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

அனைவருக்கும் எல்லாம் வல்ல முருகாமலை ஸ்ரீ முருகப்பெருமானின் திருவருட்கடாக்ஷம் கிடைப்பதாக..

நன்றி

**கிருஷ்ணன் விஜயபாஸ்கர்**
(உரிமையாளர்)
**VJ.**கிராபிக்ஸ் அன் பிரிண்டர்ஸ்,
பிரதான வீதி, மாத்தளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| மலரின் தலைப்பு | : | "முருகாமலை<br>அருள்மிகு ஸ்ரீ முருகன் ஆலய வரலாறு"<br>(கும்பாபிஷேக மலர்) |
| மலர் ஆசிரியர் | : | பெரியையா செல்லையா J.P<br>இல. 518, பளகொல்ல,<br>கென்கல்ல, கண்டி. |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| வெளியீடு நாள் | : | 30.10.2013 புதன்கிழமை<br>(ஆலய கும்பாபிஷேக தினம்) |
| அச்சுப்பதிவு | : | **VJ.**கிராபிக்ஸ் & பிரிண்டர்ஸ்,<br>மாத்தளை. |
| வெளியீடு | : | முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயம்,<br>முருகாமலை |
| விலை | : | 290/- ரூபாய் |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# வரலாறு

ஆரம்பம்..

சைவத்தொன்மையும் புகழும் வாய்ந்த இலங்கைத் திருநாட்டில் ஈசனுக்கு நெற்றிக்கண் அமைந்துள்ளது போல் மலையகம் எங்கும் விளங்குகின்றது சிவனின் திருப்பாதம் பதியப்பெற்ற சிவனொளிபாத மலையின் அருளாட்சியில் திளைக்கும் மலையகம் என்றும் ஆன்மீக ஒளி சுடரும் திவ்விய பூமியாகும்.

பண்டு தொட்டு இன்று வரையிலான மலையகத் தமிழ் இனக்குழுவானது இந்து, சைவ, வைஷ்ணவ சமயம் சார்ந்ததாகவே விளங்குகின்றது. மலையக மக்களை தனி ஒரு இனக்குழுவாக அடையாளப்படுத்துவதற்கும் இனம் காண்பதற்கும் இந்த சமயத்தன்மையும் பண்பாடும் பாரம்பரிய கலாசாரமும் விழுமியங்களுமே முக்கிய காரணிகளாக விளங்குகின்றன

வேதகாலத்தில் இயற்கையின் சூழ்நிலையிலேயே வழிபாட்டுக்குரிய இடங்கள் அமைந்தன. வேள்வித்தீயின் மூலம் வழிபாடு பெரிதும் நிகழ்ந்து வந்தது. நதிக்கரைகளிலும் மரச் சோலைகளிலும் தெய்வீக வணக்கம் நிகழ்ந்துள்ளன. அத்தகைய விருட்ஷங்கள் நாளடைவில் "ஸ்தல விருட்ஷங்கள்" ஆயின. பின்பு ஆகமங்களை அனுசரித்து ஆலயங்கள் கட்டுவிக்கப்பட்டன.

திருக்கோயிலின் அமைப்பை பெரியோர் பல்வேறு விதமாக விளக்கியுள்ளனர். இறைவன் ஒவ்வொருவருடைய உள்ளத்திலும் வீற்றிருக்கின்றான் என்பதை எல்லா மனிதர்களுமே அறியும் தன்மை கொண்டவர்கள் அல்ல. எனவே தான் அவர்களின் உடலாக ஆலய அமைப்பு அமைக்கப்பட்டுள்ளது. இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடம் ஆலயமாகும். கோயில் என்பது எல்லாவற்றுக்கும் மேலான "கோ" வாகிய அரசன் இறைவனது இல்லம் ஆகும். ஆலயம் ஆன்மா இறைவனில் லயப்படுகின்ற இடமாகும். உலகெங்கும் எரியுறு நீர் போல் தங்கி இருக்கின்ற இறைவன் பாலில் வெண்ணெய்போல் விளங்கி மக்களுக்கு அருள்புரிகின்ற இடம் திருக்கோயில்களாகும். ஆகம விதிப்படி அமைக்கப்பட்ட ஆலயங்கள் மனிதன் ஒருவன் தரையிலே நேராகப் படுத்திருப்பது போன்ற அமைப்பிலே காணப்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலய அமைப்பினை "ஹிருத்ய" "கமலப் பிரஸ்தாரம்" "சரீரப் பிஸ்தாரம்" என இருவகையாக ஆகமங்கள் கூறும் ஹிருதய பிரஸ்தாரமாக அமைக்கப்பட்டிருப்பது சிதம்பரமாகும். பெரும்பாலான ஆலயங்கள் "சரீரப் பிரஸ்தாரம்" என்ற வகையினை சேர்ந்தவையாகும். சரீரத்திலுள்ள ஆறு ஆதாரங்களான மூலாதாரம், ஸ்வாதிஸ்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்பவற்றை முறையே கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம், ஸ்னபன மண்டபம், அலங்கார மண்டபம், சபா மண்டபம் ஆகிய வடிவமாகக் கூறுவர்.

ஆலய அமைப்பில் பிரதானமான பகுதியாகக் கர்ப்பக்கிரகம் விளங்குகின்றது. அது சிரசினை குறிக்கும். அதனையடுத்து அமைவது அர்த்த மண்டபமாகும். அர்த்த மண்டபம் கழுத்தினைக் குறிக்கும். அதனை அடுத்து காணப்படுவது மகா மண்டபம். இது மார்பைக் குறிக்கும். அடுத்து தரிசன மண்டபம். இது வயிற்றைக் குறிக்கும் ஏனைய அலங்கார மண்டபமும் சபா மண்டபமும் கால்களைக் குறிக்கும். இராஜ கோபுரம் பாதங்களைக் குறிக்கும். இதுவரை கூறியவற்றில் இருந்து ஆலயம் எமது உடலமைப்பைப் போல் விளங்குகிறது என்பதை அறியலாம்.

நமது ஆலய அமைப்பினை பிரபஞ்சத்தின் மாதிரி உருவம் என்று ஒப்பிட்டும் கூறுவதுண்டு. பஞ்ச பிரகாரங்களை பஞ்ச பூதங்கள் என்றும், அங்கு நுண்ணிய பொருளாக இறைவன் உள்ளான் என்றும் கூறுவர். ஆலயம் என்னும் சின்னத்தின் மற்றொரு பகுதியாக இரதம் விளங்குகின்றது. இரதம் என்று உடலையும், அதில் வீற்றிருப்பவனே ஆத்மா, புத்தி தான்சாரதி, மனமே கடிவாளம், பஞ்சேந்திரியங்களே குதிரைகள், விஷீயங்களே அவை செல்லும் இடமாகும். கோயில்களில் இருக்கும் எல்லா கோபுரங்களை விட இராஜ கோபுரம் உயர்ந்ததாக இருக்கும் "ஸ்தூலலிங்கம்" என்று கூறப்படும் இராஜகோபுரம் பிரபஞ்சத்தில் உள்ள அனைத்தையும் விளக்கும் கோட்பாட்டை உருவகப்படுத்தி விளங்குகின்றது. இன்று மலையகத்தில் இவ்வாறு ஆகம விதிகளுக்கமைந்து இராஜகோபுரம், இரதோற்சவம் முதலியன கொண்ட பல ஆலயங்கள் விளங்குகின்றன. அண்டமெல்லாம் குடிகொண்டிருக்கும் தெய்வம் என்று சிறப்பாக இராஜகோபுரத்தை இயம்புவார்கள். கண்ணுக்கு அது தென்படும். அதையே தெய்வ சொரூபமாக எண்ணி வணங்குவது முறை. எட்ட இருப்பவர்களுக்கு கடவுளைப் பற்றிய ஞாபகமூட்டுவதற்கே அது அமைந்திருக்கின்றது.

இராஜகோபுரத்தின் அருகில் வந்து அதன் அமைப்பைக் கவனித்துப் பார்த்தால் சில அதிசயங்கள் தோன்றும். கணக்கற்ற வடிவங்கள் அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண் அமைக்கப்பெற்றிருக்கின்றன. அவைகளுக்கு மானுட வடிவங்களை ஏராளமாகக் காணலாம். அவர்களுடைய விதவிதமான வாழ்க்கை முறைகளும் அங்கு வடிவங்களில் விளக்கப்பெற்றிருக்கும். தேவர்களும் வேண்டியவாறு அதில் இடம்பெறுகின்றனர். தேவர்களின் செயல்களும் இராஜகோபுரத்தில் விளக்கப் பெற்றிருக்கின்றன. விலங்குகளும், பறவைகளும் ஏனைய சிற்றுயிர்களும் அதில் இடம்பெறுகின்றன.

பிரபஞ்ச அமைப்பில் இவை யாவுக்கும் இடமுண்டு என்பது இக்கோட்படாகும். சிற்றுயிர்கள், பேருயிர்கள், விலங்கினம், மக்கள், இனம், தேவர்கூட்டம் ஆகிய எல்லோருக்கும் பிரபஞ்சத்தில் இருக்கின்றார்கள். அண்டத்தினுள் இன்னதுதான் இருக்கிறது இன்னது தான் இல்லை என்று பாகுபடுத்த முடியாது. எல்லா படித்தரங்களிலும் உள்ள அனைத்தும் அங்கு இடம்பெறுகின்றது. இக்கோட்பாட்டை இராஜகோபுரம் உருவகப்படுத்தி விளக்குகிறது. இராஜகோபுரத்தின் வாயில்கள் பொதுவாக ஒற்றைப்படை எண்ணில் அமைந்திருக்கும் மூன்று, ஐந்து, ஏழு, ஒன்பது, பதினொன்று எண்ணில் இங்ஙனம் அதில் அமைந்துள்ள வாயில்கள் ஒன்றன்பின் ஒன்றாகப் பெருகிக்கொண்டே போகும். அத்தகைய வாயில்கள் தத்துவத்துக்கு விளக்கமாக அமைந்துள்ளன. மூன்று வாயில்கள் உள்ள இடத்து, ஜாக்கிரத, சொப்பன, சுஷீப்தி என்னும் மூன்று அவஸ்த்தைகளை அவை குறிக்கின்றன.

ஐந்து வாயில்கள் உள்ள இடத்து ஐம்பொறிகளை குறிக்கின்றன. ஏழு வாயில்கள் உள்ள இடத்து மனம், புத்தி எனும் இரண்டு தத்துவங்கள் சேர்க்கப் பெறுகின்றன. ஒன்பது வாயில்கள் உள்ள இடத்து சித்தம், அகங்காரம் எனும் இரண்டு தத்துவங்கள் மேலும் சேர்க்கப்பெறுகின்றன. இத்தனை வாயில்களுள் கோயிலினுள்ளே செல்வதற்கு தரைமட்டத்தில் உள்ள ஒரு வாயில்தான் உதவுகிறது. ஏனையவைகள் அங்கு அமைக்கப்பட்டிருந்தும் ஆலயத்தினுள் செல்வதற்கு பயன்படுவதில்லை. இதன் மூலம் ஒரு கருத்து நமக்குப் புகட்டப்படுகின்றது. புறக்காரணங்களும், அகக்காரணங்களும் பல நம்மிடத்து இருக்கின்றன. எனினும் கடவுள் நாட்டம் கொள்ளும்பொழுது மனது என்னும் ஒரு கணம்தான் நமக்குப் பெரிதும் பயன்படுகின்றது. ஏனைய காரணங்களையெல்லாம் இருக்கிறபடி வைத்துவிட்ட மனது இறைவனை நாடி உள்முகமாக போக வேண்டும் என்பது கோட்பாடு பஞ்சேந்திரியங்களையெல்லாம் கொண்டும், மனம், புத்தி முதலியவைகளை கொண்டும் புற உலகை அறிகிறோம். புற உலகை அறிகிற செயலை அப்படியே நிறுத்தி வைத்துவிட்டு மனத்தை துணையாகக் கொண்டு பரம்பொருளிடத்து உள்முகமாகப் பயணம் போக வேண்டும் என்னும் கோட்பாட்டை இராஜகோபுர வாயிலினுள் பண்ணும் பிரவேசம் விளக்கிக்காட்டுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" என்னும் வாக்கிற்கு அமைய நிர்மாணிக்கப்பட்டுள்ள இராஜகோபுரத்தில் அசதியான சில வடிவங்களையும் அமைத்தேயாக வேண்டும் என்றும், ஆகம விதிப்படி அப்படி இருக்கிறது என்றும் கூறுவார்கள்.

இயற்கையில் உள்ளவற்றை எல்லாம் அதன் மூலம் விளக்க வேண்டும் என்றும் இயற்கையில் நலம், கேடு ஆகிய எல்லாம் இருக்கின்றது என்றும் சுட்டிக்காட்டவே இவ்வாறு அமைக்கப்படுகின்றது என்பதை விளக்குவர். நல்லனவற்றை ஏற்று மறைக்க வேண்டியதை மறைத்து தவிர்க்க வேண்டியவற்றை தவிர்த்து வாழ வேண்டும் என்பதற்கு இக்கோபுர அமைப்பு எடுத்துக்காட்டு என்பர். ராஜ கோபுரத்தை கடந்து உள்ளே சென்றதும் முதலில் கொடிமரம் காணப்படுகின்றது. கொடிக்கம்பம் துவஜஸ்தம்பம் எனவும் அழைக்கப்படுகின்றது. இதனை வணங்குவதன் மூலம் அந்தராத்மா நிலையினுக்கு தத்துவாத்மா நிலை கிடைக்கப்பெறுகின்றது. கொடிமரம் மனிதனின் முள்ளந்தண்டெலும்பினை உணர்த்துகின்றது. எமது முள்ளந்தண்டெலும்பினை அடிப்பாகம் குண்டலனி சக்தியின் இருப்பிடமாகும். கொடிமரத்திலுள்ள முப்பத்திரண்டு வளையங்களும் முள்ளந்தண்டிலுள்ள முப்பத்திரண்டு எலும்புகளையும், கொடிமரக் கயிறுகள் இடைகலை, பிங்கலை என்னும் நாடிகளையும் குறிக்கின்றன. இவற்றின் வழியே யோகம் பயிலும் போது ஆன்மா பேரானந்தத்தை எய்துகிறது. எண்ணங்களின் பிறப்பிடமாக விளங்கும் "தொப்புள்" எனும் ஸ்தாபனத்தில் நந்தியை பிரதிஸ்டை செய்யும் போது எண்ணங்களை அடக்கி மனதினை தூய்மைப்படுத்த வேண்டும் என்பது உணர்த்தப்படுகின்றது. எம்மில் மறைந்திருக்கும் தெய்வீக சக்தியையே குண்டலினி சக்தி என்கின்றோம். அதற்கு சிறிது மேலாக கணபதியின் இருப்பிடமான மூலாதாரம் நாளிதழ் கமல வடிவில் அமைந்துள்ளது. கொடி மரத்தின் அடியில் இருக்கும் கணபதி எமது மூலாதாரத்தில் அருவ நிலையில் இருக்கும் கணபதியைக் குறிக்கும். இக்கணபதியையே "மூலாதார கணபதி" என்கின்றோம். கொடி மரத்திலே கொடிச்சீலையும், தர்க்கப்பைக்கயிறும் சுற்றப்பட்டிருக்கும். கொடிமரமானது சிவத்தையும் நந்தி எழுதப்பட்ட சீலை ஆன்மாவையும், தர்க்கப்பைக் கயிறு பாசத்தையும் குறிக்கின்றது. கொடிமரத்தை ஆதாரமாகக் கொண்டு சீலை இருப்பது போல் சிவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா இருக்கின்றது.

பாசம் சிவத்தை சாராமல் ஆன்மாவை சாரும் என்பதைக் கொடிச்சீலையுடன் இணைக்கப்பட்டுள்ள தர்ப்பைக் கயிறு உணர்த்துகிறது. பாசம் வலி இழந்த நிலையில் ஆன்மா சிவத்தைச் சாரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடிமரத்தை அடுத்துக் காணப்படுவது பலிபீடம் ஆகும். இது பத்திரலிங்கம் எனவும் பொருள்படும். பலிபீடம் என்பது பாசம் ஒடுங்கும் இடமாகும். இதனை வணங்குவதால் ஆசைகள் பலி கொடுக்கப்படுகின்றன. ஆன்மா புனித நிலையை அடைகிறது. இந்த அந்தராத்மா நிலையை உணர்த்துவதே பலிபீடமாகும். ஆறுவகை உட்பகையும் இதயத்திலிருந்து நீக்கப்பட வேண்டும் என்பதை பலிபீடம் உணர்த்துகிறது. பாசம் நீங்கிப் பக்குவம் அடைந்த ஆன்மாவை நந்தி குறிக்கிறது. இது பலிபீடத்திற்கு அப்பால் அமைந்திருக்கும். பாசத்திலிருந்து விடுபட்ட ஆன்மாக்கள் பதியைச் சாரும் என்பதைச் சுட்டும் வகையில் நந்தி எப்பொழுதும் மூலமூர்த்தியை நோக்கியவாறு அமைக்கப்பட்டிருக்கும். சிவன் கோயிலில் இடபம், விநாயகப் பெருமானுடைய ஆலயத்தில் பெருச்சாளி ஆகவும் சுப்பிரமணியப் பெருமானுடைய ஆலயத்தில் மயிலாகவும், மகாவிஸ்ணு கோயிலில் கருடனாகவும், அம்பிகை கோயிலில் சிங்கமாகவும் நந்திகள் காணப்படுகின்றன.

வாகனம் எதுவாயினும் அது ஜீவாத்மாவைக் குறிக்கும். மூலப் பொருளாகிய கடவுளைப் பார்த்த வண்ணமாய் வாகனம் அமைந்திருக்கிறது. கடவுளை சென்றடைவதற்கு சர்வகாலமும் மனது கடவுள் நாட்டத்திலேயே இருக்க வேண்டும் என்னும் கோட்பாட்டை வாகனம் விளக்கிக்கொண்டிருக்கிறது. சுற்றி வருகின்ற பக்தன் ஆலயத்தின் உள்ளிருக்கும் தெய்வத்தையும் அதைப் பார்த்த வண்ணமாயிருக்கும் வாகனத்தையும் சேர்த்துவைத்து வலம் வருகின்றான். குறுக்கே நுழைவது முறையன்று வழிபடுகின்ற அனைவருக்கும் வழிபாட்டுக்கு ஒத்தாசை செய்ய வேண்டும். இடைஞ்சல் செய்யலாகாது என்பது அதன் கருத்து. பிறருக்கு இடைஞ்சல் செய்கின்ற போது கடவுள் வழிபாட்டுக்குப் புறம்பாய் விடுகிறான். பிறர் வழிபாட்டுக்கு வேண்டிய வசதிகள் எல்லாம் செய்து வைக்கும் அளவு ஒருவன் தானே வழிபாட்டில் முன்னேற்றம் அடைகிறான். பிறரைப் புறக்கணித்து எவரும் முன்னேற்றமடைய முடியாது.

பிறருக்கு பணிவிடை செய்து யாரும் முன்னேற்றம் அடையலாம் என்ற இக்கோட்பாடு ஆலய வழிபாட்டில் அடங்கியிருக்கிறது. வழிபாட்டில் மூல விக்கிரகம் அமைந்திருக்குமிடம் கருவறையாகும். பிரம்ம கபால வடிவில் கர்ப்பக்கிரகம் அல்லது மூலஸ்தானத்தை அமைப்பது முறை. அதனை மூலஸ்தானம் எனவும் அழைப்பர். அதன் மேலே அமையும் பகுதி விமானம், தூபி போன்ற பெயர்களினால் அழைக்கப்படுகிறது. மகா மண்டபத்தில் தெற்கு நோக்கி தேவி மூர்த்தமும், தரிசன மண்டபத்தில் நடராஜ மூர்த்தமும் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலைச் சுற்றி மதில் அமைக்கப்பட்டிருக்கும் மதிலுக்கும், பிரதான ஆலயத்திற்குமிடையேயுள்ள இடைவெளியை உள்வீதி அல்லது உட்பிரகாரம் என்றழைப்பர். மதிலுக்கும் வெளியே காணப்படுவதை வெளிவீதி அல்லது வெளிப்பிரகாரம் என்பர். உட்பிரகாரத்தில் ஏனைய பரிவார தெய்வங்களுக்கான சந்நிதிகள் அமைக்கப்பட்டிருக்கும். அநேகமான ஆலயங்களில் வசதிற்கேற்றபடி ஒரு வீதியையோ அல்லது பல வீதிகளையோ அமைத்திருப்பர். நாம் இறைவனை வலம் வரவும்அங்கதப்பிரதட்சணம் செய்யவும் திருவிழாக்களின்போது சுவாமி எழுந்தருளி வீதியுலா வரவும் வீதிகள் பயன்படுத்தப்பட்டிருக்கின்றன. வெளி வீதிகளில் மடங்களும் அமைந்திருக்கும்.

கோயிலைச் சுற்றி நடக்கும் போது உள்ளிருக்கும் தெய்வம் தனது வலது கை பக்கம் இருக்கும்படி பார்த்துக்கொள்கிறான் பக்தன். அதுவே வலம் வருதல் என்பதன் பொருளாகும். வலம் வருதல் பிரணாயாமத்திற்கு தகுதியுடையதாகின்றது. மனதகத்து உண்டாகும் மாறுதலுக்கு ஏற்ப சுவாசிக்கின்ற வாயுவில் வேறுபாடு உண்டாகிறது. கீழான மனப்பான்மை உடையவர்களின் சுவாசத்தின் போக்குவரத்தில் தடுமாற்றம் உண்டாகும். மேலான மனப்பான்மை உடையவருக்கு சுவாசத்தின் போக்குவரத்து முறையாக நிகழ்கிறது. தங்குதடை இன்றி அமைதியாக வலம் வருவது போன்று சுவாசமும் ஒழுங்காக நிகழ்கின்றது. சூக்சுமமாக உடலின் கண் நிகழும் நிகழ்ச்சி பிரணாயமம் வலம் வருதல் என்னும் சரீரத்தின் ஸ்தூலமான செயல் அதன் புறச்சின்னமாகின்றது.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் ஆலயத்தை பற்றிக் கூறும் போது ஆலயமானது எங்கும் வியாபகரமாய் மறைந்து இருக்கும் கடவுள் தம்மை ஆன்மாக்கள் வழிப்பட்டு உய்யும் பொருட்டு சாந்தியத்தியராய் எழுந்தருளியிருக்கும் இடமாம் என்று குறிப்பிட்டுள்ளார். கோவிலைப் பற்றிக் குறிக்கும் சொற்கள் பல உண்டு. இவற்றுள் ஆலயம் என்பது ஒன்று. அதாவது ஆன்மா லயப்படும் இடம் என்று இதற்கு அர்த்தம் கொள்ளலாம் என்று பகன்றார். ஆத்மா லயப்படும் இடமாக ஆலயம் விளங்குவதோடு ஆன்மீக உணர்வின் வித்தாக அமைகின்றன. திருக்கோயில்களில் நடாத்தப்படும் பூஜைகள், ஆராதனைகள், மந்திர ஒலிகள், கிரியைகள், யாகங்கள் என்பன பக்தியை வளர்ப்பதோடு மனித மேம்பாட்டிற்கும் அருள்புரிவனவாக உள்ளன. தெய்வீகம், சாந்தம், தூய்மை, அன்பு நிறைந்து அமைதி கொண்ட ஆலயங்களில் வழிபடுவதால் மனம் தூய்மையடைகிறது. ஆலய வழிபாட்டின் மூலம் ஆன்ம ஈடேற்றம் அடைய முடியும். உடல் ஆலயம் உடம்பினுள்ளேயிருக்கும் உயிர் இறைவன் இந்த உயர்ந்த நிலையினை எய்த முடியாதவர்கள் உருவத்தில் இறைவனை தரிசித்து வழிபட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவுருவ வழிபாடு அமைகிறது. தம் ஞானத்தால் இறைவனைக் காணவும், கருதவும் அரிதாக உள்ளவர்கள் உருவத்திருமேனியில் வழிபாடு செய்தலே திருவுருவ வழிபாடாக அமையும். திருவுருவங்களை மூர்த்தி, விக்கிரகம், விம்பம், பிரதிமைப் பேரம் முதலிய பெயர்களாலும் சுட்டுவர்.

சிவபெருமானின் மூவகைத் திருமேனிகளில் அருவுருவத் திருமேனியே "லிங்கம்" எனப்படும். இது சிவனுக்கு மட்டுமே உரியதால் சிவலிங்கம் எனப்படும். சுயம்புலிங்கம் தானே தோன்றியது. ஐதலிங்கம் தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. காணலிங்கம் விநாயகர் முதலிய கணர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. ஆரிடலிங்கம் இருடிகளால் ஸ்தாபிக்கப்பட்டது. மானுடலிங்கம் மனிதர்களால் ஸ்தாபிக்கப்பட்டது. இறைவனின் ஐந்தொழில்களையும் நடராஜ வடிவம் எமக்கு உணர்த்துகின்றது.

சாக்தம், வைணவம், காணாபத்தியம், கௌமாரம், சௌரம் ஆகிய சமயங்களின் தெய்வக் கடவுள்களே சிவாலயங்களில் பரிவார தெய்வங்களாக அமைந்திருப்பதைக் காண்கின்றோம். ஆலயத்தின் மகாமண்டபம் அல்லது வெளிமண்டப வாயிலின் இருமருங்கும் சூரியனும் சந்திரனும் இறைவனை நோக்கியவாறு பரிவார தெய்வங்களாக நிறுவப்பட்டிருக்கும். ஆலயங்களில் பலவிதமான திருவிழாக்கள் நடைபெறுகின்றன. இவைகளினால் மனித சமுதாயம் பக்தியினை வளர்ப்பதோடு பண்பாட்டினையும், நல்லொழுக்கம், கலாசாரம் முதலிய விழுமியங்களையும் வளர்த்துக்கொள்ள இவை துணைபுரிகின்றன. ஆலயங்களில் புராண படலம், திருமுறைகள் முற்றோதல், சமயம் சார்ந்த கலை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், கதாபிரசங்கங்கள், பட்டிமன்றங்கள் பண்ணிசை என்பனவற்றை நடாத்துவதால் சமய அறிவினை மட்டுமின்றி நன்நெறியால் வாழவும் வழிபிறக்கின்றது.

ஆலயங்களில் நடைபெறும் விழாக்களில் இரதோற்சவம் எனப்படும் தேர்த்திருவிழா முக்கியமானதாகும். படைத்தல், காத்தல், அழித்தல். அருளல், மறைத்தல் முதலிய ஐந்தொழில்களையும் விளக்குவனவாகவே மகோற்சவம் அமைந்துள்ளது. இதிகாச புராணங்கள், யாகம், அல்லது வேள்வி, தவம், தீர்த்தம், தோத்திரம், தியானம், விரதம், பூசை என்பன பற்றி ஆதாரத்துடன் விளக்கியுள்ளன. அஸ்வமேத யாகத்தை நம்காலத்தில் இலங்கையின் முதல் இந்து சமய கலாசார அமைச்சர் மாண்புமிகு செல்லையா இராஜதுரை அவர்கள் நடாத்தியதை அறிவோம். இதுபோல் ஆலயங்கள் பலவற்றில் பெரியோர்கள், யாகங்கள் பலவற்றை செய்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரமன், விஸ்ணு, உருத்திரன் ஆகிய தேவர்கள் வேள்விகள் நிகழ்த்தியதாக பாரதத்தில் குறிப்புகள் உண்டு. தருமர் ராஜசூய யாகம் செய்துள்ளார். யாகம் வேள்வி என்பனவற்றை விட தவம் பொருட் செலவற்றது. மகாபாரதத்தில் யாகங்களும், தவமும் இடம்பெற்றமையினை அறிகின்றோம். தவம் வலிமை மிக்கது., கடுமையானது, திருமால் தவம் இயற்றி சக்கரம் பெற்றமையினையும், அருச்சுனன் பாசுபதம் பெற்றமையினையும் பிற்காலத்தில் முனிவர்கள் தவம் செய்து வல்லமை பெற்று விளங்கியதையும் இதிகாச புராணங்கள் விளக்குகின்றன.

"கலியுகத்தில்" தவம் ஒன்றே என்னை அடையச் சிறந்த வழி என சிவபிரான் திருவாய் மலர்ந்தாக புராணம் கூறுகின்றது.

மூர்த்தி, தலம், தீர்த்த வழிபாடு குறித்து இந்து சமய நூல்கள் சிறப்பித்து விளக்கியுள்ளன. தெய்வீகத்தன்மை வாய்ந்ததும், புண்ணியங்கள் மிக்கதுமான தீர்த்தங்களில் ஸ்நானம் செய்து பாவங்கள் நீங்கப்பெற்று நற்பேற்றினை அடையலாம். மனம், வாக்கு, காயம் இம்மூன்றை தூய்மைப்படுத்தி புலன்களை அடக்கி தீர்த்த யாத்திரை செய்து அங்குள்ள தீர்த்தத்தில் நீராடி உரிய தெய்வங்களை வழிபடுவதன் மூலம் இன்மை, மறுமை, இன்பம் எல்லாம் பெறலாம். தீர்த்தங்களில் நீராடுவதன் மூலம் தீராத பிணிகள் தீரும்.

தோத்திர வழிபாடு அன்புமயமானதாகவும் பக்திப் பெருக்கெடுத்தனவாகவும் இறைவனிடம் மன்றாட்டமாக வேண்டி கருணையினைப் பெறவும் இறையருளில் திளைக்கவும் செய்கிறது. வழிப்பாட்டு முறைகளில் தியானம் தலைசிறந்த சாதனமாகும். கூர்மபுராணம், பாரதம் என்பன தியானத்தின் சிறப்பினைக் கூறுகின்றன.

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் விரதமாவது மனம், பொறி வழிபோகாது நிற்றற் பொருட்டு உணவை விடுத்தேனும் சுருக்கியேனும் மனம், வாக்கு, காயம் என்னும் மூன்றினாலும் கடவுளை மெய்யன்புடன் விசேடமாக வழிபடுதல் என்று விரதத்தை பற்றி கூறியுள்ளார். விரதத்திலும் தவத்தின் சாயல் உள்ளது. புராணங்கள், விரதங்கள் பற்றி குறிப்பிடும் இடங்களில் விரதங்களில் மேற்கொள்ள வேண்டிய நியமங்கள், வழிபட வேண்டிய முறைகள், விரதங்களின் பெருமை முதலியவற்றை கூறுவதோடு விரதங்களினால் ஏற்படும் பயன்கள் பற்றியும் கூறியுள்ளன. விரத மான்மியம், விரத சிந்தாமணி கணேசபுராணம் போன்ற நூல்கள் விரதங்கள் பற்றி விளக்கிக் கூறியுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காரடை நோன்பு என்னும் விரதத்தை, சாவித்திரி தன் கணவன் சத்தியவானின் நீண்ட ஆயுளை வேண்டி மேற்கொண்டாள். பங்குனி மாதத்தில் சுமங்கலிப் பெண்கள் இந்நோன்பினை நோற்கின்றனர். ஸ்ரீ வரலக்ஸ்மி விரதம், கேதார கௌரி விரதம், உமாமகேஸ்வர விரதம், கார்த்திகை விரதம், ஏகாதசி விரதம், நவராத்திரி விரதம், புரட்டாதி சனி விரதம் ஆகிய விரதங்களை இந்துக்கள் அனுஸ்டிக்கின்றனர். இடர் நிறைந்த மானுட வாழ்வில் இறைவன் அருளினைப் பெற்றுக் கடைத்தேற விரதங்கள் நோன்புகள் இவ்வாறாக அனுஸ்டிக்கப்படுகின்றது. பிதிர் கடனுக்காகவும் விரதம் அனுஸ்டிக்கப்படுவது இந்து சமய கலாசாரமாகும். தாயை இழந்தவர்கள் சித்திரா பூரணை பௌர்ணமியிலும் தந்தைக்காக அமாவாசை நாளில் விரதமிருப்பது நம்மவர் மரபாகும்.

திருக்கோயில்களில் பூசை, அர்ச்சனை, ஆராதனை என்பன நடைபெறுகின்றன. யாகம் முதலிய வழிபாட்டு நெறிகளில் சிறந்த அம்சங்களை உறுப்புகளாகக் கொண்டு பூசை என்னும் வழிபாட்டு முறை உருவாகியதென பெரியோர் பகர்வர். சிவாகம நெறியின்றி, மக்கள் தத்தமது பிரதேச அமைப்பிற்கு ஏற்பவும், இனக்குழு தனித்துவ பண்பாட்டிற்கு ஒப்பவும், கிராமிய கலாசாரத்திற்கும் நம்பிக்கைகளுக்கும் அமையவும், தொழில்முறைக்கமையவும் கிராமிய தெய்வங்களை வழிபடுவதுடன் கிராமிய பூசை முறைகளையும் நடத்துகின்றனர்.

இவ்விரு வகை வழிபாட்டு நெறிகளும் மலையகத்திலும் மற்ற மாவட்டத்திலும் சிறப்புற நடைபெறுவதும் பக்திநெறி தழைத்து இந்து சமயம் வளர்ந்தோங்குவதையும் நாம் காணக்கூடியதாக உள்ளது.

சித்திரையில் வரும் சதுர்த்தியில் விநாயகர் விரதத்தையும் சஸ்டி, கார்த்திகை தினங்களில் முருகப் பெருமானின் விரதத்தையும், பிரதோசம், சோமவாரம் ஆகிய தினங்களில் சிவ விரதத்தையும் முறைப்படி இருந்து இம்மூர்த்திகளின் அருளைப் பெறலாம். சித்திர பரணி பைரவ விரத தினம் ஆகும். சித்திரை முதற் செவ்வாய் கிழமை வீரபத்திரருக்கான விரதநாள் ஆகும். சித்திரை கிருஸ்ணபட்ச ஏகாதசி பாவவிமோசனம் என்றழைக்கப்படும் இவ்விரதத்தை நோற்றால் பாவம் நீங்குமென அழைப்பர். இது இஸ்ட சித்திகளைப் பெற நோக்கப்படுவதாகும். இவ்விரு ஏகாதசி தினங்களிலும் கிரமப்படி மஹா விஸ்ணு இருப்பது சிறந்தது.

உலகிலேயே சொர்க்க பூமியாகவும் அழகு நிறைந்து செல்வம் பொழியும் வளங்கள் நிறைந்த நாடாக இலங்கை விளங்குகின்றது. இந்த நாடு உலகிலேயே பெறுமதி நிறைந்த மாணிக்கமாக விளங்கும் நாடு, இந்த இலங்கை நாட்டில் ஆதிகாலம் முதலே இந்து மதம் நிறைந்துள்ள நாடாக விளங்கி வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய தீபகண்டமும் இலங்கையும் லெமோரியா கண்டத்தின் எஞ்சிய நிலப்பகுதியே ஆகும் என பேராசிரியர் ராலே **History of world** என்ற புத்தகத்தில் எழுதியுள்ளார். பின் பெருவெள்ள பிரளயத்திற்கு பின்னர் இந்தியாவில்தான் மனித இனம் முதல் முதல் தோன்றியது என்று பேராசிரியர் நிரூபித்துள்ளார். பிரித்தானிய காலத்தின் தலைவரான சேர் ஜோன் எட்லன்ஸ் மனிதன் தென் இந்தியாவில் தான் தனது தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்றுறான் என்கிறார். லெமோரியா கண்டத்தின் பேரழிவுக்கு முன்னர் இந்தியாவும் இலங்கையும் குமரி கண்டத்தின் நிலப்பகுதியாகவே இருந்துள்ளன.

இன்று தனி நாடாக விளங்கும் இலங்கை பண்டை முதல் திராவிட பாரம்பரியத்தையும் சில வழிபாட்டினையும் கொண்டதாக விளங்கியுள்ளது. இங்கு திராவிட நாகரிகமும் அவர்கள் பின்பற்றிய இந்து மதமும் பழமை வாய்ந்தவை. லெமோரிய கண்டத்தில் வாழ்ந்த திராவிடர்கள் நாகரிகம் மிக்கவர்களாக வாழ்ந்ததுடன், சமயம், பண்பாடு, வர்த்தகம் என்பவற்றிலும் மேலோங்கி வாழ்ந்தனர். இதனாலேயே இந்தியாவையும் இலங்கையையும் சிவபூமி என்றார் திருமூலர். இலங்கையை ஆண்ட இராவணனும் ஒரு சிவபக்தனே.

இலங்கையில் திருக்கோணேஸ்வரம் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் முதல் சிவத்தலமாக விளங்கி வருவது போல் தெற்கே மாத்தறை தேவேந்திர முனைக்கு தென்பால் தொண்டீஸ்வரர் என்னும் சிவத்தலம் விளங்கியது மட்டுமல்லாது இலங்கை பூராவும் நூற்றுக்கணக்கான சிவக்கோயில்களும் உருவாகின.

இலங்கை நகரம் இராமபிரானது திருப்பாதம் பட்ட புண்ணிய பூமி. திருமாள் ஈரடியார் மூவுலகம் வந்தபோது அவரின் பாதம் இலங்கையின் சிவனொளிபாத மலையிலேயே பதியப்பெற்றது என்பர். கலியுகவரதன் இலங்கை கதிர்காமத்தின் சூரபத்மனை அழித்து வள்ளி தேவிக்கு அருள் கொடுத்தார். இந்தியாவில் இமயமும் இலங்கையில் சிவனொளிபாதமலையும் சிவனின் ஒளியும் பாதமும் பட்ட இடங்களாக விளங்குகின்றன.

புராண இதிகாச காலத்திற்கு பின்னர் இலங்கையின் மத்திய பிரதேசமான மலைநாட்டிலும் திராவிட பாரம்பரியம் செல்வாக்குடன் திகழ்ந்தமைக்கும் இந்து சமயமும் தமிழர்கள் சிறப்புற்று மேலோங்கி இருந்தமைக்கும் பௌதீக ஆதாரங்களும் பண்பாட்டு இலக்கிய சான்றுகளும் நிறையவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1815ல் ஆங்கிலேயர் கண்டியைக் கைப்பற்றி இலங்கைத் தீவு முழுவதையும் தம் ஆட்சிக்குட்படுத்தியபோது கடைசியாக முடியிழந்த கண்டிய மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனே ஆவார். அவர் மலையக பிரதேசத்தை ஆண்ட காலத்தில் மன்னர் மட்டுமின்றி செல்வாக்கு மிக்க தமிழ் பிரதானிகளும் செட்டியார்மாரும், சோதிடர்களும் , கலைஞர்கள், வர்த்தகர்கள், வைத்தியர்கள் உட்பட படைவீரர்கள் கூட நிறைய தமிழர்களாக இருந்துள்ளனர். **Mr. P.** பத்மநாதன் கி.பி. 800 முதல் 1200 காலப்பகுதிகளின் சில பகுதிகளில் (பத்தினியை) அம்மனை தெய்வமாக போற்றும் வழக்கம் நிலவியதாக குறிப்பிடுகிறார். கஜபாகு மன்னன் பத்தினி தெய்வத்தோடு கண்டி ஸ்ரீ (பிள்ளையார்) செல்வ விநாயகர் ஆலயத்தோடும் தொடர்பு படுத்தப்படுகிறான். கஜபாகு மன்னன் அமைத்த பத்தினி அம்மன் கோயில் சிலைகளும் விநாயகர் கோயில் சிலைகளும் யுத்தம் காரணமாக ஆலய வழிபாடு கைவிட நேர்ந்தது. ஆலயங்களும் அழிக்கப்பட்டன. ஆலய வழிபாடு கைவிடப்பட்டது.

பின் கண்டியைச் சேர்ந்த குருசாமி என்பவரால் கண்டெடுக்கப்பட்டு கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் பிரதிஸ்டை செய்யப்பட்டது என கர்ண பரம்பரை கதையில் கூறப்படுகின்றது.

கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் கண்டி செல்வ விநாயகர் ஆலயத்தை புனரமைத்தான். இம்மன்னன் காலந்தொட்டே புத்தரின் புனித தந்தம் அடங்கிய பேழை கண்டி பெரஹராவின்போது இந்து கடவுளின் பவனியோடு எடுத்து வரும் வழக்கம் ஏற்பட்டதென கூறுகின்றனர். கண்டி இராச்சியத்தின் கடைசி மன்னனாக விளங்கிய கீர்த்தி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் காலத்தில் தமிழ் ஆட்சி மொழியாகவும் வர்த்தக வெளிநாட்டு தொடர்பு மொழியாகவும் இருந்துள்ளது. இம்மன்னன் கண்டி செல்வ விநாயகர் கோயிலுக்கு பல திருப்பணிகளை செய்துள்ளார். நம்நாட்டு பௌத்த சிங்கள மக்களின் தேசிய கலாசார விழாவாகவும் பிரமாண்டமாக நடாத்தப்பட்டு வருகின்ற கண்டி பெரஹராவோடு கட்டுக்கலை ஸ்ரீ செல்வ விநாயக ஆலய பூஜைகளும் இயன்றளவு தொடர்புபடுத்தியுள்ளமை ஒரு முக்கியமான சிறப்பம்சமாகும். ரந்தொளி பெரஹரா அன்று இந்துக்கள் தலதா மாளிகைக்குச் சென்று பூஜைகளும் செய்தனர். இதுபோல் "நிலமேக்கள்" நீர் வெட்டு உற்சவங்களின் போது கண்டி செல்வ விநாயகர் ஆலயத்திலும், கண்டி முருகன் ஆலயத்திலும் கலந்து கொண்டு பூஜைகள் செய்வதுண்டு.

இவை மட்டுமல்லாது கண்டிய இராஜசிங்க மன்னன் தலதா மாளிகையோடு இந்து மத தெய்வங்களான மகாவிஷ்ணு, ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ முருகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமான் ஆலயமும், பத்தினி அம்மன் (கண்ணகி) ஆலயத்தையும் அருகருகே அமைத்து வழிபாடு நடாத்தியதோடு கண்டிய பெரஹராக்களிலும் இன்று மத தெய்வங்களுக்கே முதலிடம் கொடுத்தது மட்டுமல்லாது பௌத்த மத பிக்குமார்கள் பெரஹராவில் செல்ல அன்று அனுமதிக்கவில்லை. அதேமுறை இன்றும் பெரஹரா ஊர்வலத்தில் கடைபிடிக்கப்படுவது பெருமைக்குரிய விடயமாகும். அன்றைய மன்னன் காலத்தில் தமிழ் தெய்வங்கள் ஊர்வலமாக வரும்போது "அரோஹரா" என்று சொல்லும் வாக்கியமே காலப்போக்கில் "பெரஹரா" என்று மாறியதாகவும் பழங்கால நூல்கள் சான்று பகர்கின்றன. இப்படியாக ஆட்சிசெய்து கொண்டு வந்த ஸ்ரீ விக்கிரமராஜசிங்ஹ மன்னன் ஆங்கிலேயர் யுத்தம் செய்து உயிருடன் பிடிக்க மயன்றார்கள். இதை முன்கூட்டியே அறிந்த மன்னன் தன்னை காப்பாற்றிக்கொள்ள முயற்சி எடுத்தான். தெற்கே இருந்து கடுகன்னாவ வழியாக கண்டிய இராச்சியத்தை நோக்கி படை எடுத்து ஆங்கிலேயர் வருவதை அறிந்த மன்னன் முன்கூட்டியே தன்னிடம் இருந்த விலைமதிப்பிலான பொருட்களை மகியாங்கன கண்டி பாதை வழியாக அனுப்பிய பின் தானும் அவ்வழியே செல்ல ஏற்பாடு செய்தார்.

கண்டிய மன்னன் மறைந்து வாழ எண்ணி கண்டியில் இருந்து புறப்பட்டு கண்டி பிள்ளையார் ஆலயத்திற்கு சொந்தமானதும் பெரஹரா முடிந்து விநாயகரின் ஆலய நீர் வெட்டும் வைபவம் நடக்கும் இடமான தென்னக்கும்பர வரும்போது மன்னனுக்கு தென்பட்ட மலை உன்னஸ்கிரிய மலையேயாகும். அங்கு மறைந்து வாழ முடிவெடுத்த மன்னன் இடைவெளியில் மொரகாமலை என்னும் பெரும் காட்டு பகுதியை அடைந்ததும் அங்கு நீர் நிறைந்த ஆற்றைக் கடக்க வேண்டி இருந்தது. பின் அங்கே தன்னிடம் இருந்த வெள்ளிவேலை ஊன்றி அவருக்கு பூஜை செய்து வழிபட்ட பின்பே ஆற்றைக் கடந்து சென்றுள்ளார். அதற்கு சான்றுகள் இன்றும் மொரகாமலை ஆற்றங்கரையில் கல்லிலே எழுத்துக்கள் உள்ளதோடு ஒரு சில புத்தகத்திலும் அதற்கான சான்றுகள் எழுதப்பட்டுள்ளன. பின் மன்னர் உன்னஸ்கிரிய மலையில் தங்கியதன் ஆதாரங்கள் இன்றும் உன்னஸ்கிரிய மலையில் உள்ளது. அந்த மலை ராஜா மலை என்று இன்றும் அழைக்கப்படுகின்றது.

மன்னனோடு சென்ற படையினரும், சேவகர்களும் கொண்டு சென்ற விலை மதிப்புள்ள பொருட்கள் அனைத்தையும் வேறபிட்டிய, மடுகல்ல, ராஜா மலை, மடவளை போன்ற இடங்களில் மறைத்து வைத்ததாக கூறப்படுகின்றது.

காலப்போக்கில் அவ்வழியே செல்லும் வழிப்போக்கர்கள் இதை வேலை மட்டும் வணங்கி சென்றுள்ளனர். பல வருடங்கள் சென்ற பின் எவரதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவனிப்பார் இல்லாமல் போய்விட்டது. பல வருடங்களுக்கு பின் அக்காட்டுப் பகுதியில் வேட்டையாட சென்றவர்களில் ஒரு தமிழருக்கு ஒரு புறத்தில் வேலூன்றிய சிறு ஆலயம் தென்பட்டதாம். பின் சிலர் கூடி அந்த இடத்தை சுத்தம் செய்து தற்செயலாக அப்பகுதியில் செல்ல நேர்ந்ததால் அவ்விடத்தில் கையெடுத்து வணங்கி செல்வது வழக்கம். சில வருடங்கள் சென்ற பின் ஊருகல நகரை சேர்ந்த சிலர் அங்கு சென்று ஆலயத்தை சிறிதாக கட்டி பூஜை வைத்துள்ளார்கள்.

இந்த ஆலயத்தை வணங்கியவர்களுக்கு பல நன்மைகள் நடைபெற்றுள்ளது. அந்த நாட்களில் ஊருகல நகரம் நிறைந்த தமிழ் மக்கள் வாழும் பிரதேசமாக இருந்தபடியாலும் நகருக்கு அண்மையில் வேறு கோயில்கள் இல்லாமையாலும் எல்லோரும் ஒன்று கூடி அமரர் **A. V.** மருதப்பிள்ளை என்பவரை தலைவராகவும், அமரர் கதிர்வேல் நாடார் என்பவரை செயலாளராகவும், அமரர் மருதப்பிள்ளை அவர்களை பொருளாளராகவும் நியமித்து அந்த ஆலயத்தையும் கட்டி ஆற்றங்கரையில் விநாயகர் கோயிலை வைத்து வேல் இருந்த இடத்தில் முருகன் ஆலயத்தையும் அமைத்து வழிபட்டார்கள். பிறகு பூஜைக்காக குருக்களையும் நியமித்து நிறைய விக்கிரகங்களையும் இந்தியாவிலிருந்து கொண்டு வந்து பிரதிஸ்டை செய்தார்கள். நாளாக நாளாக ஆலயம் வளர்ச்சி பெற்றது. திருவிழாவும் நடந்தது. மக்கள் கதிர்காம கந்தனாக நினைத்து வழிபட்டார்கள். காவடி, பறவைக்காவடி, தீ மிதிப்பு போன்ற பக்தி சிரத்தையான விடயங்களும் நடைபெற்றன. பின் பலரின் வேண்டுகோளுக்கிணங்க தேர் எடுக்க வேண்டிய கட்டமும் வந்தது. ஆனால் அந்தக் காலத்தில் வாகனத்தில் கொண்டு செல்வது இயலாத காரியமாகும். வடம் பிடிப்பதற்கான மக்கள் கூட்டம் குறைவு. பின் இரண்டு மாட்டு வண்டியில் தேரை அமைத்து ஊருகல நகருக்கு கொண்டு சென்றனர். மொறகாமலை ஸ்ரீ கதிரேசன் ஆலயம் என பெயர் வைக்கப்பட்டது. 1951ஆம் ஆண்டு பாலஸ்தானம் செய்து 1954ஆம் ஆண்டு ஆலயம் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பின்னர் ஒரு கல்யாண மடமும் கட்டப்பட்டு சக்தி நிறைந்த பெரும் ஆலயமாக மாறியது. இந்துக்களும் பௌத்தர்களும் வணங்கும் சக்தி நிறைந்த ஆலயமாகவும் மாறியது. 1955ஆம் ஆண்டு கோபுர வாசல் கோபுரம் அமைக்கப்பட்டது.

கதிர்காமம் செல்ல முடியாதவர்கள் மொறகாமலை ஆலயத்திற்கு வர ஆரம்பித்தார்கள். கண்டிய பிரதேசத்தில் கண்டி பிள்ளையார் போல் மொரகாமலை கதிரேசன் கோயிலும் வளர்ந்தது. பௌத்தர்களும் "புஞ்சிகதரகம"என அழைத்தனர். வருடந்தோறும் ஆவணிமூல கும்பாபிஷேக நாள் திருவிழா நடைபெறும். தேர்த்திருவிழா மேளவாத்திய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கச்சேரியுடன் மொரகாமலை ஆலயத்திலிருந்து ஊறுகல நகர் வரை சென்று திரும்ப ஆலயம் வந்தடையும். மறுநாள் மகாவலி கங்கை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும். திருவிழா நாட்களில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துக்கொள்வார்கள்.

வருடங்கள் பல உருண்டோடின. தெல்தெனிய நகரிலும் நிறைய தமிழர்கள் வாழ்ந்து வந்தனர். தெல்தெனிய நகருக்கு தேரை எடுப்பிக்க வேண்டும் என்ற ஆசை அவர்களுக்கு இருந்தன. அவர்கள் கேட்டுக் கொண்டதற்கமைய தெல்தெனிய நகருக்கு தேர் செல்ல ஏற்பாடுகள் செய்ததோடு தெல்தெனிய நகரிலே உள்ள வர்த்தகர்களில் முன்னணி வகித்த அமரர் **V. K. V.** சியாம்பிள்ளை, திருவாளர் மயில்வாகனம், திரு. பார்த்தீபன் போன்றவர்கள் மொரகாமலை கோயில் கமிட்டியில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். தெல்தெனிய ஊருகல ஆட்கள் கூடி கமிட்டி உருவானது. பின்னர் திருவிழா நாட்களில் கடைசி நாள் ஊருகல நகருக்கும் மறுநாள் தெல்தெனிய நகருக்கும் தேர் செல்வதாக முடிவு எடுக்கப்பட்டது.

ஆனால் முதல் நாள் ஊருகல நகருக்கு சென்ற தேர் மறுநாள் தெல்தெனியவிற்கு செல்ல முடியாது. போரை காரணம் காட்டி தெல்தெனிய செல்லும் வழியில் ரபுக்கல என்ற இடத்தில் பிரதான வழியில் வயலுக்கு தண்ணீர் செல்லும் வாய்க்கால் பாலம் அமைந்திருந்ததால் தேர் செல்ல முடியாத காரணத்தினால் அதற்காக மயில்வாகனம் ஒன்று ஏற்பாடு செய்து மயில் வாகனத்தில் முருகப்பெருமான் தெல்தெனிய நகருக்கு எழுந்தருளினார்.

தெல்தெனிய நகருக்கு மயில் வானத்தில் வரும் முருகப்பெருமானை கான தமிழர்களை விட பௌத்தர்களே வழி நெடுங்கிலும் பூத்தட்டு அர்ச்சனை செய்ய விடியும் வரை காத்திருந்து அர்ச்சனை செய்வார்கள். தெல்தெனிய நகர் திருவிழா காலங்களில் வாழைமரம் சகிதம் தென்னங் குருத்து ஓலைகள் நிறைந்து மங்கள கரமாக காட்சியளிக்கும். தமிழர், சிங்களவர் என்ற பேதம் இல்லாமல் எல்லோரும் பக்தியாக முருகனை வணங்குவார்கள். தெல்தெனிய நகரிலே ஐந்து கடை சந்தி வரை மயில்வாகன முருகன் சென்று மக்களுக்கு அருள்பாலித்து வருவார். ஒரு தமிழ் பெருவிழாவாக மக்கள் மதித்து தேர் திருவிழாவை கொண்டாடுவார்கள்.

இந்த மொரகாமலை கதிரேசன் ஆலயம் இவ்வளவு முக்கியத்துவம் பெற காரணம் இந்த ஆலயத்தின மகிமை நிறைந்த சக்தியே மொரகாமலை முருகன் சக்தியான தெய்வம் என எல்லோரும் நம்பினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நம்பியவர்களுக்கு நல்லதை செய்த முருகன் கேட்பவர்களுக்கும் கேட்பதை கொடுக்கும் தெய்வமாக விளங்கினார். தத்ரூபமாக பக்தர்களுக்கு அருள் பாலித்தார்.

சில உதாரணங்களை கூறுகின்றேன். திருவிழா நாளில் கேகாலையை சேர்ந்த பெண்மணி நடந்தே ஆலயம் செல்லும்போது ஒரு கயவன் இப்பெண் மணியின் தாலிக் கொடியை அறுத்துக் கொண்டு ஓடும்போது எதிரே வந்த வாகனத்தில் மோதி அதே தாலியை எடுத்த கை உடைய அனைவரும் நேரில் கண்டு வியந்ததோடு தாலி கொடியும் கிடைத்தது.

அதேபோன்று (இன்று திகனயில் உள்ள) அன்று தெல்தெனியவில் உள்ள தனநந்தன முதலாளி என்பவர் சென்று பெரிய லொறியில் ஒரு லோட் மரத்தை ஏற்றிக் கொண்டு வரும்போது மொறகாமலை பாலத்திற்கு அருகில் லொறி பின் டயர் சேற்றில் இறங்கிவிட்டது. ஒரு நாள் முழுக்க சேற்றிலே புதைந்ததினால் தெண்டித்தும் எடுக்க முடியவில்லை. உடனே அருகில் இருந்த முருகன் கோயிலுக்கு சென்று பூஜை செய்து நேர்த்தி வைத்து மஞ்சல் துணியில் ஒரு 50 சதம் முடிந்து ஸ்ரீ முருகனின் திருப்பாதத்தில் வைத்து வேண்டி அதே காணிக்கையை லொறியில் ஸ்டியரிங்கில் கட்டி ஸ்ரீ முருக தெய்வத்தை வேண்டி ஸ்டார்ட் செய்தார். கியரை போட்டு ரேஸ் பண்ணினாராம். சேற்றிலே கிடந்த யானை உருமிக்கொண்டு எழுந்ததை போல் லொறி பாதைக்கு வந்ததாம் என்று அந்த வர்த்தகர் இந்த ஆச்சரியமான அனுபவத்தை எல்லோரிடமும் சொல்லி சொல்லி பெருமைப்பட்டார். அன்று முதல் ஒவ்வொரு திருவிழாக்களும் இன்று வரை அரிசி மூடைகள் அன்னதானமாக வழங்கிக்கொண்டிருக்கிறார்.

அடுத்து ஒரு முறை ஆவணி மூல திருவிழாவிற்கு திருவிழா பத்திரிகைகள் அடித்தும் திருவிழா நாளும் வந்தது. ஆனால் மகாவலி ஆறு வற்றிப்போய்விட்டது. குடிக்கக்கூட தண்ணீர் இல்லை. ஆலயக் கமிட்டியினர் திருவிழாவை பின் தள்ளிப்போட முடிவும் எடுத்துவிட்டு ஆலயத்தை விட்டு வெளியே வரும்போது நேர்த்தியும் போட்டு வந்தனர். என்ன ஆச்சரியம் மாலை ஆறு மணிக்கு தொடங்கிய மழை விடிய விடிய அடித்து ஊற்றியதுடன் மறுநாள் திருவிழா செய்வதற்கு மழை நின்று ஊர்வலத்தில் தேர்போகவும் உதவியது. மக்களுக்கு பெரும் ஆச்சரியமாக இருந்தது. மொறகாமலை ஸ்ரீ முருகப்பெருமானின் பெரும் சக்தியை நினைத்து பௌத்தர்களும் இந்துக்களும் வியந்தார்கள். மொறகாமலை ஸ்ரீ முருகனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்றாகும். இப்படியாக பலர் நம்பும்படியான ஆச்சரியமான நிறையவே அப்பகுதி மக்களுக்கு திருவிளையாடல்களை நடாத்திய முருகப் பெருமானின் பெருமை பெருகியதுடன் மக்கள் மத்தியிலும் ஸ்ரீ முருகன் அருள் பதிவாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் இரவு திருடர்கள் பாதை அருகிலுள்ள உண்டியலை (காணிக்கைப் பெட்டி) உடைக்கும்போது ஒரு மனித நிழல் வருவதைக் கண்டு திருடர்கள் பயந்து ஆயுதங்களை அங்கேயே போட்டுவிட்டு ஓடி விட்டார்கள். ஒரு கிழமை சென்ற பின் திருடர்கள் பயத்தில் காய்ச்சலால் அவதிப்பட்டு ஆலயம் வந்து மன்னிப்பு பூஜை செய்ததும் அவர்களே தவறை உணர்ந்தும் மக்களிடமும் நடந்தவைகளைக் கூறி வெட்கப்பட்டனர். இப்படியாக எவ்வளவோ நிகழ்ச்சிகளை கேள்விப்பட்டும் நேரில் பார்த்தவர்களும் உண்டு.

இப்படி சில வருடங்கள் கடந்தது. 1977ஆம் ஆண்டும் வந்தது. அளவிற்கு அதிகமாக வளர்ந்து வந்த தமிழ் மக்களின் மீது பொறாமைக் கொண்ட அரசியல் வாதிகளின் தூண்டுதலின் பேரில் இனக்கலவரம் நாடு முழுவதும் தூண்டிவிடப்பட்டது. எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்ந்தார்களோ அங்கெல்லாம் அவர்கள் கொள்ளையடிக்கப்பட்டும், கொலை செய்யப்பட்டும், தீயில் கொளுத்தப்பட்டும், உடைமைகள் சூறையாடப்பட்டும் எவ்வளவுக்கெவ்வளவு அரக்கத்தனமான வேலைகளை செய்யமுடியுமோ அந்தளவிற்கு அரக்கர்கள் உருவாக்கப்பட்டு தமிழ் மக்களின் உடைமைகளையும் உயிரையும் அழித்தொழித்தார்கள். யாழ்ப்பாண புத்தகசாலை தீயிட்டு கொழுத்தப்பட்ட போதும் சிங்களவர் மத்தியிலே இருக்கும் முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலயம் அவர்களுக்கு ஒரு துரும்பு போல காட்சியளித்தது. ஆண்டவனைக்கூட விட்டு வைக்கவில்லை அரக்கர்கள். மொறகாமலை ஆலயத்தையும் விட்டு வைக்கவில்லை. அங்குள்ள விலை மதிப்பான அனைத்து பொருட்களையும் சூறையாடினார்கள். பல வருடங்களாக பூஜை செய்து வந்த நடேசன் குருக்கள் குடும்பத்துடன் சென்றுவிட்டார். மிகுதியாக இருந்தது ஸ்ரீ முருகன் வள்ளி தெய்வானை, பிள்ளையார் போன்ற விக்கிரகங்கள் மட்டுமே. ஊறுகல நகரும் கொள்ளையடிக்கப்பட்டு தீக்கிரையாக்கப்பட்டது. அங்குள்ள தமிழ் வர்த்தகர்களும் ஆலய கமிட்டி அங்கத்தவர்களும் நகரை விட்டு வெளியேறினார்கள்.

அதன் பின் ஆலயத்தை கொண்டு நடாத்த குருக்களும் இல்லை கமிட்டியும் இல்லை. நாட்கள் மாதங்களாயின. மாதங்கள் வருடங்களாயின. ஆலய புற்றரைகள், செடிகளாயின. செடிகள் மரங்களாயின.

"தமிழர்கள்" என்று சொல்லி ஆலயம் பக்கமே போக பயந்தார்கள். அதற்கு அக்கம் பக்கம் இருந்த பௌத்த ஆலயமும் காரணமாக இருந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக வருடங்கள் சில கடந்த பின் இந்த ஆலயம் மரம் ஏறி விழுந்தவனை மாடு மிதித்து கொன்றதைப் போல் அந்த வெறியர்கள், காடையர்கள், அரக்கர்களின் அட்டகாசம் அடங்கியதும் சில வருடங்கள் ஆலயத்தையே நடாத்த முடியாத நிலையிலும், யாருமே ஆலய பக்கம் போக முடியாமல் ஆலய சொத்துக்கள் களவு போய்க்கொண்டே இருந்தது. பார்ப்பதற்கோ, கேட்பதற்கோ யாருக்கும் அதிகாரமில்லாத நிலைமையும், யாருமே போக முடியாத நிலைமையாலும் காடுகளும் வளர்ந்தன. இப்போது 1980 ஆம் ஆண்டும் வந்தது. இன்னும் ஒரு அதிர்ச்சி செய்தியும் ஆலயம் தாங்க வேண்டிய நிலைமை உருவாகியது. அது விக்டோரியா நீர்த்தேக்க அணைக்கட்டு கட்டும் திட்டமும் 1980 ஆம் ஆண்டு சட்டபூர்வமாக்கப்பட்டது.

1981ஆம் ஆண்டு விக்டோரியா அணைக்கட்டு திட்டம் பொறியிலாளர்களின் வரைபடத்தின் திட்டப்படி ஆலயத்தின் பெரும்பகுதி விக்டோரிய அணைக்கட்டு நிர்வாக சபையின் கட்டுப்பாட்டின் கீழ் சுவீகரிக்கப்பட்டது. ஆலயத்திற்கு இடியின் மேல் இடியாக விழுந்தது. சோதனைமேல் சோதனையாக கயவர்களால் பொருட்கள் களவாடப்பட்டது. அதைவிட மோசமாக விக்டோரியா திட்டத்தின் கீழ் காணிகளும் பெரும்பகுதி சூறையாடப்பட்டது. இப்போது காணி 3 ஹெக்ரெயர் 4 பேர்ச் ஏக்கருக்கு மேல் இருப்பதை கணித்து இப்போது 2ஏக்கர் 08 பேச்சர்ஸ் ஆக விக்டோரியா நீர்த்தேக்க திட்டமிடல் அமைப்பால் கொடுக்கப்பட்டது.

இந்த நிலைமையில் ஆலயமும் ஆலயம் சார்ந்த இடமும் மகாவலியால் சூறையாடப்பட்டது. இருக்கும் 64 பேர்ச் காணியும் ஆலயத்ததை சூறையாடிய சொந்தங்கள் கடைகள் கட்டி அதிலும் பாதியை சூறையாடிவிட்டனர். காரணம் அந்த நேரத்தில் ஆலயம் சம்பந்தமாக கேட்பார் யாருமில்லை. ஆலய கமிட்டியில் இருந்தவர்கள் கொழும்பு, கண்டி, இந்தியா என பிரிந்துவிட்டனர்.

சரியான ஆவணங்களை ஊருகல கமிட்டியில் உள்ளவர்களும் தெல்தெனிய கமிட்டியில் உள்ளவர்களும் காண்பிக்க முடியாமையால் கண்டி நீதிமன்றம் ஊடாக தீர்ப்பு வழங்குபவர்களுக்கு பணம் கொடுக்க முடிவாக்கப்பட்டது. ஆனால் பணத்திற்காக மட்டுமே உரிமை கொண்டாடினார்களே தவிர ஆலயத்தைப் பற்றிய சிந்தனையே யாருக்கும் வரவில்லை. காரணம் முக்கியமானவர்கள் காலமானார்கள். அவர்களின் பிள்ளைமார் பணத்திற்கு வாதாடினார்கள். இந்த நேரத்தில்தான் கடந்த 12 வருடங்கள் நிஸ்டையில் இருந்த ஸ்ரீ முருகப் பெருமான் கண் திறந்து பார்த்தார். எல்லா அக்கிரமங்களும் செய்துக்கொண்டிருந்த அரக்கர்களின் அரக்கத்தனத்தினை கட்டுப்படுத்த எண்ணினாரோ தெரியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் நான் 22வது வருட காமன் திருவிழாவை பக்தி பூர்வமாக வணங்கி வரும் நிலையில் 1992ஆம் ஆண்டு மாசி மாதம் காமன் திருவிழா நடைபெற்று உயிரெழுப்பும் பக்தி பூர்வமான நாளன்று இரவு முருகப்பெருமான் கனவில் வந்தார். கொபநிலை காமன்கோயில் திடலில் இருந்து பரந்து வரும் நிலையையும் வந்து முருகாமலையில் வந்திறங்கியதையும் கண்டேன். உடனேயே மனைவியாரிடமும் இதைக் கூறினேன்.

அதே கிழமை கண்டி வந்து ஸ்ரீ கதிரேசன் ஆலயம் முன்னால் பொருளாளரின் மகனான. திரு.சுபகுமாரிடம் இதைப்பற்றி கூறினேன். அவரை ஆலயம் கட்ட முன்வருமாறு அழைத்தேன். அவர் வழக்கு முடியட்டும் பார்ப்போம் என்றார். கவலையுடன் அன்றே தற்செயலாக டாக்டர் செனவிரத்னவை சந்தித்தேன். அவர் முருகாமலை முருகன் மேல் மிகுந்த பற்று உள்ளவர்.

அன்றைய சூழ்நிலையில் பௌத்தர் மூலமாக ஆலயத்தை தொடங்கினால் எதிர்ப்புக்கள் வராது என நினைத்தேன். அவரும் ஆவலுடன் சம்மதித்தார். ஆனால் தெல்தெனிய மக்கள் வழக்கு சம்பந்தமாக அவரிடம் கூறியதால் அவரும் முன்வரவில்லை. தினமும் நான் தெல்தெனிய வரும்போதும் போகும்போதும் மனதை உருத்திக்கொண்டே இருக்கும். முன் ஆலயம் இருந்ததற்கும் இப்போது ஆலயம் இருக்கும் நிலைமைக்கு பெரும் வேதனையாக இருந்தது.

இந்த ஆலயத்திற்கு அடுத்த சோதனையாக பௌத்த விகாரையிலுள்ள பௌத்த பிக்குவும் பௌத்த மக்களுக்கு அப்போதைய ஜனாதிபதியாக இருந்த அமரர்.டி.பி.விஜயதுங்க அவர்களுக்கும் பல மகஜர்களை கொடுத்தார்கள். அப்பகுதி மக்கள் அனைவரும் ஒப்பமிட்டு அனுப்பிய மகஜரில் இவ் ஆலயத்தை பராமரிக்க யாரும் இல்லாததால் அருகில் உள்ள பௌத்த விகாரைக்கு அனுமதியை தாருங்கள். தெற்கிலே உள்ள கதிர்காமக் கோயிலைப்போல் நடாத்துவதற்கு இப்பகுதி மக்களுக்கு உரிமையைக் கேட்டார்கள். ஜனாதிபதி.டி.பி. விஜயதுங்க அவர்களும் ஒத்துக்கொண்டு கடிதமும் கொடுத்துவிட்டார்.

கடந்த பல வருடங்களாக வனவாசம் சென்றிருந்த முருகப்பெருமானும் அப்போது தான் கண் விழித்தார். அவ்வழியே செல்லும் அமரர் பங்காரசாமி மனதில் இவ் ஆலயம் ஏன் இப்படி இருக்கின்றன? என்ற எண்ணமும் தோன்றியது. அதாவது ஆலயமே செல்லாத தெய்வங்களை வழிபட தெரியாத ஒருவர் மனதில் முருகப்பெருமான் புகுந்து ஆலயம் கட்ட தூண்டியமை ஸ்ரீ முருகப் பெருமானின் திருவிளையாடலே..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயம் பற்றி மனதில் தோன்றியவுடன் அருகே இருந்த சாரதி சின்னத்தம்பி என்பவரிடம் இவ்வாலயம் பற்றி விசாரித்தார். அவர் இவ்வாலயம் பற்றிய விடயங்களையும் கடந்தகால வரலாறுகளையும் சொன்னதும் இதனை எப்படி திரும்பவும் நடத்தலாம் என வினவ அவர் மருமகன் அமரர். நாதன் அவர்களிடம் கேட்க வேண்டும் என்றார். மறுநாளே அமரர்.நாதன் அவர்களை சந்தித்தார். அமரர். நாதன் அவர்கள் திரு செல்லையா அவர்கள் தான் இப்பகுதி கோயில்கள் சம்பந்தமாக நிறைய தெரிந்தவர். அவரிடம் பேசிப் பார்ப்போம் என்றார்.

ஒரு வெள்ளிக்கிழமை அமரர். நாதன் அவர்களும் அமரர். பங்காரசாமி அவர்களும் பளகொல்ல எனும் இடத்திற்கு எனது இல்லம் நோக்கி வந்தனர். ஆலயம் பற்றி பேசினர். அமரர் பங்காரசாமியும் நானும் கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் ஒன்றாய் படித்த நண்பரும் ஆவார். ஆலய விடயத்தை சொன்னதும் எனக்கு அளவில்லா மகிழ்ச்சியாய் இருந்தது. யாரும் இந்த ஆலயம் அமைக்க உதவிக்கு வர மாட்டார்களா என மன வேதனையுடன் இருந்த எனக்கு இருவரும் வநத்து, நான் நினைத்து எடுத்த காரியத்தை அமுல்படுத்துவதற்கு முருகப்பெருமானே இரண்டு தூதர்களை அனுப்பியதைப் போன்று பெருமைப்பட்டேன். இரண்டு மணி நேரம் ஸ்ரீ கதிரேசன் ஆலயம் சம்பந்தமாக உரையாடினோம்.

அமரர். பங்காரசாமியை பற்றி சில வார்த்தைகளை தெரிவிப்பது எனது கடமையாகும். கலஹாவைப் பிறப்பிடமாக கொண்டவர். கண்டி புனித சில்வெஸ்டர் கல்லூரியில் கல்வி பயின்றவர். திறமையான விளையாட்டு வீரர். உட்சைட் தோட்ட சுப்ரின்டன்ட் (துறையாக) பணியாற்றியவர். ஆலய வழிபாடு தெரியாதவர், ஆலயப் பக்கமே போகாதவர். ஆனால் நாஸ்திகன் அல்ல. இந்து ஆலயங்களில் நடக்கும் தேவையற்ற சம்பிரதாயங்களால் ஆலயம் போகாதவர். நன்கு படித்த தூய உள்ளம் கொண்ட நல்ல மனிதர். அறிவாளி, எதையும் மனதில் நினைத்துவிட்டால் சாதித்துக்காட்டுபவர். நானும் அமரர். பங்காரசாமியும் கண்டி அசோகா ஹாஸ்டலில் ஒன்றாக தங்கி படித்ததனால் இருவருக்கும் புரிந்துணர்வு இருந்தமையால் வேலைகளை ஆரம்பிப்பது சுலபமாக இருக்கும் என்று எண்ணி ஆலயம் கட்டி எழுப்புவோம் என உறுதி பூண்டோம்.

ஆனால் வழக்கு சம்பந்தமான பிரச்சினை முட்டுக்கட்டையாக இருப்பதை சொன்னேன். அவர் கவலைப்படவில்லை. அவர் துணிந்து சொன்னார் வழக்கு நடப்பது ஆலயத்தில் மகாவலியில் கொடுக்கப்படும் நட்ட ஈட்டு பணத்தை முன்னிருந்த கமிட்டியில் யாரிடம் ஒப்படைப்பது என்பதாலேயே நமக்கு ஆலய பணம் வேண்டாம். நாம் பொது மக்களிடம் இருந்து பணம் வசூலித்து ஆலயத்தை கட்டுவோம் என்றார். அதற்கு அனுமதியை அன்றைய இந்து கலாசார அமைச்சராக இருந்த திரு.தேவராஜ் அவர்கள் மூலமாக அனுமதியை சென்று பெறுவோம் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுநாள் சனிக்கிழமை நாம் அமரர். பங்காரசாமியும், அமரர். நாதன் அவர்களும், திரு. சின்னத்தம்பி அவர்களும் அமைச்சர் திரு. தேவராஜ் அவர்களை காண 7.00 மணிக்கு புறப்பட்டோம். கண்டி சென்று நாங்கள் அவரை காண வருவதாக தொலைபேசியில் பேசினோம். அதற்கு பதிலளித்த அமைச்சர் நீங்கள் இங்கு வரவேண்டாம். நான் கண்டி ஸ்ரீ விநாயகர் கோவிலில் சரஸ்வதி பூஜையுடன் அறநெறி கருத்தரங்கில் கலந்துகொள்ள இருப்பதாக கூறி அன்று மாலை சந்திக்க ஒப்புக்கொண்டார். மாலையே சரஸ்வதி பூஜை முடிய அமைச்சருடன் கூடி முடிவெடுத்தோம். ஆலயம் கட்டுவதற்கு அனுமதி தருவதாக கூறி கடிதமும் அனுப்புவதாக கூறினார்.

நியமித்த 16. 10. 1993 அன்றைய திகதி சனிக்கிழமை சரியாக 3 மணிக்கு அமைச்சர். திரு. தேவராஜ் அவர்கள் கண்டி ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயம் வந்தார். எந்த பிரச்சினை வந்தாலும் நான் பார்த்துக் கொள்கின்றேன். மொறகாமலை கதிரேசன் ஆலயத்தை கட்டுவதற்கு முயற்சி எடுங்கள் என்னால் முடிந்த உதவிகளை செய்கின்றேன் என்றார்.

அன்றைய தினம் அமைச்சர் திரு. தேவராஜ் அவர்கள் வடிவில் ஸ்ரீ முருகப் பெருமானே எழுந்தருளி கதிரேசன் ஆலயம் கட்ட ஆசி வழங்கியதை போல் இருந்தது. அண்ணன் விநாயகர் தம்பி முருகனின் ஆலயத்தை கட்ட விநாயகர் ஆலயத்தில் வைத்து தெய்வீக அருள்வாக்கு கிடைத்ததாக எண்ணி எல்லோரும் சேர்ந்து மொறகாமலை ஸ்ரீ கதிரேசன் ஆலயம் விரைவில் கட்டித் தர விநாயகரை வேண்டி பூஜை பண்ணி மிகுந்த மனமகிழ்ச்சியுடன் வந்தோம்.

அன்று மாலை 6 மணி அளவில் பலகொல்ல எனது வீட்டில் கூடி திகன முதல் உன்னஸ்கிரிய வரை பலருக்கு அறிவித்து உன்னஸ்கிரிய திரு பரசுராம சுவாமி அவர்கள் வீட்டில் பொதுக் கூட்டம் வைக்க ஏற்பாடுகள் செய்தோம்.

20.10.1993ம் நாள் புதன்கிழமை அப்பிரதேச உறுப்பினர்களான திரு. திஸ்ஸ அத்தநாயக்கவையும், திரு. கருணாரட்ணவையும் சந்தித்து அன்றைய சூழ்நிலையில் சிங்கள மக்களிடம் ஏதும் பிரச்சினை வராது இருக்க மொறகாமலை ஆலயம் கட்ட உதவிகள் கேட்டோம். அவர்களும் வேண்டிய உதவிகளை செய்து தருவதாக கூறியமை எங்களுக்கு மேலும் ஊக்கமளித்தது.

26.10.1993ம் நாள் செவ்வாய்க்கிழமை கொழும்பு சென்று அமைச்சர் திரு.தேவராஜ் அவர்களிடம் நானும் அமரர். பங்காரசாமி, அமரர். நாதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1940களில் - தேரை மாட்டு வண்டியில் எடுத்துக்கொண்டு செல்லும் முன்,
கமிட்டி அங்கத்தவர்களோடு பௌத்தர்களும் அடங்குவர்.
படத்தில்:- தலைவர். மாரிமுத்துபிள்ளை, செயலாளர் கதிர்வேல் நாடார், பொருளாளர். மருதபிள்ளை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993ம் ஆண்டு - ஆலயம் வெளியே தெரியாத அளவிற்கு
காடாக இருந்த நிலமை.



ஆலயம் காடாய் இருந்ததில் ஒரு பகுதியும்,
தெல்தெனிக்கு முருகன் எழுந்தருளிய மயில் வாகனமும்.



காடாக இருக்கும் பகுதியினை, பக்தர்கள் சுத்தம் செய்யும் காட்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993ம் ஆண்டு - ஆலயம் இருந்த நிலமை.



1993ம் ஆண்டு ஆலயத்தை சுற்றி சுத்தம் செய்த பின்
காட்சி தரும் ஆலயத்தின் தோற்றம்..



மூலஸ்தானம் உள் பகுதியும்,
மூலஸ்தான் கோபுரத்தில் புல் வளர்ந்துள்ள நிலையும்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993 - ஆலய வாசல் பகுதியும்,
உள்ளே ஆலயம் இருக்கும் பகுதியும்.



பழைய ஆலயம் இருந்த நிலமை..



வழி கோபுரத்தின் மேல்
செடிகள் வளர்ந்த நிலையில்..



ஆலயத்தின் பின் பகுதியில்
சிறமதானம் செய்யும் காட்சி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹா கும்பாபிஷேக பிரமுகர்கள்..



மஹா கும்பாபிஷேக ஐயர் தட்சனை..



கும்பாபிஷேக காட்சிகள்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1994ம் ஆண்டு கும்பாபிஷேக காட்சிகள்







1999ம் ஆண்டு சிறு ஆலயங்களுக்கு கும்பாபிஷேகம் செய்யும் போது, குருக்களுக்கு தட்சனை செலுத்தும் காட்சி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாவலி அதிகாரிக்கும், மாகாண சபை செயலாளருக்கும் கடிதம் வாங்கி வந்தோம். 28.10. 1993ம் நாள் வியாழக்கிழமை உன்னஸ்கிரிய அமரர். பங்காரசாமியின் தோட்ட பங்களா வீட்டில் பொதுக்கூட்டம் வைத்தோம். ஆனால் மொத்தமாக எங்களையும் சேர்த்து ஆறு பேர் மட்டுமே இருந்தோம். அந்த ஆறு பேரும் அமரர். பங்காரசாமியும், உப தலைவராக திரு. எஸ். நாதன் அவர்களும், செயலாளராக. திரு. ராகவன் அவர்களும், பொருளாளராக பெ. செல்லையா ஆகிய நானும் தேர்ந்தெடுக்கப்பட்டோம். 30.10.1993ம் நாள் சனிக்கிழமை மொறகாமலை கதிரேசன் ஆலயத்தை சிரமதானம் மூலமாக சுத்தம் பண்ணுவதாக முடிவு எடுத்தோம்.

அதேபோல் 30.10.1993ம் நாள் சனிக்கிழமை காலை 8.00 மணிக்கு அமரர். பங்காரசாமி அவர்கள் உட்சைட் தோட்ட பொதுமக்களை தனது தோட்ட லொறியில் ஏற்றி வந்தார். சிரமதானம் நடந்தது. ஆண்டவனை வேண்டி ஆரம்பித்தோம். அப்போது ஆலயம் பெரும் காடாகவும் உள்ளே செல்லமுடியாத அளவு துர்நாற்றமுடைய இடமாகவும் இருந்தது. (படத்தில் காணலாம்). ஒரு மணிவரை துப்பரவு செய்தோம். ஆலயம் இருந்த பகுதி மட்டுமே துப்பரவு செய்ய முடிந்தது. துப்பரவு பண்ணிய பின் அங்கு கூரையில்லாத சுவராக ஆலயம் இருந்தது. ஒரு சில முக்கிய விக்கிரகங்கள் மட்டுமே இருந்தன. அங்கே இருக்கும் தெய்வ விக்கிரகங்களை எடுத்து ஒரு இடத்தில் வைத்து பூஜை செய்தோம். பின் சிறு பொதுக்கூட்டம் வைத்து 02.11.1993ம் நாள் புதன்கிழமை நல்ல நாளாக இருந்தது. அடிக்கல் வைக்க முடிவு எடுத்தோம். (பூசகரோ, ஜாதகரோ இல்லை). நாங்களே முடிவு எடுத்து எல்லோருக்கும் அறிவித்தோம்.

02.11.1993ம் நாளும் வந்தது. நாங்கள் சிரமதானம் செய்ததை திகன நகர் முதல் உன்னஸ்கிரிய நகர் வரை தெரிந்த முக்கிய பிரமுகர்கள் உட்பட ஏறக்குறைய 70 பேர் வந்தனர். முதல்நாளே சீமெந்து, செங்கல் என தேவைக்கான பொருட்களை சேகரித்திருந்தோம்.

காலை 10.43ற்கு நல்ல நேரமும் வந்தது. நான் அன்று வந்திருந்தவர்களில் இளமையாக இருந்த திரு. A. கனகராஜ் அவர்களை (இன்று ஜனதா ஹாட்வெயார் உரிமையாளர்) அடிக்கல் வைக்க வருமாறு கூறி அவரிடம் அடிக்கல் வைக்க முதல் கல்லை பூஜை பண்ணி கொடுத்தேன். அவரும் நல்ல தூய மனதுடன் கடவுளை வேண்டி வைத்தார். எல்லோரும் முருகப் பெருமானை வேண்டி தனித்தனியே கற்களை அடுக்கினோம். ஆலயமும் வளர ஆரம்பித்தது. ஆலயம் கட்ட வந்திருந்த எல்லோரிடமும் பணமாக இல்லாமல் பொருளாக கேட்டேன். ஒவ்வொருவரும் மணல், சீமெந்து, செங்கல் என தருவதாக கூறினார்கள். கடைசியாக கணக்கு எடுத்து பார்க்கும்போது அன்றைய திகதியில் மட்டும் 76000 ரூபாய் கட்டட நிதிக்கு பொருளாக கிடைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்தில் பூசகர் ஒருவர் இல்லாத குறையாக இருந்தது. ஒரு வாரத்தில் மூலஸ்தானத்தை கட்டி முடித்த பின் பூசகர் ஒருவரை தேடினோம். கடைசியாக உழுகங்கை விநாயகர் ஆலய பூசகர் ருத்ரசர்மா ஐயரை வரவழைத்து பூஜை விடயமாக பேசி முடித்தோம். பூசகருக்கு தங்குமிட வசதி ஆலயத்தில் இல்லாததால் தங்கும் வசதி செய்து கொடுக்கும் வரை செவ்வாய்க்கிழமையும், வெள்ளிக்கிழமையும் வந்து பூஜை செய்து தருமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க, அவர் ஒப்புக்கொண்டார்.

அதற்கேற்ப பல வருடங்களுக்குப் பின் 04.11.1993ம் திகதி அன்று வெள்ளிக்கிழமை ஒரு குருக்கள் மூலமாக நவகும்ப பூஜையுடன் ஆரம்பித்தோம். சொபநிலையை சேர்ந்த திரு. பெரியையா அவர்கள் பெரிய வெண்கல விளக்கு கொண்டுவர திருமதி. சாந்தா செல்லையா முதன்முதலில் விளக்கேற்ற, தொடர்ந்து அமரர் பங்காரசாமி, திரு. கனகராஜ், அமரர். ராகவன், அமரர். நாதன் போன்றோர் விளக்கேற்றி பூசகர் அமரர். ருத்ர சர்மா அவர்கள் நன்கு பூஜைகள் செய்து பிரசாதமும் பொங்கலும் வழங்கி ஆரம்பித்து பின் தினம் ஆலய பூஜைகள் நடைபெற்றது.

அன்று முதல் திரு. **P.** சண்முகம் அவர்களிடம் கட்டட வேலைகள் கட்ட ஒப்படைத்தோம். முதன்முதலாக 21.11.1993ம் நாள் திரு. இரத்தினசாமி அவர்களிடம் தொடங்கி மாலை ஆறு மணிவரை 2300 ரூபாய் வசூலாகியதுடன் பலரும் மணல், சீமெந்து, செங்கல் என நிறைந்த மனதுடன் கொடுத்தமையால் ஆலயம் 20 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. ஏறக்குறைய பொதுமக்கள் அழகாக நின்று பூஜையை பார்க்கும் அளவு கட்டி முடித்தோம்.

அப்போது அமைச்சர் தேவராஜ் அவர்கள் இந்தியாவிலிருந்து அகில இந்திய புகழ் பின்னணி பாடகி. யமுனாராணி குழுவினர் இலங்கைக்கு வரவிருப்பதாகவும் இசை நிகழ்ச்சி ஒன்று மொறகாமலை கதிரேசன் ஆலயத்தில் (முன்னாள் பெயர்) வைக்க ஏற்பாடுகள் செய்யும்படி சொன்னார். எங்களுக்கோ அதிர்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருந்தது. குறுகிய காலத்தில் என்ன செய்வதென ஒரு கமிட்டி கூட்டம் அமைத்தோம். உடனே பொதுக்கூட்டம் கூட்டினோம். அன்றைய பொதுக்கூட்டத்தில் பழைய பெயரான கதிரேசன் கோயில் என்ற பெயரை மாற்ற வேண்டும் எனவும் புதுப் பெயராக முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானம் என பெயர் வைப்போம் என்றேன். முதல் காரணம் கதிரேசன் கோயில் பழைய பெயர் எனவும், அப்பேரில் நீதிமன்றத்தில் வழக்கு இருப்பதாகவும் அதனால் அந்தப் பெயரில் எதுவும் விழாக்கள் செய்வது பிரச்சினையை உருவாக்கலாம் என



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறினேன். எல்லோரும் பெயர் மாற்றத்திற்கும் அது நல்ல பெயர் எனவும் ஒரு மனதாக ஆமோதித்தும் என்னையும் பாராட்டினார்கள். பின் இப்பெயரை இந்துசமய கலாசார அமைச்சிற்கும் அனுப்பி பெயரையும் பதிவு செய்து கொண்டோம்.

27.11.1993ம் நாள் ஞாயிற்றுக்கிழமை புதுப்பெயரில் முதன்முதல் நோட்டீஸ் அச்சடித்தோம். அது எதற்காக என்றால் குன்னக்குடி பாலா, யமுனாராணி குழுவினரின் இன்னிசை விழாவிற்காக. அன்றைய தினம் அமைச்சர் திரு. தேவராஜின் தலைமையின் கீழ் நடைபெற்ற இன்னிசை விழாவிற்கு மக்கள் திரளாக வந்திருந்தனர். எமக்கும் ஆலய வளர்ச்சிக்கும் பெரும் விளம்பரமாக இருந்தது. வீரகேசரி பத்திரிகையிலும் ஸ்ரீ முருகன் ஆலய கட்டுரையும் வந்தது. இந்த இசை நிகழ்ச்சிக்குப் பின் ஸ்ரீ முருகன் தேவஸ்தானம் கூடிய விரைவிலே மிகவும் பிரசித்தி பெற்றது. அன்றைய நாட்களிலே விக்டோரியா நீர்த்தேக்க திட்டத்தினுள் முருகாமலை முருகன் ஆலயத்தில் முதற் படியான ஆலய படிவரை நீர் நிறைந்து இருந்தது. ஆலயத்திற்கு வந்திருந்தவர்களுக்கு நிறைந்த மகிழ்ச்சியும் எங்களுக்கு நிறைந்த பெருமையையும் தேடித் தந்தது. கைகளால் தொடும் அளவு மீன்கள் நிறைந்து விளையாடியது கண்கொள்ளாக் காட்சியாக விளங்கியது. குறுகிய காலத்தில் இந்த ஆலயம் வளரும் என யாரும் நினைத்துக்கூட பார்க்க முடியாத அளவு ஆலயம் வளர்ந்தது. இதற்கு முக்கிய காரணம் தலைவர் அமரர். பங்காரசாமி அவர்களின் கடும் உழைப்பே. எங்களையும் கடுமையாக உழைக்க வைத்தார்.

05.12.1993ம் நாள் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அன்றைய தினம் ஆலய கமிட்டி அங்கத்தவர்கள் அதிகரிக்கப்பட்டார்கள். தலைவராக திரும்பவும் அமரர். பங்காரசாமி அவர்களும், செயலாளராக திரு. ராகவன் அவர்களும், உப தலைவராக திரு. நாதன் அவர்களும், பொருளாளராகிய திரு.செல்லையா ஆகிய நானும் நியமிக்கப்பட்டதுடன், அங்கத்தவர்களாக திரு.கனகராஜ் (ஜனதா), திரு.சுபக்குமார் (ரகுலன்ஸ்), திரு. இராதாகிருஷ்ணன் (ராதாபீடி கம்பனி), திரு.மயில்வாகனம் (பலகொல்ல) திரு.பாலசுப்ரமணியம், திரு.பாஸ்கர் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர். உழுகங்கை ருத்ர சர்மா அவர்கள் ஆலய பூஜகராகவும் நியமிக்கப்பட்டார்.

21.03.1994ம் நாள் நானும் தலைவர் அமரர். பங்காரசாமி அவர்களும் திரு ராகவன் அவர்களும் விக்டோரியா ஆபிசிற்கு சென்று மகாவலி எஞ்சினியர் விஜயவிக்கிரம அவர்களையும் எஞ்சினியர் ஹேரத் அவர்களையும் சந்தித்து ஸ்ரீ முருகன் ஆலயம் 64 பேர்ச் மட்டுமே உள்ளது. ஆலயம் கட்டி இருக்கும் பகுதிக்கும் அளந்து பிளேன் போட்டு தருமாறு கேட்டுக்கொண்டதற்கு இணங்க மறுநாளே வந்து அளந்தார். பிளேன் போட்டு தருவதாக கூறிச் சென்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24.03.1994ம் தகதி இந்து கலாசார அமைச்சிற்கு அமைச்சர் வரச்சொல்லி இருந்தமையாயால் சென்றோம். என்ன ஆச்சரியம் நாங்கள் ஐந்து மாதத்தில் இவ்வளவு சிறப்பாக ஆலயத்தை கட்டியதற்கு பரிசாக மொறகாமலை ஸ்ரீ கதிரேசன் ஆலயத்திற்காக ஒதுக்கிய நிதியில் ரூபாய். இரண்டு லட்சம் கொடுத்து மிகுதி வேலைகளையும் செய்யச் சொன்னார்கள். முருகனின் திருவிளையாடல்களில் இதுவும் ஒன்று.

பல வருடங்களின் பின் மொறகாமலை முருகன் ஆலயத்தில் 27ம் திகதி மார்ச் மாதம் 1994 பங்குனி உத்தர உற்சவம் முதன்முதலாக ஆலய தெய்வ உற்சவம் நடந்தது. அன்றைய தினம் ஏறக்குறைய 100 பேருக்கு மேல் முதன்முதலாக அன்னதானம் கொடுத்து பங்குனி உத்தர பூஜையையும் செய்தோம். இதுபோல் பின்னால் வந்த ஒவ்வொரு பங்குனி உத்தர பூஜையும் இன்றுவரை நடைபெற்று வருகின்றது. 1996ஆம் வருடம் ஏப்ரல் 14ல் புதுவருடப் பிறப்பு நாளன்று பௌத்தர்களும் இந்துக்களும் ஆலயத்தில் நிறைந்து காணப்பட்டமை எல்லோருக்கும் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது.

1994.05.11 இந்தியாவின் மீனாட்சி அம்மன் ஆலய சுவாமிகள் பிரம்ம ஸ்ரீ ஐயப்பட்டார் ஆலயம் வந்தார். 09.09.1994 அன்று கும்பாபிஷேகம் செய்யவும் 22.10.94ஆம் நாள் தேர்த்திருவிழாவை நடாத்தவும் திகதி குறிப்பிட்டு கொடுத்தார்.

1994.05.29ம் நாள் இலங்கை வந்திருந்த பிரபல பின்னணி பாடகர் அமரர் **T.M.** சௌந்தராஜன் அவர்கள் மொரகாமலை சென்று "தண்ணீர் நிறைந்த தாமரை பூப்போல் உள்ள முருகன் ஆலயத்தில் தங்க விக்கிரகமாக முருகப்பெருமான் கண்களுக்கு தென்பட்டார்" எனகூறி பெருமைப்பட்டார்.

1994.06.17ம் நாள் கும்பாபிஷேகத்திற்கும் விக்கிரகங்கள் வாங்குவதற்கும் இந்து சமய கலாசார அலுவல்கள் அமைச்சு 314000 ரூபாவை கொழும்பிற்கு எங்களை அழைத்து கொடுத்தது. 1994ம் ஆண்டு ஜூலை 13ம் திகதி மூலஸ்தானம் முதல் நவகிரக மகாவிஷ்ணு, ஸ்ரீ விநாயகர், ஸ்ரீ துர்க்கை அம்மன் ஆகிய கோயில்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. மறுபுறம் கும்பாபிஷேக வேலை மும்முரமாக நடைபெற்றது.

மேற்கூறப்பட்ட இறைவனுக்குரிய கற்சிலைகளை ராதாபீடி கம்பனியின் திரு. இராதாகிருஷ்ணன் அவர்கள் முன்வந்து இந்தியா சென்று சிலைகள் கொண்டுவருவதாக சொன்னார். இந்து கலாசார அமைச்சின் அனுமதி பெற்ற பத்திரத்துடனேயே இந்தியா சென்றார். ஆனால் கும்பாபிஷேக நாளான 08.09.1994 வியாழக்கிழமை வரை சிலைகள் எமக்கு கிடைக்கவில்லை. பலரும் முருகனை வேண்டினர், இதன் பயனாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்பாராத வித்தில் முருகனின் அருளாளே திருவாளர் இராதாகிருஷ்ணன் அவர்கள் 09.09.1994 கும்பாபிஷேக தினத்தன்று சிலைகளை கொண்டுவந்தார். அவ்விடயம் பொது மக்களுக்கு ஒரு வியப்பை ஏற்படுத்தியது. அதன் பின்னரே பிரபல பிரம்ம ஸ்ரீ விஸ்வநாதக் குருக்களோடு கூடிய குழுவினர் இணைந்து அனைத்து விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்து காலை 9.45 மணி சுபவேளையில் வெகுவிமரிசையாக கும்பாபிஷேக பெருவிழாவை நடாத்தினர். மக்கள் கூட்டம் அதிரும்படி அரோஹரா மந்திரம் சொல்லி அந்த நிகழ்வை செவ்வனே நிறைவேற்றினோம். இன்றும் அந்த கும்பாபிஷேகம் தொடர்பாக கதைப்பவர்கள் உளர். இன்னும் ஒரு விஷேசம் என்னவென்றால் இந்தியாவில் அடைக்கப்பட்ட விக்கிரக பெட்டியை எந்தவொரு சுங்க அதிகாரியும் திறந்து பார்க்கவில்லை. மிக பாரமான விக்கிரகங்கள் வெகு இலகுவாக சிரமமே இல்லாமல் முருகன் ஆலயம் வந்தடைந்ததை என்னால் மறக்க முடியாது. கும்பாபிஷேக முகூர்த்த நேரம் முடியுமுன் அனைத்து விக்கிரகங்களையும் பிரதிஷ்டை செய்தமை மிகவும் மனமகிழ்ச்சியாக இருந்தது. பிரம்ம ஸ்ரீ விஸ்வநாத குருக்கள் எங்களுடைய ஆலயத்தைப் பற்றி புகழ்ந்து பேசினார்.

22.10.1994 வரை தொடர்ந்து மாலை 3.30 மணிமுதல் மண்டலாபிஷேகப் பூஜைகள் நிறைந்த கூட்டத்துடன் நடைபெற்றது. 23.10.1994ம் நாள் காலை 7 மணிக்கு திகன ஒருத்தட்டு ஆற்றங்கரையிலிருந்து பரவகாவடி ஆட்டங்களுடன் வேல் பூட்டிய பரவகாவடிக்காரர்கள் சகிதம் குறைந்தது 15-20 லொறிகளில் ஒரு லாறிக்கு 3 பேர் வீதம் பரவ காவடிகளில் தொங்கி வந்தனர். பௌத்தர்களும், இந்துக்களும் நிறைந்து அரோ..ஹரா கோஷத்துடன் தெல்தெனிய நகரை வந்தடைந்தனர். அதேபோல் கலேகெல வுட்-சைட் வழியாகவும் நிறைய காவடிகளும் மெதமஹாநுவர வழியாகவும் மக்கள் வந்தடைந்தார்கள். தொடர்ந்து அன்றைய தினம் அன்னதான பொதிகளை பகல் 12.30 ற்கு தொடங்கி மாலை 6 மணிவரை கொடுத்து கொண்டிருந்த காட்சிகளும் மறுபக்கம் தீக்குளி இறங்கும் காட்சிகளும், மக்கள் அலைகளும் கண்ணைக் கவர்ந்தன. அடுத்து திருக்கல்யாண வைபவம் நடைபெறும். திருக்கல்யாண பூஜைகள் முடிய தேர்த்திருவிழா ஆரம்பிக்கும். 20 வருடங்களுக்குப் பின் தேர் ஒன்று அழகாக மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இரவு பூஜைகள் அனைத்தும் முடிந்த பின் ஸ்ரீ முருகப் பெருமான் வள்ளி தெய்வானை சமேதராய் தேரிலே ஏற்றிவர தேருக்கு முன்னால் வழிபிள்ளையாருக்கு முன் நூற்றுக்கணக்கான சிதர் தேங்காய்கள் உடைத்து, வாத்திய இசைகள் முழங்க கரகம் காவடி, கண்டிய நடனம் போன்ற பல நிகழ்வுகள் முன்னே நடைபெற தேருக்கு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமருங்கிலும் பூஜை தட்டுடன் அடியார்கள் அர்ச்சனை செய்ய அரோஹரா என்ற கோசங்களும் எமது பக்தியின் புனிதத்துவத்தை தொட்டன. மொறகாமலை முதல் மெதமஹாநுவர நகர்வரை நெடுகிலும் வாழைமர, தென்னம் குருத்து ஓலைகளால் அலங்கரிக்கப்பட்ட மிக அழகாக இருந்தது. தேர் மெதமஹாநுவர நகரை சென்றடைந்தது. அங்கு நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. அதிகாலை 6.00 மணிக்கு மெதமஹாநுவர சந்தியில் இருந்து தேர் மீண்டும் ஆலயம் சென்று அங்கு தீர்த்தோற்சவமும் மகாவெலி கங்கையில் நிறைவேற்றப்பட்டு, மாலை வைரவர் பூஜையுடன் திருவிழா நிறைவேறியது. முருகாமலை ஆலயத்தில் உதயசூரிய ஒளிச்சுடராக வந்து ஆலயத்தை நன்கு கட்டியெழுப்பி கும்பாபிஷேகம், திருவிழா என்பவற்றை நடாத்திவிட்டு பின்னர் இருதய நோய் காரணமாக இந்தியா செல்ல டிக்கட்டும் வாங்கி மறுநாள் காலை இந்தியாவிற்கு செல்ல ஏற்பாடு செய்துக் கொண்டிருந்தபோது என்ன கொடுமை நீ இந்தியாவிற்கு சத்திர சிகிச்சைக்கு போக வேண்டாம், நீ என்னிடம் வந்துவிடு என தூய உள்ளம் கொண்ட அவரை மாரடைப்பு என்ற மாயத்தில் அவருடைய சொர்க்க வாசலுக்கே அழைத்துக் கொண்டார். மார்கழி மாதம் வந்தால் சொர்க்கம் செல்வார்களாம். அதேபோல் அமரராக எங்களையெல்லாம் கடும் சோகத்தில் ஆழ்த்திவிட்டு சொர்க்க வாயிலை அடைந்தார். அவரது மபூதவுடலை கண்டி, ஹந்தானை தோட்ட பங்களா வளவில் அடக்கம் பண்ண கிடைத்தது. 1993ல் வரும்போது வந்தாய், செல்லும் போது எமது ஆலயத்திலும் உள்ளங்களிலும் பங்காளன் சுவாமியாக சென்றீர்கள். நீங்கள் என்றென்றும் எங்கள் உள்ளம் நிறைந்த பங்காளனாக விளங்க இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

மூன்று மாதங்கள் உருண்டோடின. அப்போதைய உபதலைவராக இருந்த திரு. நாதன் அவர்களின் கீழ் ஆலயம் இயங்கியது. நுவரெலியாவில் ஒரு வயதான குருக்களை அழைப்பித்தோம். சில காலங்கள் இருந்தார். திடீரென ஆலயத்தை பூட்டி சென்று விட்டார். மேலும் வழக்கு வேறு தாக்கல் செய்தார். உப தலைவர் நிர்வாகத்தின் கீழ் மின்சார கட்டணம் கூட கட்ட முடியாத நிலைமை. 1995.04.18 அன்று கண்டி பிள்ளையார் கோயில் சென்று அங்கு முன்கூட்டியே சொல்லியிருந்தபடி பிரம்ம ஸ்ரீ சண்முக குருக்கள் வந்திருந்தார். அவரை அழைத்து மொரகாமலை கோயிலுக்குச் சென்று மாலை ஆலயத்தை கழுவி பூஜைகளை ஆரம்பித்து வைத்ததன் பின் பெரும் மகிழ்ச்சியாக இருந்தது. நல்ல ஒரு பூசகர் ஆலயத்திற்கு கிடைத்தது. 1995.05.01 புதிதாக வந்த ஐயருக்கு பழைய ஐயரின் வீட்டை பாரம் கொடுத்தோம். ஐயர் பிரச்சினை முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த கவலை தலைவரை தேர்ந்தெடுப்பது. அன்றைய காலத்தில் மக்கள் செல்வாக்கு நிறைந்த பெரும் கொடை வள்ளல் திரு.முத்தையா அவர்கள் அவரை முருகாமலை ஆலய தலைவராக அமைய வேண்டி முருகனை பிரார்த்தித்தேன்.

மே 05ம் திகதி நானும் திரு.பாஸ்கரன், திரு.சிவக்குமார், திரு. கருப்பையா ஆகியோர் லக்கிலேண்ட் அதிபர் திரு.S.முத்தையா அவர்களை சந்தித்தோம். அவருடைய தலைவர் பதவியை பற்றி கூறினேன். முதலில் மறுத்தார் கடைசியாக சம்மதித்தார். அளவுக்கு மீறிய சந்தோஷத்தில் ஆலயம் வந்து நடந்த விடயங்களை கூறியதற்கு திரு. நாதன் போன்றோர் எதிர்ப்பு தெரிவித்தனர். பின் 21.5.1995ம் நாள் ஆலயத்தில் அங்கத்தவர்கள் லக்கிலேண்ட் உரிமையாளர் திரு. S.முத்தையா அவர்களை ஏகமானதாகவும் ஆயுள்கால தலைவராகவும் நியமித்தோம். 02.06.1995ம் திகதி வெள்ளிக்கிழமை முருகாமலை ஸ்ரீ முருகன் ஆலத்தின் பெரும் தலைவர் திரு. S. முத்தையா அவர்களை ஆலயத்திற்கு அழைத்து பொதுகூட்டம் வைத்து பொன்னாடை போர்த்தி தலைவராக நியமித்த பொன் நாள். 1995ம் வருட திருவிழா ஆகஸ்ட் மாதம் 19ம் திகதி முதலாம் பூஜை தலைவர் திரு. S.முத்தையா அவர்களின் உபயமாக ஆரம்பித்து வைத்தார். 16 நாட்கள் உபயம் நடந்து இரண்டாம் வருட கும்பாபிஷேக நாளான ஆவணி மூலம் நிறைந்த திருவிழாவும் தேரோட்ட திருவிழாவும் வெகு விமர்சையாக நடந்தது. மறுநாள் திங்கட்கிழமை தீர்த்த உற்சவத்துடன் விழா அழகாக நடந்தேறியது.

1995.12.30ம் திகதி அன்று இந்திய உதவி ஸ்தானிகராக இருந்த மாண்புமிகு. கருப்பையா அவர்கள் ஆலயத்திற்கு வந்திருந்தார். எப்படி எனில் கண்டியில் தனது இல்லத்திலிருந்து தனியாக கால்நடை பயணமாக ஒரு ஆடம்பரம் இல்லாமல் பூசை செய்துக்கொண்டிருந்தார். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. "என்ன சார் வாகனமில்லையா என்றேன். அதற்கு பதிலாக இல்லை ஐயா நான் முருகாமலை முருகனுக்கு ஒரு நேர்த்தி வைத்திருந்தேன். சீகிரிய மலையில் ஏறும்போது தவறி விழுந்து விட்டேன். இடுப்பு அடிபட்டு நடக்க முடியாது இருந்தேன். அன்று முருகாமலை கந்தனை வேண்டி நேர்த்தி போட்டேன். என் காலும் இடுப்பும் சுகமானால் கண்டியிலிருந்து முருகாமலை முருகன் ஆலயத்திற்கு நடந்தே கந்தனை தரிசிக்க வருவதாக நினைத்தேன். கால் குணமாகிவிட்டது. நினைத்த நேர்த்திக் கடனை நிறைவேற்ற அதிகாலையில் நடக்க ஆரம்பித்தேன். 31 கிலோமீற்றரையும் தனியே நடந்து வந்தேன். ஆனால் ஒரு கஷ்டமும் தெரியவில்லையே என்றார்". நான் ஆச்சரியமாக அவரைப் பார்த்தேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1996.02.04ம் திகதி ஒரு துர்க்கை அம்மன் கட்டாயம் தேவையென்ற காரணத்தால் முன்பே எடுத்து வந்திருந்த துர்க்கை அம்மன் விக்கிரகத்தை இன்றைய நாள் பிரதிஷ்டை செய்து சிறிய கும்பாபிஷேகமாக செய்தோம். அதற்கு முக்கியஸ்தர்களாக இந்திய உதவித் தூதுவர் மாண்புமிகு கருப்பையா அவர்களும் தலைவர் திரு. முத்தையா அவர்களும் வந்திருந்தனர். காசன் கருப்பையா அவர்கள் அன்னதானம் வழங்கினார்.

1996.08.18 வெள்ளிக்கிழமையன்று ஆவணிமூல திருவிழா ஆரம்பநாள் தலைவர் திரு.முத்தையா அவர்களின் உபய பூஜையுடன் ஆரம்பமாகி 19ம் திகதி திங்கட்கிழமை இந்திய உயர் ஸ்தானிகர் மாண்புமிகு கருப்பையா அவர்களின் உபயமும் நிகழ்ந்தது. குடும்பத்தார்களோடு உபயம் செய்தார். 24ம் திகதி சனிக்கிழமை ஆவணிமூல திருவிழா வெகு விமர்சையாக நடந்தேறியது. 25ம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் இனிதே நிறைவேறியது.

1997ம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 2ம் திகதி திருவிழா பூஜைகள் ஆரம்பமாகி 11.09.1997ம் நாள் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் கரகம், காவடி ஆட்டங்களுடனும் பகல் அன்னதானம் 12.30க்கு தொடங்கி இரவு 7 மணி வரை நடைபெற்றது. முக்கிய பிரமுகர்களும் பொது மக்களும் நிறைந்து காணப்பட்டனர். நீண்ட தேர்த்திருவிழா ஊர்வலமும் நடைபெற்றது. 12.09.1997ம் நாள் வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெற்றது.

1998.08.23ம் திகதி வருடாந்த ஆவணி மூல திருவிழா ஆரம்ப நாளான அன்று பாராளுமன்ற உறுப்பினர் திரு.இராஜரட்ணம் அவர்களும் திரு.மதியுகராஜா அவர்களும் விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தனர். பின்னர் அபிஷேக பூஜை நடைபெற்று 1998.09.01 அன்று காலை 7 மணி முதல் ஒவ்வொரு வருடமும் நடைபெறுவதைப்போல் இவ்வருடமும் திருவிழா பிரமாண்டமாக நடைபெற்றது. 1998.09.2ம் நாள் தீர்த்த உற்சவத்துடன் விழா இனிதே நிறைவு பெற்றது.

1999.02.26 வெள்ளிக்கிழமை அன்று அளவத்துக்கொடை சிற்பி இந்திரநாதன் அவர்களினால் திரு. முத்தையா நான் மற்றும், திரு. ராகவன் ஆகியோருடன் இன்னும் பலர் சேர்ந்து ஸ்ரீ வெங்கடாசலபதி, ஸ்ரீ மகாலக்ஷ்மி, ஸ்ரீ முத்துமாரியம்மன், ஸ்ரீ ஐயப்பசுவாமி முதலிய தெய்வ விக்கிரகங்களுக்கு அடிக்கல் நாட்டினோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999.08.17 செவ்வாய்க்கிழமை அன்று ஆவணிமூல திருவிழா ஆரம்பமானது. தலைவர் திரு. முத்தையா விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார். ஆகஸ்ட் மாதம் 21ம் திகதி காலை 9 மணி முதல் பூஜைகள் அன்னதானம், பரவகாவடி, தீ மிதிப்பு வைபவம், திருக்கல்யாணம் முடிய தேர்த்திருவிழா ஆரம்பமாகி மறுநாளான ஞாயிற்றுக்கிழமை 23ம் திகதி தீர்த்த உற்சவத்துடன் இனிதே மக்கள் நிறைந்து பக்தி மயமான திருவிழாவாக முடிவடைந்தது.

2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஆவனி மூல திருவிழா ஆரம்பநாள். தலைவர் முதல் சகலரும் ஆலய உபய பூஜையில் கலந்து திருவிழாவை ஆரம்பித்து வைத்தோம். செப்டம்பர் மாதம் 07ம் திகதி வியாழக்கிழமை காலையில் ஓரதொட்ட ஆற்றங்கரையில் காலை 07மணிக்கு 19 லொரிகளில் பரவகாவடி, காவடி சகிதம் ஆலயத்தை நோக்கி வர மற்றும் மெதமஹாநுவர வழியாகவும் பல பரவ காவடிகள் வர மெதமகாநுவர நகர் முதல் திகன நகர் வரை நிறைந்து ஜன கூட்டம் காணப்பட்டது. பகல் அன்னதானமும், தீ மிதிப்பு போன்றவைகளில் பக்தர்கள் கலந்து கொண்டனர். மாலை 06 மணிக்கு தேர் திருவிழா பல நடனங்களுக்கு மத்தியில் ஆயிரக்கணக்கான மக்கள் மத்தியில் ஊர்வலத்தோடு மெதமஹாநுவர நகரை காலை 06 மணிக்கு சென்றடைந்தது. மறுநாளான வெள்ளிக்கிழமை தீர்த்த உற்சவத்தோடு விழா இனிதே முடிவடைந்தது.

2001ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 02ம் திகதி திங்கட்கிழமை ஆவனி மூல திருவிழாவை தலைவர் திரு. முத்தையா அவர்களோடு, செயலாளர் திரு. பழனி அப்பன் ஆசியோடு விழக்கேற்றி துவங்கி வைத்தனர். 28ம் திகதி செவ்வாய் கிழமை நிறைந்த மக்கள் கூட்டத்துடன் சென்ற வருடம் போலவே விமர்சையாக திருவிழா நடைபெற்றது.

2002 ஆம் வருட பங்குனி உத்திரம் 28.03.2002ம் ஆண்டு கொழும்பு செட்டியார் தெரு, ஜெயலலிதா ஜுவலர்ஸ் உரிமையாளரால் வெகு விமரிசையாக மக்கள் நிறைந்த பூஜையாக நடந்தது. 03.07.2002 நாள் ஆலய செயலாளர் ஆலயத்துக்கு வெண்கல விநாயகர் சிலை ஒன்றை அன்பளிப்பாக கொடுத்தார். அன்று பொதுக்கூட்டம் கூடியது. அவர் அன்பளிப்பு செய்த விநாயகரால் இம்முறை இரண்டு தேர் ஆவனிமூல திருவிழாவுக்கு எடுப்பதாக முடிவெடுத்தோம். அதே போல் 15.09.2002ஆம் நாள் புதன் கிழமை முருகா மலை ஸ்ரீ முருகன் ஆலய ஆவனி மூல திருவிழாவிற்கு இரண்டு தேர் வீதி வழிவந்தது. ஒன்று விநாயகர் மற்றது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானுக்கு, பரவ காவடி, காவடியுடன் இவ்வருட விழாவும் மிக மிக சிறப்பாக அமைந்தது. முருகா மலை முருகன் ஆலயத்தின் வரலாற்றிலே இது முதல் முறை இரண்டு தேர் பவனி வந்தமை குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டு ஆகட்ஸ் மாதம் 26ஆம் திகதி ஆவணி மூல திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை பலகொல்லையை சேர்ந்த பொபி ஹாட்வெயார் உரிமையாளர் திரு. புஸ்பலிங்கம் அவர்கள் இரண்டு அடி உயரமாக ஸ்ரீ முத்துமாரியம்மன் வெண்கல சிலையை அன்பளிப்பு செய்து அவர் செலவில் ஒரு தேர் ஊர்வலமாக வரவேண்டும் என சொல்வதோடு இல்லாமல் 2003ஆம் ஆண்டு ஆவணி மூல திருவிழாவான செப்டம்பர் மாதம் 04ம் திகதி செவ்வாய்க்கிழமை மூன்று தேர் எடுப்பதற்கு மிகவும் பாடுபட்டார். அவரின் தூண்டுதளின் பேயரில் 2003ஆம் ஆண்டு ஆவணி மூலதிருவிழா மூன்று தேர் திருவிழாவாக நடைபெற்றது. முதல் தேர் ஸ்ரீ விநாயக பெருமானுக்கும் இரண்டாம் தேர் முருக பெருமானுக்கும் மூன்றாவது தேர் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேராகவும் மூன்று தேரும் கண்டிய நடனம், காவடி ஆட்டம் போன்ற பல்வேறு நடன நிகழ்ச்சிகளோடு தேர் திருவிழா கண்டி பெரஹரா போன்று நீண்ட தேர் திருவிழாவாகவும் மக்கள் வெள்ளம் நிறைந்த பெருவிழாவாக நடைபெற்றது.

2004ஆம் ஆண்டு பங்குனி உத்திரம் பூஜையும் விமர்சையாக நடந்தது. ஆலயத்தில் உள்ள விநாயகர் எழுந்தருளி வெண்கல சிலையும் எழுந்தருளி ஸ்ரீ முத்துமாரியம்மன் சிலையும் பெரிய சிலைகளாக இருந்தன. ஆனால் மூல மூர்த்தி தெய்வமான ஸ்ரீ முருகன் வள்ளி தெய்வானை சிலைகள் மிகவும் சிறிதாக இருந்தமையினால் எனது மனதில் தோன்றியது, அன்பளிப்பாக பெரிய ஸ்ரீ முருகன் வெண்கல சிலையுடன் ஸ்ரீ வள்ளி, தெய்வானை சிலைகளையும் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கு அன்பளிப்பாக வழங்க வேண்டுமென உடனே கொழும்பு செட்டியார்தெரு 138 இல் உள்ள "ஹேமாஸ் ஜுவலர்ஸ்" திரு. நடராஜ் அவர்களிடம் இந்த விடயத்தை எடுத்து கூறியதற்கினங்க அவர் உடனேயே இந்தியாவில் இருந்து இரண்டரையடி உயரமான மூன்று சிலைகள் எனக்காக கொண்டு வந்து கொடுத்தார். அழகான சிலைகளாகவும், ஆலயம் நிறைந்த சிலைகளாகவும் இருந்தது. எனது மனமும் மகிழ்ச்சியில் நிறைந்து இருந்தது. எனக்கிருந்த பெரிய குறையும் நிறைவேறியது. இவ்வருட ஆவணி மூல திருவிழா 29.08.2004 நாள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. நிறைந்த பரவ காவடிகள், காவடிகள், மக்கள் வெள்ளம்நிரம்பி வழிய, அன்னதானம், தீ மிதிப்பு போன்ற நிறைந்த விழாவாக அமைந்தது. மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆறு மணிக்கு முதல் தேரில் ஸ்ரீ விநாயக பெருமானும் இரண்டாம் தேரில் புதிதாக எழுந்தருளிய ஸ்ரீ முருகன் வள்ளி தெய்வானையின் கம்பீர தோற்றம் மூன்றாம் தேரில் ஸ்ரீ முத்துமாரியம்மன் பவனி வரும் கட்சிகள் வெகு விமர்சையாகவும், கண்கொல்லாக்காட்சியாகவும் இருந்தன. நடன ஆட்டங்கள் நிறைந்த ஊர்வலம் முருகா மலை ஸ்ரீ முருகனின் பக்த பெரு மக்கள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் இருந்தன. அதே போல் சக்தியும் பக்தியும் நிறைந்த ஆலயமாக மாறியது.

2005ஆம் வருடம் நன்றாக திருவிழாக்களை நடத்தினோம். சென்ற வருடம் போலவே எல்லாம் நடந்தேரின. மக்கள் வெள்ளமும் குறைவில்லை ஆவணி மூல விழாவும் வெகு சிறப்பாக நடந்தேரியது. இவ்வருடம் மூன்று தேர் திருவிழாவில் பவனி வந்தன.

2006ஆம் ஆண்டும் வந்தது. ஆலயத்தில் கமிட்டி கூட்டம் நடைபெற்றது. சில முடிவுகள் பிழையான முடிவுகளாக தோன்றின. கூட்டத்தில் 2006ஆம் வருடம் தேர் எடுக்க கூடாது. இவ்வருடம் கும்பாபிஷேகம் செய்து சரியாக 12 வருடம் முடிந்து 2006 ஆவணி மூலம் வந்தால் 13வது வருடம் ஆரம்பமாகும். அதனால் இந்த வருடம் திருவிழா செய்யாமல் பாலஸ்தானம் செய்வோம் என்றேன். சிலர் அதை ஆமோதித்தார்கள். இந்த வருடம் திருவிழா செய்தே ஆக வேண்டும் என்று பலர் கூறினர். நானும் திருவிழாவில் கலந்துகொள்ளாமல் பக்க உதவிகள் செய்து கொண்டிருந்தேன். ஆவணி மூல திருவிழாவும் ஆகட்ஸ் மாதம் 27ஆம் நாள் ஆரம்பமாகியது. சரியான மழை செப்டம்பர் மாதம் 05ம் நாள் தேர் திருவிழாவும் நடக்கயிருந்த நாள் சரியான மழை நாளாக இருந்தது. நான் முயற்சி எடுக்காததால் ஒரு தேர் மட்டும் திருவிழாவில் எடுப்பதாக முடிவு செய்யப்பட்டது. திருவிழாக்கள் வழமையாக நடைபெற்றது போல் நடைபெற்றது.

மாலை 07 மணிக்கு எடுக்க வேண்டிய தேர் 10 மணிக்கே ஆலயத்தில் இருந்து புறப்பட்டு விடிய 05 மணிக்கே மெத மஹாநுவர நகரை சென்றடைந்து பூஜைகள் நடந்து முடிந்த பின் திரும்ப ஆலயம் வரும் வழியில் தேர் தடம் புறண்டு விட்டது. சுவாமி சிலைகளும் விழுந்து விட்டதன் பின் சிலைகள் எடுத்து வேனில் ஏற்றி ஆலயம் வந்தனர். நான் இதை கேள்விபட்டதும் சரியான கவலையடைந்தேன். அழுதே விட்டேன். மற்றவர்களுக்கும் சரியான கவலை. நான் ஆரம்ப ஆலய பொதுக்கூட்டத்தில் சொன்னது போல் நடந்து விட்டது. குருக்களும் அதயே சொன்னார். பொருளாளர் சொன்னபடியே நடந்து விட்டது. காரணம் எந்த ஆலயமும் 12ஆம் வருடத்துக்கு பின் பாலஸ்தானட் செய்த பின்பே கும்பாபிஷேகம் செய்ய வேண்டும். ஒரு ஆலய கும்பாபிஷேக மகிமையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகப்பெருமானுக்கு, பரவ காவடி, காவடியுடன் இவ்வருட விழாவும் மிக மிக சிறப்பாக அமைந்தது. முருகா மலை முருகன் ஆலயத்தின் வரலாற்றிலே இது முதல் முறை இரண்டு தேர் பவனி வந்தமை குறிப்பிடத்தக்கது.

2003ஆம் ஆண்டு ஆகட்ஸ் மாதம் 26ஆம் திகதி ஆவனி மூல திருவிழா ஆரம்பிக்கப்பட்டது. இம்முறை பலகொல்லையை சேர்ந்த பொபி ஹாட்வெயார் உரிமையாளர் திரு. புஸ்பலிங்கம் அவர்கள் இரண்டு அடி உயரமாக ஸ்ரீ முத்துமாரியம்மன் வெண்கல சிலையை அன்பளிப்பு செய்து அவர் செலவில் ஒரு தேர் ஊர்வலமாக வரவேண்டும் என சொல்வதோடு இல்லாமல் 2003ஆம் ஆண்டு ஆவணி மூல திருவிழாவான செப்டம்பர் மாதம் 04ம் திகதி செவ்வாய்க்கிழமை மூன்று தேர் எடுப்பதற்கு மிகவும் பாடுபட்டார். அவரின் தூண்டுதளின் பேயரில் 2003ஆம் ஆண்டு ஆவனி மூலதிருவிழா மூன்று தேர் திருவிழாவாக நடைபெற்றது. முதல் தேர் ஸ்ரீ விநாயக பெருமானுக்கும் இரண்டாம் தேர் முருக பெருமானுக்கும் மூன்றாவது தேர் ஸ்ரீ முத்துமாரியம்மன் தேராகவும் மூன்று தேரும் கண்டிய நடனம், காவடி ஆட்டம் போன்ற பல்வேறு நடன நிகழ்ச்சிகளோடு தேர் திருவிழா கண்டி பெரஹரா போன்று நீண்ட தேர் திருவிழாவாகவும் மக்கள் வெள்ளம் நிறைந்த பெருவிழாவாக நடைபெற்றது.

2004ஆம் ஆண்டு பங்குனி உத்திரம் பூஜையும் விமர்சையாக நடந்தது. ஆலயத்தில் உள்ள விநாயகர் எழுந்தருளி வெண்கல சிலையும் எழுந்தருளி ஸ்ரீ முத்துமாரியம்மன் சிலையும் பெரிய சிலைகளாக இருந்தன. ஆனால் மூல மூர்த்தி தெய்வமான ஸ்ரீ முருகன் வள்ளி தெய்வானை சிலைகள் மிகவும் சிறிதாக இருந்தமையினால் எனது மனதில் தோன்றியது, அன்பளிப்பாக பெரிய ஸ்ரீ முருகன் வெண்கல சிலையுடன் ஸ்ரீ வள்ளி, தெய்வானை சிலைகளையும் ஸ்ரீ முருகன் ஆலயத்துக்கு அன்பளிப்பாக வழங்க வேண்டுமென உடனே கொழும்பு செட்டியார்தெரு 138 இல் உள்ள "ஹேமாஸ் ஜுவலர்ஸ்" திரு. நடராஜ் அவர்களிடம் இந்த விடயத்தை எடுத்து கூறியதற்கினங்க அவர் உடனேயே இந்தியாவில் இருந்து இரண்டரையடி உயரமான மூன்று சிலைகள் எனக்காக கொண்டு வந்து கொடுத்தார். அழகான சிலைகளாகவும், ஆலயம் நிறைந்த சிலைகளாகவும் இருந்தது. எனது மனமும் மகிழ்ச்சியில் நிறைந்து இருந்தது. எனக்கிருந்த பெரிய குறையும் நிறைவேறியது. இவ்வருட ஆவணி மூல திருவிழா 29.08.2004 நாள் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகி செப்டெம்பர் மாதம் 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வெகு விமரிசையாக நடைபெற்றது. நிறைந்த பரவ காவடிகள், காவடிகள், மக்கள் வெள்ளம்நிரம்பி வழிய, அன்னதானம், தீ மிதிப்பு போன்ற நிறைந்த விழாவாக அமைந்தது. மாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்ல உள்ளம் படைத்த நல்லவர். பெருமை படுகிறோம். இன்று இந்த ஆலயம் வளர்ச்சிப்பெற்று வளர பெரும் பகுதி வேலைகள் அவராலேயே முடிவிற்கு வந்துள்ளது. அவரின் வளர்ச்சி இன்னும் வளர வேண்டும் என முருகா மலை முருகனிடம் வேண்டுகின்றோம். ஆர்.அன்பழகன் அவர்கள் இந்த ஆலயம் வளர வேண்டுமென விடமுயற்சியாக சேவை செய்தவர் தனது வேலைகளையும் விட்டு ஆலயத்தின் மேல் கண்ணும், கருத்துமாய் சேவை செய்பவர். நாங்கள் ஆலயம் கட்டி முடிக்க முடியாமல் இருந்த நேரத்தில் நானும் திரு. கனகராஜ் அவர்களும் இருக்கின்றோம். ஏன் பயப்படுகின்றீர்கள் என எங்களை தட்டி எழுப்பி ஆலயம் கட்டி முடித்து கும்பாபிஷேகம் வரை இந்த ஆலயத்தை வளர்ந்து விட்ட நல்ல எண்ணம் கொண்டவர்.

மற்றும் இந்த முருகாமலை ஸ்ரீ முருகன் தேவஸ்தானம் கட்டி முடித்து கும்பாபிஷேகம் வரை செல்ல உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் பொருளாகவோ, பணமாகவோ, உடல் உழைப்பாகவோ கொடுத்து உதவிய அனைத்து முருகாமலை ஸ்ரீ முருக பக்தர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ முருக பெருமானின் அருளோடு அனைத்து செல்வங்களும் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டுகிறேன்.

வளர்க சைவ நீதி
வாழ்க சைவ மதம்
பெருகுக முருகா மலை முருகன் சக்தி

பெரியையா செல்லையா,
பொருளாளர்,
ஸ்ரீ முருகன் தேவஸ்தானம்,
முருகாமலை.
30.10.2013





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இவ்வாலயம் தொடர்பான கிடைக்கப்பெற்ற, முக்கிய வரலாற்று சான்றுகள்..





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1994ம் ஆண்டு ஆலய கட்டிடம்,
மூலஸ்தான கோபுரம் கட்டும் சமயம்..



1994 ஆலய திருப்பணி



1994 கும்பாபிஷேகம்



பல ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட
வாயில் கோபுரம், தற்பொழுது புதுப்பித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1993ம் ஆண்டு ஆலயத்தில் முதல் முதளில் பூஜைசெய்த பூசகர் ருத்ர சர்மா அவர்கள்.



ஜமுனாராணி இசை நிகழ்ச்சியில் இந்து கலாசார அமைச்சர் மேன்மைதங்கிய திரு. தேவராஜ் அவர்கள்



02-11-1993ம் ஆண்டு ஆலயத்திற்கு அடிக்கல் வைக்கிறார் பொருளாளர் திரு. செல்லையா அவர்கள்.



1993ம் ஆண்டு ஆலயத்தில் மிகுதியாக இருந்த சிலைகள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மஹா கும்பாபிஷேகத்தின் போது,
பௌத்த பிக்கு சொற்பொழிவு செய்யும் காட்சி..



மஹா கும்பாபிஷேக ஐயர் தட்சனை..



1999ம் ஆண்டு, ஆலய ஊழியர்களுக்கு தலைவர்
திரு. எஸ். முத்தையா அவர்கள் பரிசில் வழங்கும் காட்சி..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1994ம் ஆண்டு முதல் தீர்த்த உற்சவம்..



ஆலய கமிட்டி அங்கத்தவர்களின் தீபாராதனை..



1994ம் ஆண்டு முதல் முதளாக தேர் பவனி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தர் சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைப்போம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் - கதித்தோங்கும்
நிஷ்டையும் கைகூடும் நிமலர் அருள்கந்தர்
சஷ்டி கவசம் தனை.

## காப்பு

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி.

## நூல்

சஷ்டியை நோக்கச் சரவணபவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம்பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென் றுவந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்திசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோம் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோநம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியும் சௌவும் கிளரொளி ஐயம்
நிலைப்பெற் றென்முன் நித்தமு மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக
ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடும் நெற்றியுல் நீண்ட புருவமும்
பண்ணிரு கண்ணும் பவளச்செவ் வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செம்பழ குடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப்பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை யழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொகமொகமொகமொகமொகமொகென
நகநக நகநக நகநக நகெனெ
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து
என்றனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென்றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வே லிரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக லிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்ன மிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முளைமார் திருவேல் காக்க
வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பனைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிர லடியினை அருள்வேல் காக்க
கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதுமெனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி ல்நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை யகல
வல்லப்பூதம் வாலாஷ்டிகப் பேய்கள்
அல்லல் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமரா சஷதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை யடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைக ளென்பும்
நகமும் மயிரும் நீள்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய செருக்கும் ஒட்டிய பாவையும்
காசும் பணமும், காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும், ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிக்கெட்டோடப்
படியினிற் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுட னங்கம் கதறிடக் கட்டு!
கட்டி யுருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோட
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடுத்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதம் சயித்தியம் வலிப்பும் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரீதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரே ழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் மெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்திரு நாமம்
சரவண பவனே! சையொளி பவனே!
திரிபுர பவனே! திகழொளி பவனே!
பரிபுர பவனே! பவமொழி பவனே!
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா! கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முரகா!
தணிகா சலனே சங்கரன் புதல்வா!
கதிர்கா மத்துறை கதிர்வேல் முரகா!
பழநிப் பதிவாழ் பால குமாரா!
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா!
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா!
சமரா புரிவாழ் சண்முகத் தரசே!
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்னாவிருக்க, யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவசமாக
ஆடினேன் நாடினேன் ஆவின் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
'அன்புட னிரசஷி அன்னமும் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க!
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க!
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க!
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்!
வாழ்க வாழ்க வாரண துவசம்!
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் னீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட வருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துட னாளும்
ஆசா ரத்துடன் அங்கந் தலக்கி
நேச முடனொரு நினைவது வாகி
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவாகள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் செயலதருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாங் கவசத் தடியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிப்பொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்ரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அஷ்ட லட்சுமிகளின்
வீரலட் சுமிக்கு விருந்துண வாக
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க் குவந்தமு தளித்த
குரபரன் பழனிக் குன்றினிலிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலா போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்.

(கந்தசஷ்டி கவசம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருணகிரிநாதர் இயற்றியருளிய

# கந்தர் அலங்காரம்

(பொறுக்கு மணிகள்)

பேற்றைத் தவம்சற்றும் இல்லாத
என்னைப்ர பஞ்சம்என்னும்
சேற்றைக் கழிய வழிவிட்ட
வாசெஞ் சடாடவிமேல்
ஆற்றைப் பணியை இதழியைத்
தும்பையை அம்புலியின்
கீற்றைப் புனைந்த பெருமான்
குமாரன்க்ரு பாகரனே.

அழித்துப் பிறக்கஒட்டா அயில்
வேலன் கவியை அன்பால்
எழுத்துப் பிழைஅறக் கற்கின்றி
லீர்எரி மூண்டதென்ன
விழித்துப் புகைஎழப் பொங்குவெங்
கூற்றன் விடுங்கயிற்றால்
கழுத்தில் சுருக்கிட்டு இழுக்குமன்
றேகவி கற்கின்றதே.

தேன்என்று பாகுஎன்று உவமிக்
கொணமொழித் தெய்வவள்ளி
கோன்அன்று எனக்குப் தேசித்தது
ஒன்றுண்டு கூறவற்றே!
வான் அன்று கால்அன்று தீஅன்று
நீர்அன்று மண்ணும்அன்று
தான்அன்று நான்அன்று அசரீரி
அன்று சரீரிஅன்றே.

ஒருவரைப் பங்கில் உடையான்
குமாரன் உடைமணிசேர்
திருவரைக் கிண்கிணி ஓசை
படத்திடுக் கிட்டு அரக்கர்
வெருவரத் திக்குச் செவிபட்டு
எட்டுவெற் பும்கனகப்
பருவரைக் குன்றும் அதிர்ந்தன
தேவர் பயம்கெட்டதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோழிக் கொடியன் அடிபணி
யாமல் குவலயத்தே
வாழக் கருதும் மதிஇலி
காள்உங்கள் வல்வினைநோய்
ஊழின் பெருவலி உண்ணஒட்
டாது உங்கள் அத்தம்எல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு
மோதும் மடிப்பிறகே.

மொய்தார் அணிகுழல் வள்ளியை
வேட்டவன் முத்தமிழில்
வைதா ரையும் அங்கு வாழவைப்
போன்வெய்ய வாரணம்போல்
கைதான் இருபது உடையான்
தலைபத்தும் கத்தரிக்க
எய்தான் மருகன் உடையாள்
பயந்த இலஞ்சியமே.

வேலே விளக்குகை யான்செய்ய
தாளினில் வீழ்ந்திறைஞ்சி
மாலே கொனஇங்ஙன் காண்பதுஅல்
லால்மன வாக்குச்செய
லாலே அடைவதற்கு அரிதாய்
அருஉருவாகிஒன்று
போலே இருக்கும் பொருளைஎவ்
வாறு புகல்வதுவே.

முடியாப் பறவிக் கடலில்
புகார்முழு தும்கெடுக்கும்
மிடியால் படியில் விதனப்
படார்வெற்றி வேல்பெருமான்
அடியார்க்கு நல்ல பெருமான்
அவுணர் குலமடங்கப்
பொடியாக் கியபெரு மள்திரு
நாமம் புகல்பவரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாள்என் செயுவினை தான்என்
செயும்எனை நாடிவந்த
கோள்என் செயும்கொடுங் கூற்றுஎன்
செயுமகும ரேசர்இரு
தாளும் சிலம்பும் சதங்கையும்
தண்டையும் சண்முகமும்
தோளும் கடம்பும் எனக்குமுன்
னேவந்து தோன்றிடினே.

பத்தித் திருமுகம் ஆறுடன்
பன்னிரு தோள்களுமாய்த்
தித்தித் திருக்கும் அமுழுகண்
டேன்செயல் மாண்டடங்கப்
புத்திக் கமலத்து உருகிப்
பெருகிப் புவனம் ஏற்றித்
தத்திக் கரைபுர ளும்பர
மானந்த சாகரத்தே.

படிக்கும் திருப்புகழ் போற்றுவன்
கூற்றுவன் பாசத்தினால்
பிடிக்கும் பொழுதுவந்து அஞ்சல்என்
பாய்பெரும் பாம்பில்நின்று
நடிக்கும் பிரான்மரு காகொடுஞ்
சூரன் நடுங்கவெற்பை
இடிக்கும் கலாபத் தனிமயில்
ஏறும் இராவுத்தனே.

சிந்திக்கி லேன்நின்று சேவிக்கி
லேன்தண்டைச் சிற்றடியை
வந்திக்கி லேன்ஒன்றும் வாழ்த்துகி
லேன்மயில் வாகனனைச்
சந்திக்கி லேன்பொய்யை நிந்திக்கி
லேன்உண்மை சாதிக் கிலேன்
புந்திக்கி லேசமும் காயக்கி
லேசமும் போக்குதறகே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிக்கின் றிலைபழ நித்திரு
நாமம் படிப்பவர்தாள்
முடிக்கின் றிலைமுரு காஎன்
கிலைமுசி யாமல்இட்டு
பிடிக்கின் றிலைபர மானந்தம்
மேங்கொள விம்மிவிம்மி
நடிக்கின் றிலைநெஞ்ச மேதஞ்சம்
ஏது நமக்கினியே.

மாலோன் மருகனை மன்றாடி
மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான
தெய்வத்தை மேதினியில்
சேலார் வயல்பொழில் செங்கோ
டனைச்சென்று கண்டுதொழ
நாலா யிரம்கண் படைத்தில
னேஅந்த நான்முகனே.

கருமான் மருகனைச் செம்மான்
மகளைக் களவுகொண்டு
வருமா குலவனைச் சேவற்கைக்
கோளனை வானம்உய்யப்
பெருமா வினைச்செற்ற போர்வே
லனைக்கன்னிப் பூகமுடன்
தருமா மருவுசெங் கோடனை
வாழ்த்துகை சாலகன்றே.

கந்தர் அலங்காரம் முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் புகழ் முற்றும் பாடிய பலன் பெற

அருணகிரிநாதர் அருளிய திருஎழுகூற்றிகை

திருஞானசம்பந்த மூர்த்தி சுவாமிகள் பாடிய பதிகங்கள் முழுவதும் ஓதிய பயன் அவர் அருளிச் செய்த திருவெழு கூற்றிகை பாராயணத்தால் கிடைப்பது போலவே அருணகிரியார் அருளிய திருப்புகழ் முற்றும் ஓதிய பலன் கீழ்கண்ட திருஎழுக்கூற்றிருக்கை பாராயணம் செய்தால் கிட்டும் என்பது அறிஞர் கொள்கை.

ஓருரு வாகிய தாரகப் பிரமத்
தொருவகைத் தோற்றத் திருமர பெய்தி
ஒன்றாய் ஒன்றி இருவரிற் றோன்றி மூவா தாயினை;
இலபிறப் பானரின் ஒருவன் ஆயினை;
ஓராச் செய்கையின் இருமையின் முன்னாள்
நான்முகன் குடுமி இமைப்பினிற் பெயர்த்து
மூவரும் போந்து இருதாள் வேண்ட ஒருசிறை விடுத்தனை;
ஒருநொடி யதனில் இருசிறை மயிலின்
முந்நூர் உடுத்த நானிலம் அஞ்ச நீவலஞ் செய்தனை
நால்வகை மருப்பின் மும்மதத் திருசெவி
ஒருவகைப் பொருப்பன் மும்மதத் திருசெவி
ஒருவகைப் பொருப்பன் மகளை வேட்டனை;
ஒருவகை வடிவினில் இருவகை தாகிய
மும்மதன் தனக்கு மூத்தோன் ஆகி
நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள்
அறுகு சூடிச் கிளையோன் ஆயினை;
ஐந்தெழுத் ததனில் நான்மறை உணர்த்தும்
முக்கட் சுடரினை இருவினை மருந்துக் கொருகுரு வாயினை;
ஒருநாள் உமைஇரு முலைப்பால் அருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவன்என
எழில்தரும் அழகுடன் கழுமலத் துதித்தனை;
அறுமீன் பயந்தனை; ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்டு
அன்றில் அங்கிரி இருபிள வாக ஒருவேல் விடுத்தனை;
காவிரி வடகரை மேவிய குருகிரி இருந்த
ஆறெழுத் தந்தணர் அடியிணை போற்ற
ஏரகத் திறைவன் எனஇருந் தனையே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகன் திருப்போற்றி

முத்தமிழ் வடிவே முருகா போற்றி
முன் நின்று காக்கும் மருகா போற்றி
சத்திய நெறியே சண்முகா போற்றி
சங்கரன் மகனே! மத்துவா போற்றி
வாழ்வினில் வசந்தம் தருவாய் போற்றி
வண்ண நிலவே வையகா போற்றி
ஊழ்வினை போக்கும் உத்தமா போற்றி
உண்ணும் உணவிலும் உறைவாய் போற்றி
கந்த புராணக்கனியே போற்றி
காசினி போற்றும் கலையே போற்றி
சொந்த பந்த சுடரே போற்றி
சொல்லில் வல்லமை தருவாய் போற்றி
வடிவேல் அழகா வருவாய் போற்றி
வார்த்தையின் பொருளாய் ஆனாய் போற்றி
முடிவே இல்லா முதல்வா போற்றி
மூன்று தமிழாய் ஆனாய் போற்றி
கள்ளம் இல்லா கந்தா போற்றி
காவிய நாயகா போற்றி போற்றி
உள்ளம் எங்கும் நிறைந்தாய் போற்றி
ஊனில் கலந்த உயிரே போற்றி
செந்தூர் வாழும் செல்வமே போற்றி
சேவல் கொடியோன் சீர்பதம் போற்றி
வந்து நிறைந்த வரவே போற்றி
வாய்மையின் பொருளே போற்றி போற்றி
திருத்தணி காக்கும் தென்றலே போற்றி
தேனே பாலே நாலெலாம் போற்றி
மருத்துவப் பயனே மாமணி போற்றி
மாதவன் மருகா போற்றி போற்றி
திருப்பரங் குன்றத் தலைவா போற்றி
திருவருள் தந்திடும் குருவருள் போற்றி
எழில் பதம் கொண்ட இறைவா போற்றி
எண்ணும் எழுத்தும் ஆனாய் போற்றி
குன்றக் குடிவாழ் குமரா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| குறத்தி மணாளா போற்றி | போற்றி |
| மன்றாடி மகனே மலர்பதம் | போற்றி |
| மாற்றுக் குறையா பசும் பொன் | போற்றி |
| தெய்வயானையின் துணைவா | போற்றி |
| தேசியம் காத்திடும் திருவடி | போற்றி |
| உய்யும் வழியே உன்பதம் | போற்றி |
| உலகம் யாவிலும் உறைந்தாய் | போற்றி |
| வள்ளி மணவாளன் திருக்கழல் | போற்றி |
| வாதம் வம்பு நீக்குவாய் | போற்றி |
| துள்ளி வந்திடும் தூய வா | போற்றி |
| அள்ளிக் கொடுக்கும் அண்ணலே | போற்றி |
| தந்தைக்கு மந்திரம் உரைத்தாய் | போற்றி |
| தனயனின் அன்பினில் தளைத்தாய் | போற்றி |
| விந்தைகள் பலவழி விளைந்தாய் | போற்றி |
| வேழமுகத்தான் தம்பியே | போற்றி |
| ஆற்றுப்படையின் ஆருயிர் | போற்றி |
| ஆவணம் போக்கிடும் அரும்பதம் | போற்றி |
| காற்றிலும் கடலிலும் கலந்தாய் | போற்றி |
| கற்கண்டாய் நிதம் இனிப்பாய் | போற்றி |
| திருவா புரிவாழ் செல்வா | போற்றி |
| சிந்தையில் கலந்த இன்பமே | போற்றி |
| அறியா மனத்திலும் அமைந்தாய் | போற்றி |
| அன்பின் வடிவமே போற்றி | போற்றி |
| வயலூர் வாழும் வள்ளலே | போற்றி |
| ஆடவர் போற்றும் மன்னவா | போற்றி |
| கைலை நாதன் கண்மணி | போற்றி |
| நாவல் பழத்தின் நாயகா | போற்றி |
| நாவெல்லாம் போற்றிடும் நண்பரே | போற்றி |
| காவல் தெய்வமே கன்னியா | போற்றி |
| காட்சியில் வெளிவரும் கருப்பொருள் | போற்றி |
| பக்தரை காத்திடும் ரட்சகா | போற்றி |
| பாவம் போக்கிடும் பாலகா | போற்றி |
| தத்துவப் பொருளே தமிழே | போற்றி |
| தாரகமந்திரப் பொருளே | போற்றி |
| செவ்வாய் பிறந்த செவ்வேல் | போற்றி |
| செப்பிட முடியா சேயோன் | போற்றி |
| ஔவையின் தமிழே அனுதினம் | போற்றி |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| ஒப்பிட முடியா ஓம் நலம் | போற்றி |
| வெற்றிவேல் தந்த குமரவேல் | போற்றி |
| வீரமே கண்ட முருகனே | போற்றி |
| கற்றவர் பெருமையும் இனியவேல் | போற்றி |
| காவியப் பயனே பணிந்தேன் | போற்றி |
| எட்டுத் திசையின் இறைவா | போற்றி |
| எங்களைக் காத்திடும் தலைவா | போற்றி |
| கட்டுக்கடங்கா காளையே | போற்றி |
| காதல் வாழ்வதன் கருப்பொருள் | போற்றி |
| தேவர் வணங்கிடும் கோவே | போற்றி |
| தேனிலும் பாசத் திருமன் | போற்றி |
| மூவாத் தமிழே முருகா | போற்றி |
| முத்தி நலம் அதன் நற்பொருள் | போற்றி |
| விழியினைக் காக்கும் வேந்தன் | போற்றி |
| வீரத் திருமகன் மைந்தன் | போற்றி |
| மொழியின் காவலன் மோகனன் | போற்றி |
| மோகன நிலையதன் காவலன் | போற்றி |
| கதிர் காமத்துறை கதிர்வேல் | போற்றி |
| காத்திடும் வண்ணத் திருவே | போற்றி |
| தொழுவோர் அமுதம் அணிவேல் | போற்றி |
| தோன்றிடும் அன்பின் அருள் வேல் | போற்றி |
| பழமுதிர் சோலை பழமே | போற்றி |
| பசிப்பிணி போக்கிடும் நலமே | போற்றி |
| எழில் முதல் தலைவா அறமே | போற்றி |
| ஏற்றமே நல்குவாய் போற்றி | போற்றி |
| ஆடிடும் மயினினுள் அமைந்தாய் | போற்றி |
| ஆனந்தத் தாண்டவ செல்வனே | போற்றி |
| வீடெனும் பேறுதருவாய் | போற்றி |
| வேதனை போக்கிடும் நாதனே | போற்றி |
| சிக்கல் சீங்கார வடிவேல் | போற்றி |
| சென்னி மலையான் நாயகன் | போற்றி |
| பக்குவம் தந்த பழனிவேல் | போற்றி |
| பால முருகன் பதுமலர் | போற்றி |
| தண்டாயுதபாணித் தெய்வமே | போற்றி |
| தீந் தமிழ் இன்பத் தேனே | போற்றி |
| கொண்டாடும் உயிர்க் கோவே | போற்றி |
| குவலயத் தலைவா போற்றி | போற்றி |

போற்றி.. போற்றி..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனின் மெய்ஞான கேள்விகள்

## ஔவையின் பதில்கள்

முருகப் பெருமான் பசியோடு இருக்கும் அவ்வையார் முன் சிறுவனாக தோன்றி சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா? என விளையாடுகிறார். ஔவையார் வேண்டுமென்றே சுட்ட பழம் வேண்டும் என்று கேட்க, முருகப்பெருமான் மண்ணில் பழம் விழச் செய்கிறார். கீழே விழுந்த பழத்தில் ஒட்டிருந்த மண்துகளை அகற்ற ஔவை வாயால் ஊத என்ன பாட்டி பழம் சுடுகிறதா? என்று ஔவையை திகைக்க வைத்து, ஔவை முன் தன் திரு உரு காட்டுகிறார். பக்தர்கள் மெய்ஞான விளக்கம் பெறும் பொருட்டு சில கேள்விகள் கேட்கிறார். அவ்வையாரின் வாயில் முருகன் அருளாலே பதிலும் கிடைக்கிறது.

### கொடியது எது?

கொடியது கேட்கின் நெடியவெவ் வேலோய்!
கொடியது! கொடியது வறுமை கொடிது!
அதனினும் கொடியது! இளமையில் வறுமை;
அதனினும் கொடிது! ஆற்ற ஓணாக் கொடுநோய்;
தனினும் கொடிது! அன்பிலாப் பெண்டிர்;
அதனினும் கொடிது இன்புற அவர்கையில்
உண்பது தானே!”

வறுமையைக் காட்டிலும், தீராத கொடிய வியாதியைக் காட்டிலும் அன்பில்லாத மனைவியின் கையில் உண்பது மிகவும் கொடியது என ஔவையார் கூறியது அன்பில்லாமல் வாழ்வது கொடிது என்பதை உணர்த்துகிறது. மனைவியைக் குறிப்பிட்டது வீட்டில் அன்பு முதலில் தோன்றி, பின் யாரிடத்திலும் தோன்ற வேண்டுமென்பதை வலியுறுத்தவே யாகும். உயிர்களிடத்தில் அன்பு செலுத்தாதவர்கள் ஆண்டவனை அடைய இயலாது.

இரண்டாவது கேள்வி பிறக்கிறது 'இனியது எது' என்று கொடியதற்கு எதிரிடை இனியதுதானே. பதில் வருகிறது தமிழ்ப் பாட்டியிடமிருந்து;



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**'இனியது எது?'**

"இனியது கேட்கின் தனிநெடு வேலோய்!
இனிது! இனிது! ஏகாந்தம் இனிது!
அதனினும் இனிது! ஆதியை தொழுதல்
அதனினும் இனிது! அறிவினர் சேர்தல்
அதனினும் இனிது! அறிவுள்ளாரை
கனவிலும் நனவிலும் காண்பது தானே!

வீண் வார்த்தையாடுபவர்கள் கூட்டத்தில் சேர்ந்து வம்புகள் பேசி வீண்காலம் கழிப்பதைவிட ஏகாந்தம் இனிது, ஏகாந்தத்திலும் இறைவனைத் தொழுதல் இனிது, அதனிலும் இனிது அறிவு நிறைந்த சான்றோர்களுடன் பழகுதல், இறைவனது திருவடிகளை வணங்குபவர்கள் பல நூல்களையும் கற்றவர்விடச் சான்றோராவர். இவர்களைக் கனவிலும் நனவிலும் கண்டு பழகுவதே மிகவும் இனிது.

மூன்றாவதாக,

**'பெரியது எது?'**

என்ற வினா எழுகிறது. இதற்கு,

"பெரியது கேட்கின் எரிதவழ் வேலோய்!
பெரிது! பெரிது! புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகன் கரியமால் உந்தியில் வந்தோன்;
கரிய மாலோ அலைகடல் துயின்றோன்;
அலைகடல் குறுமுனி அங்கையில் அடக்கம்;
குறுமுனி யோகலச த்தில் பிறந்தோன்;
கலசமோ புவியில் சிறுமண்;
புவியோ அரவினுக்கு ஒருதலைப் பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரல் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத்து ஒடுக்கம்;
இறைவரோ தொண்டர் உள்ளத்து ஒடுக்கம்;
தொண்டர் தம் பெருமை சாற்றவும் பெரிதே!"

எனப் பதில் கிடைக்கிறது. உலகமானது பெரிதாகத் தோன்றினாலும், அது பிரமனால் படைக்கப்பட்டது. அப்பிரம்மனோ மஹாவிஷ்ணுவின் நாபிக் கமலர்ரிலிருந்து தோன்றியவர். மஹாவிஷ்னுவும் கடலில் பள்ளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளார். அக்கடலையும் உள்ளடக்கிய அகஸ்திய முனிவரும் குடத்திலிருந்து தோன்றியவராகையால், குடமே பெரிதென எண்ணும் பொழுது, அக்குடமும் பூமியிலிருந்து எடுக்கப்பட்ட சிறிதளவு மண்ணினால் ஆனதாக இருக்கிறது. பூமியை ஒருதலைப் பாரமாகக் கொண்டுள்ள ஆதிசேஷனும் உமையின் சுண்டுவிரல் மோதிரமாக விளங்குகிறார். உமாதேவியும் சிவபெருமானது இடப்பாகத்தில் ஒடுங்கியவளாகும். பெரியர் என்று சொல்லப்படும் இறைவனாகிய சிவபெருமானும் அன்பர்களின் இதய தாமரையில் அடங்கிருப்பதால், பக்தர்களாகிய தொண்டர் பெருமையைக் கூறுவதே மிக மிகப் பெரிதாகும். ஆகவே பக்தர்களை சார்ந்து அவர்களை வணங்கிப் போற்றுவது மிகவும் சிறப்புடையதாகும். தொண்டராகிய திருநாவுக்கரச சுவாமிகளை வழிபட்டே முக்தியடைந்தவர் அப்பூதியடிகள். அருணகிரிநாத சுவாமிகளை வணங்கியே முருகப்பெருமான் அருள் பெற்ற அடியார்கள் பலர்.

நான்காவது கேள்வியாக,

**'அரியது எது?'**

என்று கேட்கப்படுகிறது. விடையும்,

"அரிது கேட்கின் வரிவடி வேலோய்!
அதிதரிது! மானிடர் ஆதல் அரிது!
மானிட ராயினும் கூன்குருடு, செவிடு,
பேடு நீங்கிப் பிறந்த காலையும்,
ஞானமும், கல்வியும் நயந்த காலையும்,
தானமும் தவமும் தான்செயல் அரிது!
தானமும் தவமும் தான்செய்வர் அரிது!
வானவர் நாடு வழிதிறந் திடுமே!"

பிறவியிலேயே மானிடப் பிறப்பு கிடைப்பது மிகவும் அரிதாகும். அதிலும் கூன், குருடு, செவிடு, அலி ஆகிய குறைபாடு இல்லாமல் பிறப்பது அரிது. இவைகளை பெற்றாலும் உயிர்கள் யாவிலும் இறைவன் நிறைந்துள்ளான் என்று உணர்ந்து தானதர்மங்கள் செய்து பக்தியோடு வாழ்வது மிகவும் அரியது. இவர்கள் முக்தியடைவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா

அப்பனுக்குப் பாடம் சொன்ன சுப்பையா உந்தன்
அருள் வடிவைக் காண்பது தான் எப்பையா
சூரனுக்கு வாழ் தந்த நாளய்யா
சுப்பையா சுப்பையா...வேலய்யா
குன்றத்தில் குடியிருக்கும் கந்தையா...எங்கள் (அப்பனு)

குடும்பத்திலே நீ பிறக்க வேணும் பிள்ளையா
தெய்வயானை மணமுடித்த குமரப்பா - அந்த
தேவரினும் உன்னை வென்றார் எவரய்யா
பாலிருக்கும் பழமிருக்கும் சோலையில்
நீதி மன்றம் வைத்தவனே நீயிருக்கும் வரையிலே
நீதியிருக்கு.்.ம் வரையிலே வேலியிருக்க விளையில்லை
மயிலிருக்க பயமில்லை வேலவனே நீயிருக்க
ஏழைகட்கு துயரில்லை
ஏழைகட்கு துயரில்லை
சுப்பையா...எப்பய்யா...வேலய்யா
திருத்தணிகை மலைத் திருநீற்றின் நெற்றியில்
தாங்கி வந்தோம் வேலா
செந்தூர் குங்குமம் அள்ளியெடுத்து
சேர்ந்து வந்தோம் வேலா
முருகா குறித்து வந்தோம் வேலா
வள்ளிமலை நாதா கருவண்டு விழிக்குமரா
மழலை மொழிக் கந்தா... எங்கள் மருதமலை முருகா
எங்கள் மருதமலை முருகா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருணகிரிநாதர் இயற்றியருளிய

# கந்தர் அநுபூதி

(பொறுக்கு மணிகள்)

## காப்பு

நெஞ்சக் கனகல் லும்நெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக்கு இயல்சேர்
செஞ்சொல் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

## நூல்



ஆடும் பரிவேல் அணிசே வல்எனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவில்
சாடும் தனியா னைசகோ தரனே.

உல்லாச சநிரா குலயோ சவிதச்
சல்லா பவினே தனும்நீ அலையோ
எல்லாம் அறஎன் னைஇழந் தநலம்
சொல்லாய் முருகா சுரபூ பதியே

வானே புனல்பார் கனல்மாருதமோ
ஞானே தயமோ கவில்நான் மறையோ
யானே மனமோ எனைஆண் டவிடம்
தானே பொருளா வதுசண் முகனே.

வளைபட்டகைமா தொடுமக் கள்எனும்
தளைபட்டழியத் தகுமோ தகுமோ
கிளைபட்டு எழுசூர் உரமும் கிரியும்
துளைபட்டுருவத் தொடுவே லவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கெடுவாய் மகனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

மட்டூர் குழல்மங் கையர்மை யல்வலைப்
பட்டூ சல்படும் பரிசுஎன்று ஒழிவேன்
தட்டூ டறவேல் சைலத்து எறியும்
நிட்டூ ரநிரா குலநிர்ப் பயனே.

கார்மா மிசைகா லன்வரின் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார் பவலா ரிதலா ரியெனும்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

கூகா எனஎன் கிளைகூ டியழப்
போகா வகைமெய்ப் பொருள்பே சியவா
நாகா சலவே லவநா லுகவித்
தியாகா சுரலோ கசிகா மணியே.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருள்ஒன் றும்அறிந் திலனே.

முருகன் தனிவேல் முனிநம் குருஎன்று
அருள் கொண்டறியார் அறியும் தரமோ
உரு அன்று அருஅன்று உளதுஅன்று இலது அன்று
அருள்அன்று ஒளிஅன்று எனநின் றதுவே.

கைவாய் கதிர்வேல் முருகன் னழல்பெற்று
உய்வாய் மனனே ஒழிலாய் ஒழிலாய்
மெய்வாய் வழிநா சியொடும் செவியா
மைவாய் வழிசெல் லும்அவா வினையே.

முருகன் குமரன் குகன்என் றுமொழிந்து
உருகும் செயல்தந் துணர்வுஎன்று அருள்வாய்
பொருபுங் கவரும் புவியும் பரவும்
குருபுங் கவஎண் குணபஞ் சரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசைஎனும் பிணியின் பிணிபட்டு
ஓரா வினையேன் உழலத் தகுமோ
வீரா முதுசூர் படவேல் எறியும்
சூரா சுரலோ கதுரந் தரனே.

யாமோ தியகல் வியம்எம் அறிவும்
தாமே பெறவே லவர்தந் ததனால்
பூமேல் மயல்போய் அறமெய்ப் புணர்வீர்
நாமோ னடவீர் நடவீர் இனியே.

கருதா மறவா நெறிகா ணஎனக்கு
இருதாள் வனசம் தரஎன்று இசைவாய்
வரதா முருகா மயில்வா கனனே
விரதா சுரசூ ரவிபா டணனே.

காளைக் குமரே சனஎனக் கருதிக்
தாளைப் பணியத் தவம்எய் தியவா
பாளைக் குழல்வள் ளிபதம் பணியும்
வேளைச் சுரபூ பதிமே ருவையே.

அடியைக் குறியாது அறியா மையினன்
மூடியக் கெடவோ முறையோ முறையோ
வடிவிக் ரமமேல் மகிபா குறமின்
கொடியைப் புணரும் குணபூ தரனே.

மெய்யே எனவெவ் வினைவாழ் வைஉகந்து
ஐயோ அடியேன் அலையத் தகுமோ
கையோ அயிலோ கழலோ முழுவதும்
செய்யோய் மயில்ஏ றியசே வகனே.

ஆதா ரம்இலேன் அருளைப் பெறவே
நீதான் ஒருசற் றும்நினைந் திலையே
வேதா கமஞா னவினே தமனே
நீதா சுரலோ கசிகா மணியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்னே நிகழ்வாழ் வைவிரும் பியயான்
என்னே விதியின் பயன்இங்கு இதுவோ
பொன்னே மணியே பொருளே அருளே
மன்னே மயில்ஏ றியவா னவனே.

செவ்வான் உருவில் திகழ்வே லவனன்று
ஒவ்வா ததுஎன உணர்வித் ததுதான்
அவ்வாறு அறிவார் அறிகின் றதுஅலால்
எவ்வாறு ஒருவர்க்கு இசைவிப ததுவே.

பாழ்வாழ்வு எனும்இப் படுமா யையிலே
வீழ்வாய் எனஎன் னைவிதித் தனையே
தாழ்வா னவைசெய் தனதாம் உளவோ
வாழ்வாய் இனிநீ மயில்வா கனனே.

விதிகா ணும்உடம் பைவிடா வினையேன்
கதிகா ணமலர்க் கழல்என்று அருள்வாய்
மதிவா ணுதல்வள் ளியைஅல் லதுபின்
துதியா விரதா சுரபூ பதியே.

வினைஓ டவிடுங் கதிர்வேல் மறவேன்
மனையோ டுதியங் கிமயங் கிடவோ
சுனையோடு அருவித் துறையோடுபசுந்
தினையோடு இதனோ டுதிரிந் தவனே.

சாகா தெனையே சரவணங் களிலே
காகா நமனர் கலகம் செயும்நாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னெபதே சிகனே.

சாடும் தனிவேல் முருகன் சரணம்
சூடும் படிதந் ததுசொல் லுமதோ
வீடும் சுரர்மா முடிவே தமும்வெங்
காடும் புனமும் கமழும் கழலே.

உருவா கியகல் வியுளார் கடைசென்று
இரவா வகைமெய்ப் பொருள்ஈ குவையோ?
குரவா குமரா குலிசா யுதகுஞ்
சரவா சிவயோ கதயா பரனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம்தா யும்எனக்கு அருள்தந் தையும்நீ
சிந்தா குலமா வைதீர்த்து எனை ஆள்
கந்தா கதிர்வே லவனே உமையாள்
மைந்தா குமரா மறைநா யகனே!

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருவாய் குகனே.

காணா விழியும் கருதா மனமும்
வீணாய் விடமுன் விதியோ விதியோ
பூணாடிறமின் புனமும் வனமும்
நாணா துநடந் திடுநா யகனே.

விண்ணார் பதமும் விரிநீர் புடைசூழ்
மண்ணார் பதமும் மகிழேன் மகிழேன்
தண்ணார் அமுதுஏய் சயிலப் பகையே
கண்ணார் உன்அருள் கனியைப் பெறினே.

உனையே அலதுஓர் பரம்உண்டு எனவே
நினையேன் எனைஊழ் வினைநீ டுமதோ
கனைஏழ் கடல்போல் வருகார் அவுணர்
முனையே தெறுசண் முகவே லவனே.

இரவும் பகலும் துதிசெய்து இருதாள்
பரவும் பரிசே பரிசாய் அருள்வாய்
கரவுண்டு எழுசூர் களையக் கதிர்போல்
விரவும் சுடர்வேல் விடுசே வகனே.

வாழைக் கிமா மதுரச் சுளையே
ஏழைக்கு அரிதுஎன்று இடுவார் உளரோ
பாழைப் பயிர்செய் திடுசிற் பரையின்
பேழைப் பொருளா கியபே ரொளியே.

தாயே எனைஆள் தனிவேல் அரசே
காயே பொருளாய்க் கனிகை விடுமோ
பேயேன் இடைஎன் பெறவந்து எளிதாய்
நீயே மறவா நெறிதந் ததுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ் சிறியேன் சிதைவே செயினும்
பென்னம் பெரியோர் பிழைசெய் குவரோ
கன்னங் கரியோன் மருகா கழறத்
தன்னந் தனியே தனைஆண்டவனே.

கல்லேன் அயலார் கவியைப் பொருளாய்ப்
புல்லேன் அவர்வாழ் வுபுரிந் தருள்வாய்
வல்லே இனிவந் தருளாய் அணியா
கில்லேன் நிறைநெஞ் சொடுவேல் அரசே.

மஞ்சைப் பொருவார் குழலார் மயலால்
பஞ்சைப் பலதே வரையும் பரவா
நெஞ்சைப் புரிவாய் நிகழ்மா மதியின்
பிஞ்சைப் புனையும் பெருமான் மகனே.

விதிவந் தனைசெய் விமலன் கழலே
கதிஎன்று அடைவார் கடன வதுவே
வதிவன் பிணையோடு அழிநல் குரவும்
மதிசஞ் சலமும் மண்ணாய் விடுமே.

எந்நே ரமும்நின் னிருதாள் மலரைப்
பொன்னே எனயான் புணையப் பெறின்என்
அன்னே அமுதே அயில்வேல் அரசே
கொன்னே பிறவிக் குறைபெற் றிலனே.

தொண்டா கியநம் துயர்தீ ரும்மருந்து
உண்டா கியும்என்று உலைவாய் மனனே
வண்டார் குழல்வள் ளிமணந்து அருளும்
தண்டார் அயில்வேல் சரணம் துதியே.

பெரியோர் எனினும் புலையோர் எனினும்
சியோர் எனினும் தெளிவோர் அவரே
குறியோர் எனினும் குருவா வருவான்
நெறியோடு ஒழுகும் நிலைபெற் றிடினே.

பக்திக்கு அயலேன் நனிநின் பதமும்
சித்திக் கவிடேன் இதுதிண் ணமதே
புத்திக் கடலே பொரும்வேல் அரசே
முத்திக் கனியே முனிபுங் கவனே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேயா கிலும்நன் றதிலும் பிறிதுஎன்று
ஆயாது எனைவந்து அடிமைத் தொழில்கொண்டு
ஓயாது இனிநீ உணர்வைத் தருவாய்
வாயார் அழுதே மயில்வா கனனே.

மிகவும் கொடியேன் விதிகுன் றிடவந்து
இகமும் பரமும் தரஎன்று இசைவாய்
சுகமும் சுகமும் தொடர்வேல் கொடுமுச்
சகமும் தனிகாத் தருள்சண் முகனே.

வளையும் சகமா யைமயக் கல்விழுந்து
உளையும் துயர்இன் னும்உணர்ந் திலையே
அளைஉண் டபிரான் மருகா விடுசூர்
களையும் சினவெங் கதிர்வே லவனே.

காடும் மலையும் கடலும் உருளச்
சாடும் தனிவேல் உடையாய் சரணம்
ஆடும் மயில்வேல் அரசே சரணம்
பாடும் வரதற் பரனே சரணம்.

கல்லும் கரையக் கவிபா டியிதம்
சொல்லும் தொழிலே தொழிலாய் விடவோ
கொல்லும் தொழிலிற் கொடியோர் மடியச்
செல்லும் சுடர்வேல் செறிபா ணியனே.

முறுகும் தழல்போல் முடுகும் சமனன்
மறுகும் பொழுது மறவேன் மறவேன்
குறுகும் குலிசன் குலவா ரணமால்
பெறுகுஞ் சரிதோய் பெருமான் அடியே.

வாழ்வார் உறவாய் மகிழ்வார் பலரும்
தாழ்வார்க்கு அருள்உத் தமன்நீ அலையோ?
பேழ்வாய் அரவும் பிறைவெள் இறகும்
சூழ்வார் சடையார் தொழுதே சிகனே.

கந்தர் அநுபூதி முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்

## தேவாரம்

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலு முன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவில் மறந்தறியேன்
உலந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள்ளுறு சூலை தவிர்த்தருளாய்
அலந்தேனடி யேனதி கைக்கெடில
வீரட் டானத் துறையம்மானே

## திருவாசகம்

பாரொடு விண்ணாய்ப் பரந்த எம்பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
ஆரொடு நோகன் ஆர்க்கெடுத் துரைக்கேன்
ஆண்டநீ அருளிலை யானால்
வார்கடல் உடகில் வாழ்கிலேன் கண்டாய்
வரகவென் றருள்புரி யாயே.

## திருவிசைப்பா

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னையாள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை என்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணாநாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத்தானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை! வளர்கநம்
பக்தர்கள்! வஞ்சகர் போய்அகல
பொன்னின்செய் மண்டபத்துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவி யறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டிப்
பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னையென்றும்
மறவாமை வேண்டும் இன்னும் வேண்டும்
நான் மகிழ்ந்துபாடி
அறவா நீஆடும் போதுன் அடியின்கீழ்
இருக்க என்றார்.

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள்வினை தீர்க்கும்முகம் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரைவ தைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மான பொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்ன
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லை யிரும்பிறவி சூழும் தளைநீக்கி
அல்லலறும் தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறி அளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்

நமச்சிவாய வாழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சி னீங்காதான் தாள் வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள் வாழ்க
ஆகமமாகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் மெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழுங் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்குஞ் சீரோன் கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சே வடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளுமலை போற்றி
சிவனவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுது மோய உரைபனியான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தைய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய்
விளங்கொளியாய் எண்ணிறந் தெல்லை யிலாதானே
நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அநின்ற இத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஒங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அணைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னை புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூரி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ரைந்துடையார் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கும் மூடி
மலஞ்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்க புலனைந்தும் வஞ்சனையைச்செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்தன் பாகிக் கசிந்துள் ளுருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனாரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணை பேராறே
ஆரா அமுதே அளவில்லாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாய்
சோதியனே துன்னுருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கநத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமேஅத்தாமிக் காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வே
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றானா உண்ணாரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பி னுட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றி புகழ்ந்திருந்து பொய்கட்டு மெய் ஆனார்
மீட்டிங்கு வந்து வினைபிறவி சாராமே
கள்ளப் புளக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ மஹா லிங்காஷ்டகம்

ப்ரஹ்மமுராரி ஸுரார்சித லிங்கம்
நிர்மலபாஸித ஸோபித லிங்கம்
ஜந்மஜதுக்க விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவமுநி ப்ரவ ரார்ச்சித லிங்கம்
காமதஹம் கருணாகர லிங்கம்
ராவண தர்ப்ப விநாசந லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸர்வஸுகந்தி ஸுலேபித லிங்கம்
புத்திவிவர்த்தன காரண லிங்கம்
ஸித்தஸுராஸுர வந்தித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

கநக மஹாமணி பூஷித லிங்கம்
பங்கஜ ஹாரஸு ஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

குங்கும சந்தன லேபித லிங்கம்
பஞ்கஜ ஹாரஸு ஸோபித லிங்கம்
ஸஞ்சிதபாப விநாசக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

தேவகணார்ச்சித ஸேவித லிங்கம்
பாவையர்பக்திபிர் ஏவச லிங்கம்
திநகரகோடி ப்ரபாகர லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

அஷ்டதளோபரி வேஷ்டித லிங்கம்
ஸர்வ ஸமுத்பவ காரண லிங்கம்
அஷ்டதரித்ர விநாசித லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்

ஸுரகுர ஸுரவர பூஜித லிங்கம்
ஸுரவநபுஷ்ப ஸதார்சித லிங்கம்
பரமபதம் பரமாத்மக லிங்கம்
தத்ப்ரணமாமி ஸதாசிவ லிங்கம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலன் மொழி

அட்டத்திரு மகளாய் அருள்வீசும் அன்னைபுகழ்
இட்டவெள்ளிமங்களத்தில் இருந்தபடி இரத்துரைப்பார்
துட்டத்துயர் தொலைவேகும் துணிவுபுகழ் அருகாகும்
முட்டமுட்டப் பொருள்வித்து முன்னின்று வாழ்ந்திடுவார்

# அம்மன் பாடல்

ஜெய ஜெய ஓம் சக்தி - ஓம் ஸ்ரீ
ஜெய ஜெய ஓம் சக்தி
ஜெய ஜெய ஜெய என படிப் பணிந்தோம்
ஜெகம் எங்கும் அமைதியைத் தா - (ஓம் ஸ்ரீ)

திருப்தியும் இன்பமும் வாழ்வில் துலங்க
தேவையெல்லாம் அடைய - அம்மம்மா
பத்தி பெருகிட பாடி உருகிட //
பணிப்பாய் அன்பில் எம்மை (ஓம் ஸ்ரீ)



காசினி எங்கும் வேற்றுமை போக
கருத்தினில் அன்பருள்வாய் - அம்மம்மா
தேசுடன் வாழ காட்டு நீ கட்சி //
தேவி உன் அடைக்கலமே (ஓம் ஸ்ரீ)

நமஸ்காரம் இருவினை கருத்தினில் ஞான
நல்லொளி தீபம் வைத்து - அம்மம்மா //
நமஸ்காரம் செய்து ஆரத்தி செய்தோம்
ஞாலத்தில் அமைதியைத் தா (ஓம் ஸ்ரீ)

இரண்டுகள் போக மூன்றுகள் அகல
ஈஸ்வரி வரமருள்வாய் - அம்மம்மா //
கரங்குவித்தோம் இனி காலைவிடோம் அம்மா
கருணையுடன் அணைப்பாய் (ஓம் ஸ்ரீ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மந்திரங்களின் மகிமை

நாகரிகம் வளர வளர மனஇறுக்கம் வளர்ந்து கொண்டு செல்கின்றது. வறியவர், செல்வர், இளைஞர், முதியவர் எனப் பலரையும் பிடித்து ஆட்டிக் கொண்டிருப்பது தான் மனஇறுக்கம், பெரியவர்களின் மனதைப்பிடித்த மன இறுக்கம் துரதிஷ்டவசமாக இன்றைய குழந்தைகளையும் பற்றிக்கொண்டு உள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் ஏழுவயதுப் பாலகன் தனது தந்தையைச் சுட்டுக்கொன்றுள்ளான். ஒரு மாணவன் தனது பாடசாலைத் தோழர்களையே சுட்டுத்தள்ளியுள்ளான். அங்கு இங்கு எண்ணாதபடி எங்கும் நாகரீகம் வளர வளர மனஇறுக்கம் வளர்ந்துகொண்டு வருகிறது.

புறவளர்ச்சி பெற்றுள்ள சமுதாய அகவளர்ச்சி பெறவில்லை. புறவளர்ச்சி பெற்றுள்ள நாம் பெறும் ஏட்டுக் கல்வி மனத்தையோ, பண்பாட்டையோ, வளர்க்கவில்லை. இவற்றையெல்லாம் சிந்தித்த நம்முன்னோர் பலர் இதற்கு வழியைக்காண முனைந்தனர். வள்ளுவப் பெருந்தகை அறவாழ்வை என்ற பெயரில் "மனத்தின் கண் மாசிலன் ஆதல் அனைத்து அறன்" என்று கூறுவதோடு அமையாது "ஆகுல நீரபிற" என்று ஆணித்தரமாகக் கூறியுள்ளார். இன்று நம்மைப் பிடித்து ஆட்டும் மன இறுக்கத்தைப் போக்க வழியாது? அதற்கு விடை கண்டனர் நம் முன்னோர். போட்டியும் வேகமும் நிறைந்த வாழ்க்கையில் ஈடுபட்டுள்ள நாம் முன்னோர் கூறியவழியைப் பின்பற்ற மறந்துவிட்டோம்.

## மந்திரம் என்றால் என்ன?

நம் முன்னோர் பலர் மெய்ஞ்ஞானிகளாகத் திகழ்ந்ததோடு அல்லாமல் விஞ்ஞானிகளாகவும் இருந்தனர். ஒலியின் பெருமையை, சிறப்பை, ஆற்றலை இன்றைய விஞ்ஞான உலகம் காண்பதற்குப் பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னரே நம் முன்னோர் அறிந்து இருந்தனர். ஒலி (Sound) அலைகளாகச்சென்று பரவுகின்றது. ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கும்பொழுது ஒரு குறிப்பிட்ட அதிர்வு (Frequency) உள்ளது. இந்த அதிர்வுகளை அடிப்படையாகக்கொண்டு எழும் ஒலியை ஹெட்ஸ் (Hertz) என்ற அளவு கொண்டு கணக்கிடுவர். இருபது ஹெட்ஸுக்குக் குறைந்த ஒலிகளையும் நம்செவிகள் கேட்கமுடியாது. ஆனால் குறைந்த ஒலியை எலி போன்றவை கேட்கும். மிகுந்த ஒலியை நாய் கேட்கும். ஒலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் வலிமை உடையது என்பதை இன்றைய விஞ்ஞானம் நமக்கு விளக்கிக் காட்டுகின்றது. மிகு அதிர்வு ஒலி **(Ultro Sound)** என்ன புதுமைகளைச் செய்கிறது என்று நாம் காணமுடிகிறது. மசகு, கொழும்பு எண்ணெயில் நன்றாக ஊறிய ஒருதுணியை வேறு வகையில் சலவை செய்ய முடியாது. நீர் நிறைந்த கண்ணாடித் தொட்டிக்குள் அதனைத் தொங்கவிட்டு வெளியே திகு அதிர்வு ஒலியை உண்டாக்கி அந்தத் தொட்டிக்குள் செலுத்தினால் துணியிலுள்ள அழுக்கு நீக்கப்பட்டுத்துணியைப் பற்றியப் பிடித்த எண்ணெய்க் கொழுப்பை, வேறுவிதத்தில் நீக்கமுடியாத அழுக்கை வெளியில் உண்டாக்கும் மிகு அதிர்வு ஒலி போக்குகின்றது என்றால் மனித மனத்தின் உள்அழுக்கை ஏன் அந்த ஒலி போக்க முடியாது? ஒலியின் சிறப்பை அறிந்த நம் முன்னோர் மனமாசைப் போக்க இவ்வொலியைப் பயன்படுத்தினர். ஒலி இருவகைப்படும். ஒன்று கேட்கும் ஒலி, மற்றையது கேளாஒலி விஞ்ஞானத்துடன் மெய்ஞ்ஞானத்தையும் உணர்ந்த நம் முன்னோர் கேளாஒலிக்கும் அப்பாற்பட்ட ஓர் ஒலியை அறிந்து அதற்கு ஆதிநாதம் (Pri-Mordial Sound) எனப் பெயரிட்டனர். ஒலி உண்டாகாத பொருளே உலகில் இல்லை. எல்லா அசைவுகளும் ஒலியை உண்டாக்கும். உதாரணமாக மேலும் பிரிக்க முடியாத துணிக்கையை அணு என்று கூறுகிறார்கள்.

அந்த அணுவினுள் புரோத்தன் (Proton) என்னும் மூலக்கருவைச் சுற்றி இலத்திரன் (Electon) என்ற மின்அணு ஓயாது ஓடிக்கொண்டிருந்தால் இந்த இயக்கத்தினால் ஒலி உண்டாக்கத்தானே வேண்டும். இது பற்றி இன்றுவரை விஞ்ஞானிகள் ஆய்வு செய்யவில்லை. இந்த ஒலியைத் தான் நம்முன்னோர்கள் ஆதிநாதமென்று கூறி உள்ளார்கள்.

ஒலியானது அதிர்வுகள் வடிவில் வெளிப்படுகிறது என்று கண்டுள்ளோம். எழுத்துக்களில் இந்த ஒலி ஆற்றலைக் கண்ட நம் முன்னோர் இவற்றை ஒழுங்குபடுத்திப் பல அதிர்வெண்களை உடைய எழுத்துக்களை ஒன்று சேர்ப்பதன் மூலம் பல புதிய அதிர்வெண்களை உடைய சொற்களைத் தோற்றுவித்தனர். இப்படி ஒன்று சேர்க்கப்பட்ட சொற்களின் ஒலிகள் மனமாசைக் கழுவும் ஆற்றலுடையவை என்று கண்டனர். அந்தக் கூட்டங்களுக்கு மந்திரங்கள் என்று பெயரிட்டனர். மந்திரங்கள் நம் காதால் கேட்கக் கூடிய அதிர்வெண்களைக் கொண்ட ஒலிக்கூட்டமே. பல்வேறு விதமான பிரச்சினைகள் உள்ள இல்வாழ்கையில் குறைந்தது பத்து நிமிடங்களாவது ஓரிடத்திலிருந்து தங்கள் மனதில் எது அமைதியை உண்டாக்குகிறதோ அந்த மந்திரத்தை ஜெபிக்கத் தொடங்கினால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனஇறுக்கங்கள் வெகுவிரைவில் தளர்ந்துபோகும். விஞ்ஞானிகள் குறைந்தது பத்து நிமிடங்கள் தொடர்ந்து தியானம் செய்தால் மனம் சாந்தியடையும் என்று கூறியுள்ளார்கள். இதனால் தான்போலும் எங்களுடைய திருமுறைகளில் ஒவ்வொரு பதிகத்திலும் பத்துப் பாடல்கள் உள்ளன.

## மந்திரத்தின் பலன் :

மனஇறுக்கம் தளர்ந்தால் இரத்த அழுத்தம் குறையும். சர்க்கரைச் சத்து குறையும். இதயத்துடிப்பில் சமநிலை ஏற்படும். இதனால் மனதில் மகிழ்ச்சி ஏற்படும். நோய்த்தாக்கம் ஏற்படமாட்டாது. காரிய சித்தி ஏற்படும். அகத்தின் அழகு முகத்தில் தெரியும். மனம் சாந்தமானால் முகத்தில் ஜேஸ் (தெய்வப் பிரகாசம்) உருவாகும்.

## பொருத்தமான மந்திரம் எது?

மனிதர்கள் பலமனநிலை உடையவர்கள் ஒருவருக்குப் பொருத்தமான மந்திரம் மற்றவருக்குப் பொருந்துமென்று சொல்லமுடியாது. ஆயிரக்கணக்கான மந்திரங்களை நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள். ஒவ்வொருவரும் தத்தமக்குப் பொருத்தமானதைத் தெரிவுசெய்து கொள்ளலாம். ஒவ்வொரு மந்திரங்களையும் மூன்று நாட்கள் வீதம் ஜெபம்செய்து பார்க்கலாம். எதைச்செய்யும் பொழுது அசாதாரணமான அமைதி ஏற்படுகின்றதோ அந்த மந்திரமே அவர்களுக்குப் பொருத்தமானதாகும்.

## மந்திரசக்தி

சில எழுத்துக்களை, அவற்றின் அதிர்வெண்களின் அளவுகளைக் கணக்கிட்டு ஒன்று சேர்ப்பதன்மூலம் மந்திரங்கள் புதியவடிவு பெறுகின்றன. மாபெரும் ஆற்றலைப்பெறுகின்றன. உதாரணமாக ஓம், கம், சௌம், ஹரீம், க்ரீம், க்லீம் என்பன போன்ற மந்திரங்களுக்கு எவ்விதப் பொருளும் இல்லை. இவற்றை மூல எழுத்துக்கள் (பிஜாட்சரங்கள்) என்று கூறினர். வேறு பொருள் இல்லாவிட்டாலும் இம்மந்திரங்கள் ஒரு முகப்படுத்தப்பெற்ற அதிர்வெண்களைக் கொண்ட எழுத்துக்களின் சேர்க்கை. இவை மிகு அதிர்வொலியின் (Ultra Sound) பயனை விளைவிக்கின்றன. தனி மனிதனின் மனம் அடங்க வேண்டும். அதாவது மனஇறுக்கம் இல்லாமல் வாழ வேண்டும். அதற்கு ஒரே வழி இத்தகைய மந்திரங்களைப் பயன்படுத்துவதே. மந்திரம் போன்ற சொற்கட்டுக்களை கந்தசஷ்டிகவசம் மற்றும் அருணகிரிநாதரின் சந்தப்பாடலான திருப்புகழில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதாரணமாக கந்தஷஷ்டி கவசத்தில்...

ரரரர ரரரர ரரரர ரரரர
டுடுடு டுடுடு டுடுடு டுடுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு என்று முத்தைத்ததரு எனும் திருப்புகழில் "குக் குக்குகு குக்குக் குகு குகு, திக்கு திகு திக்குத்திரிகட"

என்று உள்ளது. மந்திரங்கள் என்று சொல்லப்படுபவை ஒலிக்கூட்டங்கள் ஆகும் நமச்சிவாய என்ற சக்தி வாய்ந்த மந்திரத்தை எடுத்துக்கொள்வோம். சிவனை வணங்குகிறேன். என்ற பொருளை உடையது நமசிவாய என்ற சொல், திரும்பத் திரும்ப நான் சிவனை வணங்குகிறேன் என்று கூறிப்பாருங்கள். உடலில் ஒரு மாற்றமும் இருக்கமாட்டாது. ஆனால் "ஓம் நமசிவாய" என்று கூறிப்பாருங்கள். உடலில் ஒருமின்சாரம் பாய்வது போன்ற ஓர் உணர்வு ஏற்படும். சிந்தனைத்தெளிவு ஏற்படும். கவலைகள் மறையும் புத்திகூர்மை ஏற்படும் இதனை நீங்கள் அனுபவத்தில் அறியலாம்.

## மந்திரங்களை உருவாக்கியவர் யார்?

நாங்கள் பயன்படுத்தும் சொற்கள் குறைமொழிதான். உதாரணமாக எனது நண்பருக்குக் கல்யாணம். அதனை மகிழ்ச்சி, சந்தோசம் என நாம் கூறலாம். எமக்கு திருணம் மகிழ்ச்சி, சந்தோசம் என கூறலாம். ஆனால் அது முழுமையான கருத்தல்ல. இரண்டும் ஒரே அளவு மகிழ்ச்சியா? எப்படிக் கூறுவது? எம்மனதில் உள்ளதைப் பட்டவர்த்தனமாகக் கூறமுடியாது. இவை பூரணமாக எங்கள் கருத்தை வெளிப்படுத்தவில்லை எனவே இவை குறைமொழிகள்.

முனிவர்கள், யோகிகள், ஞானிகள், ரிஷிகள், நிறைமொழி பேசுவர்களாக இருந்தார்கள். இவர்களை "நிறைமொழி மாந்தர்கள்" எனப்பெயர் சூட்டியுள்ளார்கள். நிறைமொழி மாந்தர்கள் நாம் பேசுகின்ற குறைமொழியையே எடுத்துக் கொண்டு நிறைமொழிகளாக மாற்றுகின்ற பேராற்றல் வாய்ந்தவர்கள். அவர்கள் சாதாரணசொற்களைத் தான் எடுத்துக்கொள்கின்றார்கள். அந்த அதிர்வுகளை எடுத்துக்கொண்டு அவர்களை அவற்றை தம்முடைய ஆற்றல் காரணமாக, தம்முடைய சக்தி முழுவதையும் அந்தச் சொற்களில் ஏற்றி "இவை மந்திரங்களாகக் கடவன்" என்று ஆணையிடுவதன் மூலம் அவற்றை மந்திரங்களாக மாற்றுகின்றார்கள். "நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த மறைந்த மொழி" (தொல்காப்பியம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணையிடுதல் என்பது குறை மொழியாக உள்ள எழுத்துக் கோவைகளை சக்தி பெற்ற மந்திரங்களாக மாற்றுவது தான். எல்லாச் சொற்களுக்கும் அதிர்வுகள் உண்டு. இந்த அதிர்வுகள் ஒலிச் சக்தியாகும். அதிர்வுகளை எல்லா எழுத்துகளும் சொற்களும் பெற்றிருந்தாலும் எந்த அதிர்வுகளுடன் எந்த அதிர்வுகளை சேர்த்தால் அவை பயன்படும் என்பதை ஞானிகள் அறிந்திருந்தனர். அப்படி அறிந்து இருந்த காரணத்தினாலேதான் பல்வேறு எழுத்துக்களை ஒன்று சேர்பதன்மூலம், பல்வேறு அதிர்வுகளை ஒன்றுசேர்த்துப் புதியதொரு ஆற்றலை அவை பெறுமாறு செய்கின்றார்கள். அப்படி ஆற்றலைப் பெறுமாறு செய்துவிட்டபின் அவை மந்திரங்களாக மாறிவிடுகின்றன. அதாவது பல இடங்களில் பீஜ அஷரங்கள் பயன்படுத்தப்படும். ஆனால் அவற்றிற்குப் பொருள் இல்லை. ஐம், ஹ்ரீம், க்லீம் போன்ற சொற்களுக்கு பொருள் இல்லாமலும் இருக்கலாம். அவை குறைமொழி மாந்தர்களால் பேசப்படும் பொழுது அர்த்தமற்ற ஒலிக் கூட்டங்களாக மாறிவிடுகின்றன. நிறைமொழி மாந்தர்கள் குறிப்பிட்ட சில அதிர்வுகளை ஒன்றுசேர்க்க வேண்டும் என்று நினைக்கும் போது அந்த அதிர்வுகளுக்குரிய எழுத்துக்களை ஒன்று சேர்கிறார்கள். இப்படியாக உருவாக்கப்பட்டவையே மந்திரங்கள்.

எனவே நிறைமொழி மாந்தர்களாகிய முனிவர்கள், யோகிகளின் அரும் படைப்பான மந்திரங்களைப்பேணி அதன் பயன்களை அனைவரும் பெறுவோம்.

## ஏன் பஞ்சாட்சார ஜெபம் செய்ய வேண்டும்?

ஒரு குடும்பத்தில் இருப்பவர்களுக்குப் பல்வேறுபட்ட பிரச்சினைகள் உண்டு. உதாரணமாக உணவுக்குப் பணம், பெண் கல்யாணம், மகன் படிப்பு, நோய் இப்படிப் பல.

இவர்களுக்கு முக்கியமாக மனநிம்மதி தேவை. மனம் சாந்தியாக இருந்தால் எந்தக் காரியத்தையும் தீர்க்கமாகச் சிந்தித்துச் செயற்பட முடியும். கவலையை மறக்க முடியும். ஆனால் நெஞ்சுக்கு நிம்மதி தேடி தற்காலத்தவர்கள் மது, மாதில் இறங்கி மேலும் தமக்கு அழிவைத் தேடிக் கொள்கின்றார்கள். வான மண்டலத்தை அளக்கும் விஞ்ஞானத்தினால் எந்த வித்திலும் ஏன் மனோதத்துவ ரீதியில் கூட மன அமைதிக்கு வழிகாண முடியவில்லை. ஆனால் எமது சமயம் மிக இலகுவாக மனம் சாந்தி அடைவதற்கு வழி கண்டுள்ளது. திருவைந்தெழுத்து ஓர் பத்து நிமிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிப்படி காலை, மாலை சுவாமியறையில் ஓர் பத்து நிமிடம் வசதிப்படி காலை, மாலை சுவாமியறையில் சென்று ஓர் ஆசனத்தில் அமர்ந்து திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டால் மனம் மிகுந்த புத்துணர்ச்சி பெறும். ஜெபம் செய்யும்பெழுது எமது மூளையில் அதிக மின்காந்த அலைகள் உற்பத்தியாகின்றன. இவை உடம்மின் பல பாகங்களுக்கும் செலுத்தப்படுகின்றன. இதனால் இரத்தோட்டம் அதிகரிக்கின்றது. உடம்பில் உற்சாகம் கரைபுரண்டு ஓடுகின்றது. மனம் புதுத்தெம்புடன் செயற்படுகின்றது. ஆனால் குரு இல்லாமல் அதிக நேரம் தியானம் செய்யக்கூடாது. எதுவும் ஓர் குருவின் நேரடி மேற்பார்வையில் செய்ய வேண்டும். இல்லாவிட்டால் உடம்பில் ஓர் எரிவும் இரத்தக்கசிவும் ஏற்படும். அப்படி ஏற்படும் போது மேலும் அதிகளவில் ஜெபம் செய்ய வேண்டும். இதிலிருந்து நாம் கற்பது என்னவெனில் கண்ணதாசன் கூறியது போல நெஞ்சுக்கு நிம்மதி ஆண்டவன் சந்நிதி தான். இதற்கு தியானமும் ஜெபமும் தான் வழி.

# ஆலய வழிப்பாட்டு தகவல்கள்

## ஏன் ஆசனத்தில் இருக்க வேண்டும்?

குருக்கள், புரோகிதர்கள் மனோசக்தியும் ஆத்ம சக்தியும் நிறைந்தவர்கள். ஏனெனில் இவர்கள் தவறாமல் சந்தியாவந்தனம், சிவபூஜை, ஆசார அனுட்டானங்கள் கடைப்பிடிப்பார்கள். இவர்கள் மந்திரம் கூறும்பொழுதும் ஜெபம் செய்யும் பொழுதும் இவர்கள் மூளையிலிருந்து விசேட அலைகள் உற்பத்தியாகி காற்றில் கலக்கின்றது. இவர்கள் நிலத்தில் அமர்வதால் இவை உரிய முறையில் பயன்படாமல் பூமிக்குள் செலுத்தப்பட்டு விடும். இதனால் இவர்கள் நிலத்தில் அமர்வதால் இவை உரிய முறையில் பயன்படாமல் பூமிக்குள் செலுத்தப்பட்டு விடும். இதனால் இவர்கள் புலித்தோல், மான்தோல் அல்லது ஆசனப் பலகையில் இருந்து காரியம் செய்ய வேண்டும்.

அநேகமானவர்கள் கிரியைகள் செய்யும்பொழுதும் முழு உடம்பும் நிலத்தில் படாதவாறு இருப்பதற்கு வசதியாக புலி, மான் தோல்களைப் பயன்படுத்துகின்றார்கள். தர்பை ஆசனம் கீர்த்தியும், யாகத்திற்குரிய பலகை சம்பத்தையும், வஸ்திராசனத்தில் இருந்தால் வியாதி நீக்கத்தையும், கம்பளத்தில் இருந்தால் சௌக்கியத்தையும், புலித்தோலில் இருந்தால் சர்வசித்தியும் மோட்சத்தையும், மான்தோலில் இருந்தால் ஞானத்தையும் கூர்மாசனத்தில் இருந்தால் போக மோட்சத்தையும் அடைவார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கிரகங்கள் ஏன் வைக்கிறார்கள்?

விக்கிரகங்களை ஐம்பொன் அல்லது கருங்கல்லினால் அமைக்கின்றார்கள். மா இடிக்கும்பொழுது பக்கத்திலுள்ள தண்ணீர் வாளி அதிர்வதை அனைவரும் அவதானித்திருப்பீர்கள். இதேபோன்ற அமைப்பு உடையவையே விக்கிரகங்களும் கருங்கல்லில் ஆண் கல், பெண் கல் என இரண்டு வகை உண்டு. மூலவிக்கிரகத்தை எப்பொழுதும் ஆண் கல்லில் அமைப்பார்கள். இதனை எடுத்துத் தட்டினால் நாதம் உண்டாகும். மூலமூர்த்திக்கு அடியிலுள்ள இயந்திர அமைப்பும் ஓர் ஒடுங்கி போல மேலேயும் கீழேயும் பஞ்சு வைத்து மருந்து சாத்தி இருப்பார்கள். (ஓர் ஒடுக்கி Condenser ஓர் கடதாசி போன்ற உலோகத் தகட்டை இரண்டு கடதாசிகளுக்கிடையில் வைத்து சுருட்டு சுற்றுவது போலச் சுற்றியிருப்பார்கள்) இது அர்ச்சகர் மந்திரம் சொல்லிப் பூசை செய்யும்பொழுது இதற்குள் தெய்வீக அலைகளை ஏற்று அதிர்வதன் மூலம் சேமிக்கப்படுகின்றது. இதுவே பக்தர்களுக்கு அனுக்கிரக அலையாக வெளிவருகின்றது. இதனாற்றான் உருவேற திரு ஏறும் என்று கூறுவார்கள்.

இதேபோன்று எழுந்தருளி விக்கிரக அமைப்பு ஓர் கூட்டு உலோகமாகும். திருவாச்சிக்கு கூர்மையான சுடர்கள் பொருத்தப்பட்டுள்ளதை நீங்கள் அவதானித்திருப்பீர்கள். இவையும் இடிதாங்கி போலத் தொழிற்பட்டு தெய்வீக அலைகளைக் கவர்ந்து விக்கிரகத்திற்குக் கொடுக்கும் பொழுது சாதி அனுக்கிரக அலையாக பக்தர்களுக்கு அருள்பாலிக்கின்றார். இதனால் பக்தர்களுக்கு மனச்சாந்தியும் சுபீட்சமும் கிடைக்கின்றது.

## கோயில்களில் பூக்கள் ஏன் பயன்படுத்துகின்றார்கள்?

கோயில்களில் பூக்கள் வெறும் அழகுக்கு மட்டும் தான் பயன்படுத்துகின்றார்களா? அதனால் என்ன பயன்? சிலர் நாய், பூனை போன்ற சொல்லப்பிராணிகளை வளர்க்கின்றார்கள். அவர்கள் வெளியிற் சென்று வரும்பொழுது அவர்கள் வருகை அறிந்து அவை நன்றி பாராட்டும். அதே போன்ற தன்மை தாவரங்களுக்கும் உண்டு. ஒருவர் ஒரு தாவரத்தை, உதாரணமாக பூக்கன்று, துளசி போன்றவற்றை வைத்து நீர் ஊற்றி வரும்பொழுது அந்தத் தாவரம் அவர்கள் மீது நன்றி பாராட்டும். ஆனால் அவை எமது உணர்திறனுக்கு அப்பாற்பட்ட நுண்மையான அதிர்வுகள் மூலமே வெளிப்படுத்துகின்றன. இதனை நம்மால் உணரமுடியா விட்டாலும் அதனை வளர்த்தவர் வெளியூருக்கு சென்று அங்கு அவருக்குத் துன்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்ந்துவிட்ட சந்தர்ப்பத்தில் அச்செடி சிறிது வாடுதல் மூலம் தனது அன்பைத் திருப்பிச் செலுத்தும். இதனை நன்கு அவதானிப்பதன் மூலம் பார்க்க முடியும்.

இதேபோன்ற தன்மை பூவிற்கும் உண்டு. இதனை 20ஆம் நூற்றாண்டில் நிரூபித்துள்ளார்கள். இதற்கென ஓர் விசேட புகைப்படக் கருவி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒருவரின் கையில் பூவை வைத்திருக்கச் செய்யும்போது அவரின் வித்தியாசமான உணர்ச்சிகளுக்கேற்ப அந்தப் பூ நுண்ணிய அலைகளை உருவாக்கி அனுப்புகின்றது. இதனை மேற்கூறிய கருவி எங்களுக்குப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

இதிலிருந்து அறிவது யாதெனில் நாம் இறைவனுக்கு அன்பாகப் பூக்கள், தோத்திரங்கள் சாத்தி வழிபடும்பொழுது நாம் பேசுவது, பாடுவது, வழிப்படுவது போன்ற நிகழ்வுகள் உடனடியாக நாங்கள் சமர்ப்பிக்கும் பூக்களினால் கிரகிக்கப்பட்டு பிரபஞ்ச முழுமைக்கும் அனுப்பப்படுகின்றது. இது உடனடியாக இறைவன் பாதத்திற்குப் போய்ச் சேருகின்றது.

பூக்களின் வடிவங்களை எடுத்து ஆராயும்பொழுது அவை ஓர் மைக் போல தொழிற்படுவதற்கு வசதியாக அமைக்கப்பட்டுள்ளது புரியும். பெரிய பூக்களில் பாதிரி மிக விசேடமான வடிவம் உடையது. இது சிவபெருமானுக்கு விரும்பிய மலர். எமது வேண்டுதலை இது உடனடியாக கைலையங்கிரிக்கு அறிவித்துவிடும். இவ்வாறே ஒவ்வோர் கிரகங்களுக்கும் ஓர் விசேட பூ, சமித்து, தானியங்களைப் பயன்படுத்தினார்கள். அதாவது வானொலிப் பெட்டியில் அலைவரிசையை மாற்றி கொழும்பு, திருச்சி என்று எடுப்பதுபோல.

குருக்கள் ஐயாவிடம் பணம் கொடுத்து அர்ச்சனை செய்யும் பொழுது உங்களுடைய வேண்டுதல் மந்திரம் மூலம் சொல்லப்படும் பொழுது இப்பூக்கள் ஓர் மைக்காகத் தொழிற்பட்டு பிரபஞ்சத்திற்கு அப்பாலும் அனுப்பப்படும். இதனால் நாம் கோயிலில் செய்யும் வேண்டுதல் நிறைவேறுகின்றது. இதுவரை காலமும் காரணம் தெரியாமல் அர்ச்சனை செய்தவர்கள் இனி இரண்டு மடங்கு பணம் கொடுத்து வேண்டுதல் செய்வார்கள் என நினைக்கின்றேன். பூவிற்கு மந்திரம் சொல்லிப் போட்டால் அப்பூ தொடர்ந்து அறிவித்துக் கொண்டே இருக்கும். இதனால் தான் காதில் எடுத்து பூ வைக்கின்றார்கள். இது மூளைக்குப் பக்கத்தில் இருந்து அதிர்வுகளை உருவாக்குவதால் மனம் சந்தோசமடைகின்றது. இதே காரணத்தால்தான் இறைவன் நாமம் உச்சரித்துக் போடப்பட்ட பூக்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதாவது நிர்மாலியங்கள் காலால் மிதிக்கப்படக்கூடாது என்று கூறுகின்றார்கள். 01-11-1994 இரவு (B.B.C.) ஒலிபரப்பில் "தாவரங்கள் பேசுகின்றன" என்னும் நிகழ்ச்சியில் ஆமணக்கு தாவரம் தண்ணீர் கேட்டு நுண்அதிர்வை ஏற்படுத்திய சத்தத்தை ஒலிப்பரப்பினார்கள். இதை சில நேயர்கள் காதால் கேட்டு இருப்பீர்களென நினைக்கின்றேன். பூக்கள் சாத்தப்படும் பொழுது கவிழ்ந்துச் சாத்தக்கூடாது. சரித்து அதன் முன்பக்கம் நேரடியாகத் தெரியக்கூடியவாறு சாத்த வேண்டும். இதனால் தான் அதிக மந்திரங்களைக் கிரகித்து பிரபஞ்சத்திற்கு அனுப்ப முடியும். இதனால் எங்கள் வேண்டுதல் இறைவனுக்கு தெரிந்து உடனடியாக அனுக்கிரகம் கிடைக்கப்பெறுவோம். அன்பர்கள் இதை உணர்ந்து பயன்படுத்துவார்களாக.

சூரியனுக்கு - சிவப்பு ஆஷதை, சிவப்பு புஸ்பம், முதலியவை உகந்தவை. எருக்கலை சமித்து, கோதுமை தானியம்.

சந்திரன் - வெள்ளைச் சந்தணம், வெள்ளைப் புஷ்பங்கள், உகந்தவை பலாசு சமித்து, பச்சை அரிசி.

செவ்வாய் - இளம் சிவப்பு புஸ்பங்கள், கருங்காலி சமித்து துரை தானியம்

புதன் - மஞ்சள் ஆஷதை, மஞ்சள் புஷ்பங்கள் உகந்தவை, நாயுருவி சமித்து, பயறு தானியம்.

குரு - மஞ்சள் ஆஷதை, மஞ்சள் புஷ்பங்கள், அரசு சமித்து கடலை தானியம்

சுக்கிரனுக்கு - வெள்ளை புஷ்பங்கள், அத்தி சமித்து, தமாச்சை தானியம்

சனி - கருமை புஸ்பங்கள், கரு நீல புஸ்பங்கள், வன்னி சமித்து, எள்ளு தானியம்.

ராகு - கருமை புஸ்பங்கள், கரு நீல புஸ்பங்கள், அறுகம் புல்லு சமித்து, உழுந்து தானியம்

கேது - சாம்பல் நிற புஸ்பங்கள், தர்ப்பை சமித்து கொள்ளு தானியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாவிலை தோரணங்கள், வாழை ஏன் கட்ட வேண்டும்?

கோவில்களில், விழாக்களின் போது ஏன் மாவிலை, தோரணைகள் கட்ட வேண்டும்? வாழை ஏன் கட்டுகின்றார்கள்? இதைச் சற்று ஆழமாகச் சிந்தித்துப் பார்த்தால் எமக்கு ஏன் என்பது புரியும். ஓர் சிறிய மண்டபத்திற்குள் திடீரென ஐந்நூறு, ஆயிரம் பேர் கூடும்பொழுது எல்லோரும் சுவாசிக்கின்றார்கள். இதனால் காற்றோட்ட வசதிகள் குறைந்துள்ள இந்த இடங்களில் உயிர் வாயு அதாவது ஒட்சிசன் பற்றாக்குறை ஏற்படுகின்றது. இதனால் முதலில் நோயாளிகள் மயக்கப்பமடைவார்கள். இதனைத் தொடர்ந்து மற்றவர்களும் பாதிக்கப்படுவார்கள். இதனை முற்காலத்து முனிவர்கள் நன்கு உணர்ந்திருந்தார்கள். இதனால் விழாக்கள் நடைபெறும் இடங்களில் தோரணங்கள் கட்டியும், வாழை, கமுகு முதலியவற்றைக் கட்டியும், மாவிலை தொங்விட்டும் அலங்கரித்தார்கள். அத்துடன் புதிதாக வருபவர் இடத்தை இலகுவில் அடையாளம் காணக்கூடியதாகவும் இருக்கும்.

முக்கியமாக இதனை அறிவியல் ரீதியில் குறிப்பிடும்பொழுது தாவரங்கள் ஒளித்தொகுப்புச் செய்யும் பொழுது காபனீரொட்சைட்டை வளியிலிருந்து பெற்றுக் கொண்டு ஒட்சிசனை வெளிவிடுகின்றன என்பது விஞ்ஞானம் கற்றவர்கள் எல்லோருக்கும் தெரிந்ததே.

மண்டபத்தில் கட்டப்படுகின்ற வாழை, தோரணைங்கள், மாவிலை என்பன ஏனைய தாவரங்களுடன் ஒப்பிடும்பொழுது அதிக நீர்ப்பிடிப்பானவை. இதனால் அவை தாய்மரத்திலிருந்து வெட்டி எடுத்தாலும் வாடும் வரை தொடர்ந்து ஒளித்தொகுப்பில் ஈடுபடும். இதனால் கூட்டத்திலுள்ளவர்கள் விடும் கரியமிலவாயுவை இவை பெற்றுக்கொண்டு ஒட்சிசனை வெளிவிடுகின்றன. இதனால் அந்த மண்டபத்திலுள்ள காற்று சுத்தமடைகின்றது. மண்டபத்தில் உள்ளவர்கள் எந்தவிதப் பாதிப்புமின்றி நிகழ்வில் பங்குகொள்ளக்கூடியதாக இருக்கும். என்னே நம் முன்னோர்களின் நுண்மதி! தோரணங்கள், மாவிலை, கமுகு, கரும்பு, வாழை என்பவற்றைக் கட்டுவதால் விழாவை அலங்கரிப்பது மட்டுமல்லாமல் காற்றை சுத்தப்படுத்தி மக்களைச் சுகதேகிகளாக்குகின்றன. அத்துடன் இவற்றிலுள்ள நீர் நீராவியாகக் காற்றுடன் கலப்பதனால் காற்றிலுள்ள நீராவிச் செறிவைக் கூட்டி மண்டபத்தில் ஏற்படும் சனவெப்பம் தணிவதற்கும் ஏதுவாக இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோயிலுக்குச் செல்லும் பொழுது ஏன் மேலாடையுடன் செல்லக்கூடாது?

நாம் எமது உடலமைப்பை சற்று விரிவாகப் பார்த்தால் அதில் இரத்தம் முக்கிய பங்கை வகிக்கின்றது என்பது தெரியும். இரத்தத்திலே வெண்சீவ அணுக்கள், செஞ்சீவ அணுக்கள் (வெண்குருதிச் சிறுதுணிக்கைகள், செங்குருதிச் சிறுத்துணிக்கைகள்) என இரண்டு வகை உண்டு. செஞ்சீவ அணுவில் இரும்புச்சத்து அதிகமுண்டு. இது சிவப்பு நிறத்தைக் கொடுப்பதற்கும் காரணமாக உள்ளது. இது இரும்புச்சத்தைக் கொண்டுள்ளதால் முக்கிய பங்கை இரத்தத்தில் வகிக்கின்றது. அத்துடன் திரவநிலையில் உள்ளதால் உடம்பின் சகல பாகங்களிற்கும் கொண்டு செல்லப்படுகின்றது. எந்த வைத்தியரிடம் சென்று காட்டினாலும் அவர்களை கண்ணை விரித்துப் பார்த்தும், நாக்கைப் பார்த்தும் ஒருவருக்கு இரத்தச்சோகை வந்துள்ளதா என்பதை அவதானிப்பார்கள். உடனே அவர்கள் செந்தூரம் (முக்கியமாக இரும்பு அதிகமுள்ள) மருந்தையும், ஆங்கில வைத்தியர்கள் இரும்புச்சத்து மருந்துகளையும் (Iron Tonic) கொடுக்கின்றார்கள். இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில் எமது உடலில் இரும்புச்சத்து முக்கிய பங்கை வகிக்கின்றது என்பதாகும்.

எமது உடம்பில் இரும்புச்சத்தும் ஏனைய உலோகச் சத்துக்களும் நிறைந்துள்ளன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. உலோகங்களின் முக்கிய இயல்பு மின்னைக் கடத்துவதாகும். அத்துடன் காந்தத்தால் கவரப்படும்; கதிர்வீச்சால் தாக்கப்படும்; மின்காந்த அலைகளை ஏற்றுக்கொள்ளும் என்பனவும் முக்கியமாகும். நம் முன்னோர்கள் கோயில்களைக் கட்டும்போது மின்காந்த அலை அதிர்வுகள் பரவும் வண்ணம் அமைந்துள்ளது. இதைப்பற்றி பின்னர் விரிவாக ஆராய்வோம்.

நாம் கோயிலுக்குச் செல்லும் பொழுது அங்கு தெய்வீக அலை நிறைந்திருக்கும். மேலாடை உடுத்துச் சென்றால் அவ்வலைகள் உடம்பில் சுவறுதல் குறைவாகவிருக்கம். வீட்டில் பாடும் ஓர் வானொலி அன்ரனாவைக் கையினால் தொடும்பொழுது அதன் சத்தம் அதிகரிப்பதை அனைவரும் அவதானித்திருப்பீர்கள். அதற்கு உள்ள அன்ரனாவுடன் மேலதிகமான அன்ரனா பூட்டியது போல எமது உடம்பு செயற்பட்டு வானொலிப்பெட்டியில் சத்தமும் நிகழ்ச்சித் தெளிவும் ஏற்படுகின்றது. இதிலிருந்து நாம் அறிவது என்னவெனில், எப்படி எமது உடம்பில் வானொலி அலைகள் உறிஞ்சப்பட்டு வானொலிப் பெட்டிக்குச் செலுத்தப்படுகின்றனவோ, அதேபோன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களில் உள்ள தெய்வீக அலை எமது உடம்பால் அதிகளவில் கிரகிப்பதற்கு உதவியாக மேலாடை இல்லாமல் கோயிலுக்குச் செல்ல வேண்டுமென நமது முன்னோர்கள் அறிவுறுத்தியுள்ளார்கள். இதேமாதிரியாக வெளிநாட்டவர்கள் சூரியஒளிக்குளியல் செய்வதும் அதன் மூலம் புற ஊதாக்கதிர்கள் உடம்பால் உறிஞ்சப்படுவதும் எல்லோரும் அறிந்ததே. அப்படியெனில் பெண்கள் என்ன செய்வது? நகை அணியாத இந்துப் பெண்கள் உண்டா? ஆகக் குறைந்தது தோடு, மூக்குத்தி என்பவை இந்த வேலையைச் செய்கின்றன. மிகமென்மையான நரம்புகள் அதிகம் சந்திக்கும் இடங்களில் எல்லாம் அவர்கள் நகை அணிகின்றார்கள். அவை அன்ரனாவாகத் தொழிற்பட்டு அவர்களுக்கும் தெய்வீக அலையை ஏற்றுக் கொடுக்கின்றது. மேற்கூறிய முக்கிய காரணத்தால் ஆண்கள் மேலாடையுடன் கோயிலுக்குச் செல்வது தவிர்க்கப்பட வேண்டும். சால்வையை இடுப்பில் கட்டும்பொழுது அடக்கமும், பணிவும் ஏற்படும். அடக்கமும், பணிவும் உள்ளவன் சிறப்படைவான்.

## வடபுறமாகத் தலை வைத்து ஏன் படுக்கக்கூடாது?

எமது உடம்பில் இரும்புச்சத்து அதிகம் உள்ளதால் ஓர் காந்தமாகவும் தொழிற்படுகின்றது. எமது தலை வடமுனைவாகத் தொழிற்படுகின்றது. எனவே நாம் கண்டிப்பாக வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுக்கக்கூடாது என்று நம் முன்னோர்கள் கூறியுள்ளார்கள். இது விஞ்ஞானக் காந்த விதியுடன் ஒத்துப் போவது இங்கு கவனிக்கப்படல் வேண்டும். அதாவது ஒத்த முனைவுகள் ஒன்றையொன்று தள்ளும் ஒவ்வாத முனைவுகள் ஒன்றையொன்று கவரும் என்று கூறுவார்கள். நாம் அமைதியாகப் படுக்க நினைத்து வடக்குப் பக்கம் தலை வைத்துப் படுத்தால் எமது உடம்பு புவிகாந்த அலைகளால் தாக்கப்பட்டு மூளையில் உள்ள நியூத்திரன்களின் சீரான ஓட்டம் மாற்றமடையும். இதனால் நரம்பு சம்பந்தமான நோய்கள் (மூளைக் கோளாறு) வருவதற்குக் காரணமாகி விடுகின்றது. எனவே தான் வடக்குப்புறமாகத் தலை வைத்து ஒருபோதும் படுக்கக்கூடாது.

## சந்திக்குச் சந்தி கோயில்கள் தேவையா?

ஆம். ஒருவர் ஓர் தீயசெயலில் ஈடுபடும் நோக்கோடு புறப்படுகின்றார் என வைத்துக் கொள்வோம். படலையைத் திறந்து கொண்டு வெளியில் வரும்பொழுது சந்தியில் இருக்கும் வைரவர் சூலத்தைக் காண்கின்றார். அரைவாசிப் பயம் தொடுகின்றது. சிறிது தூரம் தாண்டி நடந்ததும் அரசடிப் பிள்ளையார் அவரைப் பார்த்துச் சிரிக்கின்றார். சற்றுத் திரும்பி நடக்கின்றார். அம்மன் கோயில் தூலலிங்கம் (கோபுரம்) தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குற்றச்செயல் அவரின் மனதை விட்டு அகல்கின்றது. நல்ல மனிதராக தனது பயணத்தைத் தொடர்கின்றார். காவல்துறை மட்டும் இருந்து கடவுள் பயம் இல்லாவிட்டால் என்ன நடக்கும்? நீதிமன்றம், வழக்கறிஞர்கள், காவல்துறை என செல்லும்பொழுது குற்றவாளி தப்பிப்பதற்கு அதிக சந்தர்ப்பங்கள் ஏற்படும். பணம் இருந்தால் எதுவும் செய்யமுடியும் என்கின்ற ஓர் நிலை ஏற்படும். இதனால் யாருக்கும் எத்தீங்கும் செய்வதற்கும் துணிவார்கள். கடவுள் பயம் இருப்பதனால் தான் அதிக குற்றச் செயல்கள் இல்லாமல் இருப்பதற்கு காரணம்.

ஓர் கிராமத்தில் ஓர் கோயில் மட்டும் இருக்கின்றது என வைத்துக் கொண்டால், கலியுகத்தில் அதிக தூரத்தில் உள்ள கோயில்களுக்குச் செல்லமாட்டார்கள். அவர்களுக்கு நேரமில்லை. அப்படி எல்லோரும் சென்றால் பிரயாணக் கஷ்டம், இடப்பிரச்சினை, கோயில்களில் உபயம் செய்யும் பொழுது ஏற்படும் நெருக்கடிகள் உண்டு. உதாரணமாக பத்து நாட்கள் நடைபெறுகின்ற திருவிழாவில் ஓர் கிராமத்திலுள்ள அதிக செல்வாக்கு உள்ளவர்கள் மட்டும் பயன்பெறுவார்கள். பணம் குறைந்தவர்கள் உபயம் செய்ய முடியாத நிலை ஏற்படும். நவராத்திரி, சிவராத்திரி இரண்டும் மிக முக்கியமாக பட்டி, தொட்டிகள் எங்கும் கொண்டாடப்படும் விழாக்களாகும். இவ்விழாக்களில் சிறுவர், சிறுமியர் பங்குகொள்ளும் கலைநிகழ்ச்சிகள் முக்கியமாக இடம்பெறும். ஒரு கோயில் மட்டும் இருந்தால் அனைவருக்கும் சந்தர்ப்பம் கொடுக்க முடியுமா? வசதி குறைந்த பிள்ளைகள் கலையை நினைத்துப் பார்க்க முடியுமா? அவர்குளுக்கு தங்கள் இயல்புக்கேற்ற மேடை அமைத்து தங்கள் பிள்ளைகளின் கலைநிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியுமா?

ஒவ்வொரு சிறிய கோயில்களின் மூலமும் கோயிலில் பணி செய்யும் பலர் பயன்பெற முடியும். சிறிய கோயில்கள் இருப்பதனால் வேலையிலிருந்து களைத்து வருபவர்கள் கூட கால் முகம் கழுவி வீட்டு வாசலில் உள்ள வைரவர் கோயிலுக்கு விளக்கு வைத்து வணங்க முடியும்.

பெண்கள் பிள்ளை வரம் வேண்டி அயலிலுள்ள அரசடிப் பிள்ளையாரையும், வேப்பமரத்தடி அம்மனையும் பல வேலைகளுக்கு மத்தியில் வணங்கிவர முடியும்.

எனவே பல கோயில்கள் கிராமத்திலும், நகரத்திலும் இருப்பதால் ஆன்மீக வளர்வதற்கு உறுதுணையாக நிற்கின்றன. அத்துடன் கலை, கலாச்சாரம் வளர்வதற்கும் கோயில்கள் மிகுந்த பங்காற்றி வருகின்றன. ஆலயங்கள் மௌனமாக இருந்து சமய, சமூகப்பணிபளை மிகச் சிறந்த முறையில் ஆற்றி வருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன்

எங்கள் குறைகளெல்லாத் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி திருவருள் தருவாய்
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறை விலா அருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியாழன்

குண மிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பரகஸ்பதி வியாழப்பா குரு நேசா
கிரக தோஷமின்றிக் கடாஷித் அருள்வாய்

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுகமிகயீ வாய்
வக்ர மின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மணம் வைத்தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச் செகம் வாழ இன்னருள் தா தா

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா அருவாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத்தேவே கேண்மையாய் ரக்ஷி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ராகுகால துர்க்கா அஷ்டம்

வாழ்வு ஆனவள் துர்க்கா வாக்குமானவள்
வானில் நின்றவள் இந்த மண்ணில் வந்தவள்
தாழ்வு அற்றவள் துர்க்கா தாயும் ஆனவள்
தாபம் நீங்கியே என்னைத் தாங்கும் துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே

உலகை யீன்றவர் துர்க்கா உமையுமானவள்
உண்மையானவள் எந்தன் உயிரைக் காப்பவள்
நிலவில் நின்றவள் துர்க்கா நிந்தையானவள்
நிலவி நின்றவள் எந்தன் நிதியும் துர்க்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே

செம்மையானவள் துர்க்கா செபமுமானவள்
அம்மையானவள் அன்புத் தந்தையானவள்
இம்மையானவள் துர்க்கா இன்பமானவள்
மும்மையானவள் என்றும் முழுமைதுர்க்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே

உயிருமானவள் துர்க்கா உடலுமானவள்
உலகமானவள் எந்தன் உடமையானவள்
பயிருமானவள் துர்க்கா படரும் கொம்பவள்
பண்பு பொங்கிட என்னுள் பழுத்த துர்க்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துன்பமற்றவள் துர்க்கா தூரிய வாழ்பவள்
துறையுமானவள் இன்பத் தோணியானவள்
அன்பு உள்ளவள் துர்க்கா அபய வீடவள்
நன்மை தங்கிட என்னுள் நடக்கும் துர்க்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே

குருவுமானவள் துர்க்கா குழந்தை யானவள்
குலமுமானவள் எங்கள் குடும்ப தீபமே
திருவுமானவள் துர்க்கா திருசூலி யானவள்
திருநீற்றில் என்னிடம் திகழும் துர்க்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே

ராகுதேவனின் பெரும் பூஜை ஏற்றவள்
ராகு நேரத்தில் என்னைத் தேடி வருபவள்
ராகு காலத்தில் எந்தன் தாயை வேண்டினேன்
ராகு துர்கையே ஜெயதேவி துர்கையே
ராகுதுர்க்கையே எனைக் காக்கும் துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே
தேவி துர்கையே ஜெய தேவி துர்கையே





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காயத்ரீ ஸ்லோகங்கள்

## அம்பாள்

கணாம்பிகாய வித்மஹே
மகாதபாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## சுப்ரமணியர்

சடாணனாய வித்மஹே
சத்திகஸ்தாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## மகா விஷ்ணு

நாராயணனாய வித்மஹே
வாசுதேவாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## மகா லஷ்மி

மகாலஷ்மீய வித்மஹே
விஸ்ணுபத்னீய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## சரஸ்வதி

வீணாவாதின்யேய வித்மஹே
புஸ்த்தககஸ்த்தாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## பைரவர்

சுனவாகனாய வித்மஹே
சூலகஸ்த்தாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!

## ஆஞ்சனேயா

ஆஞ்சனேயாய வித்மஹே
விஷ்னு பக்தாய தீமஹி
தன்னோ கௌரி ப்ரசோதயாத்!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன விருத்தி மாலை

### 1. தனலக்ஷ்மி

பொங்கு தனக்கரத்தாள் பொற்புடைய சக்கரத்தாள்
எங்குநலம் தருகின்ற எழிற்கரத்துத் தாமரையாள்
தங்குகின்ற கமலத்தில் தளிரடிகள் தாம்வைத்தாள்
தங்கரத்தால் தண்மைதரு தனமகளே போற்றியம்மா

### 2. ஆதிலக்ஷ்மி

சோதிமிக வுடையாள் சோம்பலற்ற மனமுடையாள்
தாதியரின் புடைசூழத் தாவிவரும் தார்மிகத்தாள்
பூதிமிகு மலரபய பூரணநல் வரதத்தாள்
ஆதியிலும் ஆதியளே ஆதித்திரு போற்றியம்மா!

### 3. தான்யலக்ஷ்மி

எண்கரத்தில் ஏற்புடைய எழிற்படைகள் ஏற்றவளே
பண்புடைய பகவதியே பலகதையும் பெற்றவளே
கண்படைத்த பயனாகக் களிப்படைய வந்தவளே
மண்செழிக்கத் தானியநல் மணிதந்தாய் போற்றியம்மா!

### 4. வீரலக்ஷ்மி

சூலமொடு அபயத்தாள் சூழ்ச்சியற்ற பரதத்தாள்
காலனவன் கால்நடுங்கு கதிர்ஒளியின் சக்கரத்தாள்
நீலத்திரை யமுதத்தாள் நீங்காநற் புகமுடையாள்
மாலவனார் மனமகிழும் வீரத்திரு போற்றியம்மா!

### 5. கஜலக்ஷ்மி

தடாகத் தாமரையாள் தண்மைமிகு தவவடிவாள்
அடாஅத் துயரமதை அழிக்கின்ற அருளடியாள்
விடாநற் றனமழையாள் விளங்கானைத் துதியடியாள்
படாகக் கரியிலர்வாள் பண்ணடிகள் போற்றியம்மா!

### 6. சந்தானலக்ஷ்மி

அன்புடையாள் அறுகரத்தாள் அன்னையிலும் அன்னை யவள்
இன்புடையாள் கேடயத்தாள் இடர்நீக்கு வாளுடையாள்
மன்புகழின் மலர்க்கரத்தே மகவுடனே யாதுடையாள்
சந்தனத்தாய் சந்தானப் பெருக்குடையாய் போற்றியம்மா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 7. விஜயலக்ஷ்மி

வாளுடனே சாரங்கம் வார்புகழின் சுதர்சனமும்
ஆளுடைய கேடயமும் ஆண்டருளும் எண்கரத்தி
நாளுடனே நாற்புகழும் நாரணர்க்குத் தாமளித்த
தாள்மலரும் தனிநெற்றித் தாயேநீ போற்றியம்மா

## 8. ஐஸ்வர்யலக்ஷ்மி

நாற்கரத்து நாயகியாள் நாற்றிசையின் நல்வினையாள்
கார்மேகம் போல் தனத்தைக் காத்திடவே செய்திடுவாள்
நூற்புலவர் தம்முகத்தாள் நூதனத்தின் ஒருவடிவாள்
பாற்பணியும் அயிசுவரியப் பாவையளே போற்றியம்மா!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முருகா வா... முருகா வா...
முருகா வா... ஸ்ரீ முருகா வா...

எட்டுத்திக்கும் புகழ்மணக்கும்
முருகாமலை முருகா
எங்கள் குலம் வாழவைக்கும்
உத்தமனே முருகா
சித்தமெல்லாம் நிறைந்து விட்ட
தத்துவமே முருகா
செந்தமிழால் உந்தன் புகழ் பாடவந்தோம் முருகா

நாம் பாடவந்தோம் முருகா

(எட்டுத்திக்கும்)

## சரணம்

கலியுகத்தின் கொடுமைகளை தீர்க்க வந்த தலைவா //
கந்தன் என்று பேரெடுத்த சுந்தரனே முருகா //
கதிர்காமத் திருத்தலத்தில் கோயில் கொண்ட இறைவா
காவடியில் ஆடவைத்தாய் கற்பமே முருகா
(எட்டுத்திக்கும்)

தென்னைமரச் சோலை கொண்ட ஆலயத்தின் தோற்றம் //
சூழ இந்துமக்கள் வாழும் முருகாமலையாம் //
நாவினிக்க உந்தன் புகழ் பாடி நிற்கும் கூட்டமாம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Sri Murugan Dhevasthanam - Moragahamula

## Trustee Board



| Mr. A. Kanagaraj | Mr. P. Selliah | Mr. P. Palaniappan | Mr. S. Muthiah | Mr. R. Anbalagan |
|---|---|---|---|---|
| Vice President | Treasurer | Hon. Secretary | Hon. President | Vice Secretary |

- Printed By -
VJ GRAPHICS & PRINTS, MATALE.
077-2226949 / 077-6253632

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org